ஆறாவது வருடத்தில் தமிழர் தகவல்

FREE ISSUE

July 2008

# இலண்டன் தமிழர் தகவல்

London Tamil's Information



ஈஸ்ட்ஹேம்
முருகன் கோயில் தேர்
3.08.2008 அன்று


## Thangamma Appakkuddi

(07.01.1925 - 15.06.2008)



மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest


ஆயிரங்காலத்துப் பயிருக்கு ஆண்டாண்டு
பாரம்பரியம் உள்ள தங்க நகைகள்
LAKSHMIS JEWELLERS
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600
Fax : 020 8470 3448



# நீந்துகவே முத்தியின்ப நீழல்!

எங்கள் திருமகளே ஈடிற் கலைமகளே
பொங்கும் புதுப்புனலே பூமகளே – தங்கம்மா
என்னும் தவமகளே இன்பச் சிவத்தமிழே
என்ன இனிச்செய்வோ மே.

சைவப் பணிகளுடன் சார்ந்த தமிழ்ப்பணிகள்
ஐயை அருட்துர்க்கை ஆலயத்தில் – செய்த
திருப்பணிகள் மக்கள் நலப்பணிகள் செய்ய
இருப்பவர்யார் அந்தோ இனி.

ஊருலகம் நன்மைபெற ஊறிநின்ற ஊரணியே
காலைநிலம் கற்றரைகள் காடெல்லாம் – ஏரெனவே
சீராய் உழுது பதஞ்செய்து செம்பயிர்தான்
வேரிடவே வைத்தாய் விதைத்து.

சொல்லால் எழுத்தால் தொடர்தொண்டால் பண்பாட்டால்
வெல்லா மனங்களையும் வென்றன்பு – நல்லாய்ச்
சொரிந்த சிவஞான வித்தகியே துர்க்கா
துரந்தரியே ஆகினையோ சோதி.

ஒன்றே குலமென்றும் தேவன் ஒருவனென்றும்
சென்ற இடங்கள் செலச்சொல்லி – நன்றே
பரந்த மனப்பான்மைப் பக்குவத்தைத் துர்க்கா
துரந்தரியே காத்தாய் துணிந்து.

கண்ணின் ஒளியே கருத்தின் பெருவிருந்தே
பெண்ணின் பெருமைநலப் பேராறே – மண்ணதனில்
துர்க்கை வழிபாட்டைத் தூக்கித் துலக்கியபேர்
நிற்கும் நிலத்தில் நிலைத்து.

தூய தறவறுத்துத் துர்க்கா துரந்தரியே
தாயே தமிழர் தலைமகளே – ஆயபுகழ்
ஆறுமுக நாவலர்பின் ஆன்ற தமிழ்ச்சைவம்
ஏறுபுகழ் எய்தவைத்தா யே.

பாங்கான தெய்வப் பணிகள் பலசெய்த
ஓங்கார ஓசை உறங்கியதால் – தாங்காதே
ஏந்திச் சுடர்விளக்கை என்றும் வணங்கிடுவோம்
நீந்துகவே முத்தியின்ப நீழல்


– வி. கந்தவனம்

# Ayngaran International




1.Film: Muniyandi Vilangiyal Moondramaandu
Cast: Bharath, Thamarai, Vadivelu, Nasser
Direction: Thirumurugan
Music: Vidyasagar
Releases July 2008

ஐங்கரன்
தொலைக்காட்சியில்
கலைஞர் தொலைக்காட்சி
தற்போது இலவசமாக
காண்பிக்கப்படுகிறழ






2.Film:Jeyam Kondaan
Cast: Vinay, Bhavana, Lekha Washington, Vivek, Santhanam,
Direction: R Kannan
Music: Vidyasagar
Release: July 2008

3.Film:Sathyam
Cast: Vishal, Nayanthara, Upendra, Premji Gangai Amaran
Direction: Rajasekhar
Music: Harris Jayaraj
Release: July 2008

4.Film:Dhaam Dhoom
Cast: Jeyam Ravi, Lashmi Rai and others
Direction: Jeeva
Music: Harris Jayaraj
Release: August 2008

5.Film:Kuselan
Cast: Rajini, Pasupathy, Nayantara, Meena, Mamta Mohandas,
Direction: P Vasu
Music: G V Prakash
Release: August 2008

30 High Street, Collierswood
London SW 19 2AB
UNITED KINGDOM
Tel : 00 44 (0) 208 540 1500
Fax : 00 44 (0) 208 543 8400
Email : shop@ayngaran.com


Unit 19, Riverside Business Park
Lyon Road, Wimbledn
London SW19 2RL
UNITED KINGDOM
Tel : 00 44 (0) 208 543 4477
Fax : 00 44 (0) 208 543 4466
Email : sales@ayngaran.com

367 High Street North
East Ham
London E12 6PG
UNITED KINGDOM
Tel : 00 44 (0) 208 471 3111
00 44 (0) 208 471 3133

Ayngaran நான்காவது கிளை

11-13 Ealing Road Wembley Middlesex HAO 4AA


ESTD 1992
SRIKANTH & CO.
Solicitors & Property Business Centre
Solicitors & Estate Agents
Property Sales, Letting & Conveyancing
557 High Road, Wembley, Middlesex HA0 2DW
Tel : 020 8795 0648
Fax : 020 8795 0649 / Mob : 07831 195 979
We also practise in the following areas of LAW:
Immigration
Wills & Probate
Conveyancing - Residential
Conveyancing - Commercial
Londlord & Tenant
Liquor Licensing
Matrimonial / Family
Employment Matter
Consumer Problems
Civil Litigation
Housing Matters
Welfare Matters
Tel : 020 8795 0648 0648


elSe properties ltd
U can Save More where else?
20 C LOAMPIT HILL
LEWISHAM
LONDON, SE13 7SW
T 020 8691 6878
F 020 8626 4575
info@elseproperties.com
www.elseproperties.com


WHITE FIRE UK LTD
The Name of Diamond
உங்களுக்கு ஈடு இணையற்ற வைரத்தை
பிளாட்டினத்திலும், தங்கத்திலும் மற்றும் வெள்ளைத் தங்கத்திலும்
மிக குறைந்த விலையில் அளிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடையும்
WHITE FIRE UK LTD
63, Victoria Road Ruislip Manor
Middx HA4 9BH
Phone : 077 80975142 / 077 69714383


தென் கிழக்கு லண்டனில்
PARTY WORLD U.K
THE BEST DECORATORS
Manavarai (Mandaps) and Hall Decorations
Fresh Flower arrangements & Garlands from India
Printed & Plain Balloons for all events
Food Supply & Food warmers
D J Sound Systems, Live Music & Disco Lights
Photographs, Video,
Wedding Cards & Hall Bookings
Party Cakes, Gift Items & all Party Needs
20, Loampit Hill, Lewisham
London SE13 7SW
Tel : 0208 6949404 Mob : 07961843035
Fax : 0208 6949272
Email : sales@babaspartyworld.com
Web : www.babaspartyworld.com

# யாழ்ப்பாணத்துக் காலை

## சாந்தன்

இரவெல்லாம் ஓடி
இன்னும் முடியாத
வீடியோவில்
எங்கோ
ஒரு பாட்டு.

கோவில் மணி குலைத்த
காக்கைத் தூக்கம்
கலைந்து
எதிரொலிக்கும்.

இவற்றிடையில் -
எத்திசையில்
நாய்க் குரைப்பு
என்று செவிமடுக்கும்.

தலையணை அடியில்
தீப்பெட்டி
தடவிப் பின்
படுக்கை
சுற்றும் கை.

எவர் வீட்டின்
கூரை, கதவு
பூட்டிய படலை

இரவு கழற்றியதாய்
இன்று சேதிவரும்?

இரண்டாயிரம் ஆண்டகல
இன்னும் சரியாய்
இரண்டேதான் இருக்கையிலே
இப்படி விடிகிறது.
எங்கள் காலை
இருளகலாமலே.








மதுரை ஆதீனம் அவர்கள்
லண்டன் சைவ ஒன்றியம் நடாத்தும்
மாநாட்டிற்கு வருகை தர உள்ளார்.
இவர் ஈழ போராட்டத்திற்கு
ஆதரவாக உள்ள ஒரே ஒரு
மடாதிபதி என்பது குறிப்பிடத்தக்கது.

**கறுப்பு ஜுலை**
**கால் நூற்றாண்டில்**

## மடி இன்மை

***குடியென்னும் குன்றா விளக்கம் மடியென்னும்***
***மாசூர மாய்ந்து கெடும்.*** ( குறள் : 601)

சோம்பலாகிய இருளானது நெருங்க, ஒருவனுடைய குடியாகிய மங்கா விளக்கு மங்கி அணைந்து விடும்.

***மடியை மடியா ஒழுகல் குடியைக்***
***குடியாக வேண்டு பவர்.*** ( குறள் : 602 )

தம் குடியை மேலும் சிறந்த குடியாக வேண்டுமென விரும்புவோர், சோம்பலை அறவே ஒழிக்க வேண்டும்.



**மாதமிரு திருக்குறள்**
**கற்போம்**

# தமிழர் தகவல் Tamils' Information

திருவள்ளுவர் ஆண்டு 2039
சர்வதாரி – ஆடி
மலர் : 06
இதழ் : 61
ஜூலை 2008

" பெருமைக்குமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்." – குறள்

## அந்த 23 நாட்களும்

வாரத்துக்கு இருமுறை யாழ்ப்பாணத்துக்கு தொலைபேசி மூலம் ஆறு திருமுருகன் அவர்களிடம் தொடர்பு கொள்வது வழக்கம். தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் போது ஆம், சோதி அண்ணை சொல்லுங்கள் என்று சந்தோஷமாக பதில் கிடைக்கும். மே 25ஆம் தேதி திருவண்ணாமலையில் நின்றபோது நான் தொலைபேசி மூலம் அவரிடம் தொடர்பு கொண்டேன். மிகவும் சோர்வாக அவரிடம் இருந்து பதில் வந்தது. தங்கம்மா அம்மாவை இன்று காலை மருத்துவமனையில் சேர்த்துள்ளேன் மிகவும் துயரமாக இருக்கிறது, திருவண்ணாமலையில் கடவுளை பிரார்த்தனை செய்யும்படி என்னிடம் சொன்னார். 26 காலை மீண்டும் தொடர்பு கொண்டேன். அதே பதில். 27ஆம் தேதி சென்னையில் இருந்து தொடர்பு கொண்டேன். அம்மாவை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்த்துள்ளதாக செய்தி சொன்னார். 28ஆம் தேதி தமிழர் தகவல் அச்சுக்குப் போகும்போது மீண்டும் தொலைபேசியில் அவரிடம் தொடர்பு கொண்டேன். அம்மாவுக்கு Kidney Failure ஆகிவிட்டது. பேச முடியாத நிலையில் இருக்கிறார் என்று சொன்னார். இதை தமிழர் தகவலில் பெட்டிச் செய்தியாக அம்மாவுக்கு பிரார்த்தனை செய்யும்படி ஒரு வேண்டுகோள் விடுத்து குறிப்பு எழுதினேன்.

29ம் தேதி தொடர்பு கொள்கிறேன் அவர் இல்லை. அவரின் சகோதரர் தொலைபேசியில் பேசினார். அம்மா அதேவிதமாகத்தான் இருக்கிறார், அண்ணன் ஆஸ்பத்திரிக்கு போய்விட்டார் என்றார். 30ம் தேதி தொடர்பு கொண்டேன். திருமுருகனின் தாயார் சரஸ்வதி அம்மா தொலைபேசியில் தழுதழுத்த குரலில், சோதி அம்மாவுக்கு அதே விதமாகத்தான் இருக்கிறது மகன் ஆஸ்பத்திரிக்கு போய்விட்டார் என்று கூறினார். 31ஆம் தேதி நான் பாண்டிச்சேரியில் இருந்து தொடர்பு கொள்கிறேன். அதே பதில். ஜூன் முதல் தேதி பிரதோஷ விரதம் காரணமாக நான் தஞ்சாவூரில் நிற்கிறேன்,தொடர்பு கொண்டேன். திருமுருகன் கவலையாக, பேச்சு மூச்சு இல்லாமல் அம்மா அதே விதமாகத்தான் இருக்கிறார், என்று செய்வது என்று தெரியாமல் திகைக்கிறேன் என்றார். 2ஆம் தேதி காலை சென்னையில் இருந்து தொடர்பு கொள்கிறேன். திருமுருகனின் தாயார் சரஸ்வதி அம்மா, தங்கம்மா அம்மா அதே விதமாகத்தான் இருக்கிறார் தம்பிப் பார்க்கப் போய்விட்டார் என்றார். 3, 4, 5, 6, 7ம் தேதி வரையில் தினமும் இதே பதில். 8ஆம் தேதி காலை சென்னை ஏர்போர்ட்டில் இருந்து பேசுகிறேன்.டாக்டர்கள் எதுவும் சொல்வதற்கில்லை என்றும் 10 நாட்களாக சாப்பாடும், தண்ணீரும் இல்லை. மூச்சு மட்டும் குழாய் மூலம் சென்றுகொண்டிருக்கிறது என்றார்.

9ஆம் தேதி லண்டனில் இருந்து தொலைபேசியில் தொடர்பு கொண்டேன் அதே பதில். 10ஆம் தேதி தொடர்பு கொண்டேன் அம்மாவுக்கு முகம் வாடிவிட்டது, நன்றாக மெலிந்து விட்டார் அவரைப் பார்க்கக்கூட முடியாத நிலையில் இருக்கிறேன் சோதி என்றார். 11ஆம் தேதி தொடர்பு கொண்டபோது காலையில்தான் போய்வந்தேன் ஒன்றும் சொல்வதற்கில்லை என்றார். 12ஆம் தேதி இரவு 7 மணிக்கு தொடர்பு கொண்டேன். இரவு 7 மணிக்கு ஊரடங்கு, ஆகவே 5 மணிக்கே அம்மாவைப் பார்த்துவிட்டு ஏழு மணிக்கு வந்து வந்துவிட்டேன் அதே நிலைதான் என்று கூறினார். 13ஆம் தேதி தொடர்பு கொண்டேன். டாக்டர்கள் கைவிரித்து விட்டார்கள் 48 மணி நேரம் கெடு கொடுத்துள்ளார்கள் என்றார். 14ஆம் தேதி தொடர்பு கொண்டேன். அவர்கள் சொன்ன 48 மணி நேர கெடு முடிந்துவிட்டது என்ன செய்வது என்று எனக்கு தெரியவில்லை என்றார். 15ஆம் தேதி அந்த துயரச் செய்தி. தங்கம்மா அம்மா அன்று காலை 6 மணிக்கு தெய்வமாகி விட்டார். அம்மாவை ஆஸ்பத்திரியில் இருந்து தெல்லிப்பழைக்கு எடுத்துச் செல்கிறார்கள் என்று திருமுருகனின் தாயார் சரஸ்வதி அம்மா கூறினார். இந்தத் துயரச் செய்தியை லண்டனில் உள்ள எல்லா கோவில்களுக்கும் மற்றும் பிரமுகர்களுக்கும் தொலைபேசி மூலம் கூறினேன். 15ஆம் தேதி இரவு தெல்லிப்பழையில் தொடர்பு கொண்டேன். அம்மாவுக்கு தேர் ஒன்று சுடுகாட்டுக்கு எடுத்துச் செல்வதற்காக வேலைகள் நடந்து கொண்டிருக்கிறது சோதி என்று கூறினார். 16ஆம் தேதி அவரது இறுதி கிரியைகள் நடந்தேறின.

முகவரி :
41, HADDINGTON ROAD,
BROMLEY,
KENT BR1 5RG, U.K.

தொலைபேசி :
020 8480 2836

Email :
jothy5@yahoo.co.uk

வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
இலண்டன்
Thirumurugan Arivagam
London

ஆசிரியர் :
அரவிந்தன்
Editor :
Aravindan

கணினி, அச்சுப்பதிப்பு :
கமலா ஆர்ட்ஸ்

Computer Layout :
Kamala Artz

படைப்புகள்
ஆக்கியோரின்
உரிமைகளே

4000 பிரதிகள்



# வையகம் பயனுற வாழ்ந்தவர்

மூன்று வருடங்களுக்கு முன் நடந்த சம்பவம் அது. ஆவணி மாதம். தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலயத்துக்குச் சென்றிருந்தேன். அங்கு போகும்போதெல்லாம் இயன்ற நன்கொடை வழங்குவது என் வழக்கம். அன்றும் அவ்வாறே கோயில் வாசலிலுள்ள அலுவலகத்துக்குச் சென்றேன். அங்கு கடமையில் இருந்த அன்பர் திரு.சிவபாலன் அவர்கள் என்னை அன்னதான மண்டபத்துக்குப் போய் அம்மாவைப் பார்த்து வாருங்கள் என்றார். அங்கே பலநூறு அன்பர்கள் உணவு அருந்தவென வரிசையாக நிற்கிறார்கள். கொழுத்தும் வெய்யில். அம்மா அவர்கள் ஒரு நாற்காலியில் இருந்தபடி நடப்பவைகளைக் கவனித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

வரிசையில் ஓர் இளம்பெண் கையிலே சிறுகுழந்தையுடன் நிற்கிறார். அவரை யாரும் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. அவரவர் பாட்டில் முண்டியடித்துக் கொண்டு நிற்கிறார்கள். இதைக் கவனித்த அம்மா, குழந்தையோடு ஒருவர் கஷ்டப்படுவது கண்ணுக்குத் தெரியவில்லையா? என்று கேட்டபடி அந்தப் பெண்ணை முன்னுக்கு அழைத்து உணவளிக்கத் தொண்டர்களுக்கு ஆணையிடுகிறார். அன்பும் பண்பும் பாசமும் கலந்த அவரின் செயலைக் கண்டபோது என் நினைவுக்கு வந்த திருக்குறள்

இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல் என்பது.

இந்தத் திருக்குறளை இறைவனும் படித்திருக்க வேண்டும். இதனாலேதான் தெல்லிப்பளையிலே பலரும் பயனுறும் வகை அங்கு சேவை செய்ய அம்மாவை இறைவன் பணித்தாரோ என்று எண்ணினேன். அந்த இறைவனுக்கு நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டவர்கள்.

சிறுவர்களுக்குக் கல்வி, பெண்களுக்கு ஆதரவு, இளம் வயதினருக்கு நல்வழி காட்டல் என்று அம்மையார் செய்த சேவைகள் அளப்பல. அவரின் நேர்மை, நாணயம், போன்ற பண்புகளைக் கண்டு அவரின் தொண்டுக்கு தாமாகவே வந்து தனம் கொடுத்தவர்கள் பல்லாயிரம்.

ஆசிரியராக, சொற்பொழிவாளராக ஆரம்பித்து, காலகதியிலே தொண்டராக, பலருக்கும் நிழல் கொடுக்கும் கல்லால விருட்சமாக அவர் பரிணமித்தார். ஸ்ரீதுர்க்காதேவி ஆலயத்தின் அறங்காவலராக ஆனதிலிருந்து அவருடைய தொண்டு நிறைந்த துறவு வாழ்க்கை அலைகடல் கடந்து அவருக்கு மதிப்பையும் புகழையும் தேடித்தந்தது.

கதியற்ற பிள்ளைகளுக்கும், பதியற்ற பெண்களுக்கும், நிதியற்ற ஏழைகளுக்கும் தாயாக, தந்தையாக, குருவாக விளங்கிய அன்னை இன்று தெய்வமாகிவிட்டார். அவர்தம் பெருமை சொல்லவும் பெரிதே.

**க. ஜகதீஸ்வரன்**

நன்றி – கலசம்



சிங்கம் தமிழ்க் கடை
RED LION WINE
Tel: 020 8297 8778
இலங்கை இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் உடன் மரக்கறி
மீன் வகைகள் பழ வகைகள் மற்றும் அனைத்து மளிகைப்
பொருட்களையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள
நாட வேண்டிய இடம் - சிங்கம் தமிழ்க் கடை
இது ஒரு புதிய உதயம் (வாகனத்தரிப்பிட வசதியும் உண்டு)
184 Hithar Green Lane Lewisham London SW13 6QA




தமிழ் சஞ்சிகைகள்
யாவும் 30 Pமட்டும்
குமுதம்
ஆனந்த விகடன்
குங்குமம்
தமிழர் தகவல் இலவச இதழை
எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்




தாயகம் தேசியம் தன்னாட்சி எனும் தமிழர் கோட்பாட்டை
மீண்டும் உலகிற்கு பறைசாற்ற பொங்கு தமிழாய் பொங்கி எழுவோம்
12-07-2008
சனிக்கிழமை
பி.ப. 3 மணி
Richardson Evans
Playing Fields
Roehampton Vale
London SW15 3PQ
பொங்கு தமிழ்
2008
078 5378 5660, 075, 0858 0439
079 4376 7470, 079, 8379 5492
075 0248 1653, 075, 0890 2008

அட்டையில்



அம்மா அம்மா எம் தாயே ! ஆறுதல் தந்தெமைக் காப்பாயே !

என்ற பாடல் அடியவர்களும், அம்மா வளர்த்த பிள்ளைகளும் கண்ணீர்மல்கப் பாடிய வண்ணமாக வலம் வர தெல்லிப்பழை கட்டுப்பிட்டி மயானத்தில் அக்கினிச் சுவாலையோடு அம்மாவை விட்டு வந்த காட்சி அகத்தை வருத்துகிறது. ஆலய வீதி வெறிச்சோடிக் காணப்படுகிறது. திருமுறை மடத்துக்கு முன்னால் அம்மா தினமும் அமரும் கதிரை அம்மாவின் வருகைக்காகக் காத்திருக்கிறது. யாழ் போதனா வைத்தியசாலை சத்திரசிகிச்சைக் கூடத்தில் என்னுடன் கதைத்த இறுதி வார்த்தைகள் இதயத்தை வருத்துகிறது – என் செய்வோம்! மேடையில் பேசும் தத்துவங்கள் அநுபூதியாகின்றபோது எம்மை நாம் உணர முடிகிறது. எனது சிறுபிராயம் முதல் என் தாய், தந்தை கைப்பிடித்து வணங்கச் செய்த நடமாடும் தெய்வம் அம்மா. இறுதி மூச்சுள்ளவரை தன் பிள்ளையாக வளர்த்தெடுத்த தெய்வம். கடந்த பதினான்கு ஆண்டுகளாக எனது மதிய உணவை தானே பரிமாறி சிறுபாலகனாகப் பராமரித்தார். இன்றைய எனது வளர்ச்சிக்கு, வாழும் வழிகாட்டிய உத்தமகுரு. உலகம் போற்றும் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாகுட்டியின் பிரிவு உலை வருத்துகிறது என வரும் ஒவ்வொருநாள் விளம்பரமும் கண்டு அழுகிறோம். நிரப்பமுடியாத இடைவெளி அம்மாவின் அறிவுக்கு, ஆளுமைக்கு, அஞ்சாமைக்கு, அழகுக்கு நிகர் யார்? கல்லில் சிலை வடித்து, ஓவியத்தில் வரைந்து இனி நாம் காணும் அம்மா பேசப்போவதில்லை. தம்பி சாப்பிட்டு இருங்கோ என்று சொல்லப்போவதில்லை. மேடையில் இன்று என்ன நடந்தது என்று கேட்டு என் வர்ணனையை ரசித்துக் கேட்க தன் மேடை அனுபவத்தை பகிர தினமும் அம்மாவும் நானும் நடாத்திய கலந்துரையாடல் ஓய்ந்துவிட்டது. எங்கள் இனிய தெய்வம் காட்டிய வழியில் அவரது பணிகளை ஒன்றுபட்டு செய்வோம் என்ற உறுதியோடு, அம்மா நேசித்த, அம்மாவை நேசித்த அன்பு உள்ளங்களுக்கு எனது இனிய நன்றிகளைக் கூறி அம்மாவை நேசித்த அனைவரும் அவரது நிழலில் வாழ்ந்த எம்மை என்றும் காத்திட வேண்டி அமைகிறேன்.

''யாவர்க்கும் இன்னுரைதானே''

ஆறு. திருமுருகன்

# நிம்மதி என்ன விலை?

## தென்கச்சி சுவாமிநாதன்

வாழ்வில் எல்லோருமே நிம்மதியை விரும்புகிறார்கள். நாடுகிறார்கள். ஆனால் அதுவோ எல்லோருக்கும் கிட்டாமல் நழுவிப் போகிறது.

அப்படியானால் வாழ்க்கையில் நிம்மதியைப் பெறவே முடியாதா? முடியும் எப்படி? அதைத்தான் விளக்குகிறது பின்வரும் கதை.

ஒரு பெரிய அரசர் இருந்தார். அவருக்கு எல்லா வசதியும் இருந்தது. இருந்தாலும் ஒரே ஒரு குறை. அதாவது, வாழ்க்கையில் நிம்மதி இல்லையே என்கிற குறை அவருக்கு இருந்தது.

அரண்மனையில் தினமும் கலை நிகழ்ச்சிகளும் நாட்டியங்களும் நடந்து கொண்டுதான் இருந்தன. இருந்தாலும் அரசருக்கு நிம்மதி இல்லை !

நிம்மதி எங்கே கிடைக்கும் என்று அரசன் தேட ஆரம்பித்தார். அதை அடைவதற்குரிய முயற்சிகளில் தீவிரமாக இறங்கினார்.

நாட்டிலுள்ள தத்துவ மேதைகளையெல்லாம் அழைத்தார். அவர்கள், நிம்மதிக்குரிய வழி என்று பலவிதமான விளக்கங்களை அளித்தார்கள். ஆனால் அவர்கள் தந்த எந்தப் பதிலும் அரசருக்கு திருப்தி அளிக்கக் கூடிய வகையில் இல்லை. எதிலும் திருப்தி பெறாத அரசர் நிம்மதி இழந்து நிதானமில்லாமல் இருந்தார்.

ஒருநாள் அவர் மாளிகையின் உப்பரிகையில் உலாவிக் கொண்டிருந்தார். அச்சமயம் தெருவில் ஒரு பிச்சைக்காரன் மிகவும் உல்லாசமாகப் பாட்டுப் பாடிய படியே சென்று கொண்டிருந்தான். அவன் குரலிலே ஒரு சந்தோஷம். ஒரு பூரிப்பு, நடையிலே ஒரு மிடுக்கு காணப்பட்டது. அவனிடம் கொஞ்சங்கூட கவலையிருப்பதாகவே தெரியவில்லை.

அரசருக்கு அந்தப் பிச்சைக்காரனே, நிம்மதியின் வடிவமாகவே, நிம்மதியின் அவதாரமாகவே தோன்றினான். உடனே அவர் காவலாளிகளை அழைத்து, ''உடனே ஓடிப்போய் அந்தப் பிச்சைக்காரனை இங்கே அழைத்து வாருங்கள்'' என்று உத்தரவிட்டார் !

காவலாளிகள் உடனே ஓடிச் சென்று பிச்சைக்காரனிடம் அரசனின் உத்தரவைத் தெரிவித்தார்கள். ஆனால், அவனோ அரசக்கட்டளை என்று தெரிந்தும் கூட அரண்மனைக்கு வர மறுத்துவிட்டான். ''நான் அரண்மனைக்குள் அடியெடுத்து வைக்க மாட்டேன்'' என்றான். காவலாளிகள் அரசரிடம் வந்து விஷயத்தைக் கூறினார்கள். அதைக் கேட்ட அரசர், ''இப்படியும் ஒரு ஆள் இருப்பாளா?'' என்று ஆச்சரியப்பட்டார். ''சரி! அவன் என்னதான் சொல்லுகிறான்?'' என்று விசாரித்தார்.

காவலாளிகள் மீண்டும் தெருவுக்கு வந்து அரசர் கூறியதை பிச்சைக்காரனிடம் கூறினார்கள். அதற்கு அவன், ''என்னை அரசர் பார்க்க விரும்பினால் அவரே வேண்டுமானால் இங்கு வந்து என்னைப் பார்க்கட்டும்'' என்று சொல்லிவிட்டான்.

காவலாளிகள் அரசரிடம் வந்து பிச்சைக்காரன் சொன்னதைத் தெரிவித்தார்கள். அரசருக்கு பிச்சைக்காரன் மீது கோபம் வரவில்லை. மாறாக, 'இவ்வளவு சுதந்திர உணர்வோடு இருப்பவன் ஒரு சாதாரண ஆளாக இருக்க முடியாது' என நினைத்தார். உடனே அவர் கிடுகிடுவென்று இறங்கி பிச்சைக்காரனிடம் சென்றார்.

''நீ கொஞ்சம் கூட கவலையேப்படாமல் சந்தோஷமாகப் பாடிக் கொண்டு போகிறாயே ! உன்னால் எப்படி இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்க முடிகிறது?'' என்று கேட்டார். ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்? என்று பிச்சைக்காரன் வினவினான்.

''அதற்கில்லை... எனக்கு அரண்மனையில் எல்லா சுகபோகங்களும் இருக்கிறது. இருந்தாலும் என் மனத்தில் நிம்மதி இல்லை. இது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை. இந்த தேசத்திலுள்ள அறிஞர்களை எல்லாம் கேட்டுப் பார்த்துவிட்டேன். அவர்களுக்கும் பதில் தெரியவில்லை. உன்னைக் கேட்டால் தெரியும் என்று நினைத்தேன். அதனால்தான் உன்னைச் சந்திக்க விரும்பினேன். ஆனால் நீ வர மறுத்துவிட்டாயே !'' என்றார் அரசர்.

பிச்சைக்காரன் கடகடவென்று சிரிக்க ஆரம்பித்துவிட்டான். சிரித்துக்கொண்டே அவன், மகிழ்ச்சிக்கும் உங்களுக்கும் தடையாக இருப்பது இந்த மாளிகைதான். இதை விட்டு விட்டு தாங்கள் வெளியே வந்தால் நிம்மதி உங்களைத் தேடிக் கொண்டு வந்துவிடும் என்றான். ''நான் அரசன். எனக்கென்று கடமைகள் உள்ளன. அவற்றை யெல்லாம் விட்டுவிட்டு நான் எப்படி வரமுடியும்?'' என்றார் அரசர்.

''அரசபோகம், நிம்மதி இரண்டும் ஒரே நேரத்தில் கிடைக்க வேண்டும் என்பது முடியாத காரியம். உங்கள் சுகபோகத்திற்கு விலையாகத்தான் உங்கள் நிம்மதியை நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள் ! என்னைப் பாருங்கள்! என்னிடம் எதுவுமில்லை. அதனால் எதுவும் என்னைவிட்டுப் போய்விடுமோ என்ற பயமும் எனக்கில்லை. மிகவும் நிம்மதியாக இருக்கிறேன் என்றான் அவன். இதைக் கேட்ட அரசர் மகிழ்ச்சியடைந்தார். தன்னுடைய மேலங்கியை எடுத்து அவனுக்குப் பரிசாகக் கொடுத்தார்.

அவன் சிரித்துக் கொண்டே, வாங்கமாட்டேன் என்று சொல்லிவிட்டான். ''இதை நீங்கள் கொடுப்பதால் எனக்கு எந்தப் பயனும் இல்லை. அதே நேரத்தில் இதை நான் வாங்கிக் கொண்டால் அடுத்த விநாடியிலிருந்து அதை எப்படிப் பாதுகாப்பது என்ற கவலை எனக்கு வந்துவிடும். அப்புறம் தூக்கம் வராது. நிம்மதி போய்விடும் என்று சொல்லிவிட்டு அந்தப் பிச்சைக்காரன் முன்புபோல் மகிழ்ச்சியாகப் பாடிக் கொண்டே சென்றுவிட்டான்.

அரசருக்கு அப்போதுதான் நிம்மதியின் ரகசியம் புரிந்தது. நிம்மதி எங்கேயிருக்கிறது என்பதை அவர் புரிந்து கொண்டார். அந்த இடத்திற்கு தம்மால் போக முடியாது என்பதையும் அவர் உணர்ந்தார்.

மகிழ்ச்சிக்கும் நமக்கும் குறுக்கே நிற்பவை நமது ஆசைகளும் வசதிகளும்தான். எல்லாவற்றையும் துறந்தவர்களுக்கு, எதையும் எதிர்பார்க்காமல் வாழ்பவர்களுக்கு எவ்விதத் துன்பமும் கவலையும் இல்லை.

நிம்மதி தானாகவே அவர்களைத் தேடி வரும். ●

# வாசகர் கழதம்

தமிழ் பற்றும் இலக்கிய சுவையும் கொண்ட நீங்கள் பல அறிஞர்களையும், பல சஞ்சிகைகளையும் இலண்டனுக்கு அறிமுகப்படுத்தியதால் சுவை மிக்க இலக்கியம்,சமயம் போன்ற பேச்சகளைக் கேட்டு தெளிவு பெற்றோம். இப்பணியோடு நின்றுவிடாது தமிழர் தகவல் என்னும் மாதாந்த சஞ்சிகையை புது முயற்சியாக செய்திகள், கட்டுரைகள், இலக்கிய நயம் கொண்டு வண்ண வடிவத்தில் அமைத்து இலவசமாக வெளியிட்டு விருகிறீர்கள். அத்துடன் நின்றுவிடாமல் 2005ஆம் ஆண்டு பொங்கல் மலரை பேரறிஞர்களின் கட்டுரைகளுடன் 300 பக்கங்களுடன் வெளியிட்டது இலக்கிய உலகில் சாதனை. 5 வருடங்களாக தமிழர் தகவலை தொடர்ந்து வெளியிடுவது மாபெரும் சாதனை. இச்சாதனையைப் பாராட்டி கௌரவ விருது தரவேண்டியது இலண்டன் தமிழ் மக்களின் கடமையாகும். இவ்வேளையில் தஞ்சாவூர் பல்கலைக்கழகமும், டெல்லி தமிழ் சங்கமும் இணைந்து செந்தமிழ் இலக்கிய வேந்தன் என்ற பட்டத்தைத் தந்து ஈழ மக்களை கௌரவப்படுத்தியுள்ளது. அவர்களுக்கும் எமது நன்றிகள்.

தங்களின் இலக்கியப் பணி தொடர வாழ்த்துகிறேன்.

வாழ்க வளமுடன்

நன்றி

செல்வநாயகம் சற்குணானந்தம்
லூசியம்

மதிப்பிற்குரிய தமிழர் தகவல் பதிப்பாசிரியர் ஐயா அவர்களுக்கு வணக்கம்.

நான் கடந்த மாதம் தங்களை சென்னையில் ராம்ராஜ் நிறுவன துவக்க விழாவில் பார்க்க நேர்ந்தது. இதற்கு முன்னர் அறிமுகம் இல்லாததால் தங்களை யார் என்று தெரியவில்லை அப்போது. பின்னர் யதேச்சையாக தங்களது தமிழர் தகவல் ஜூன் மாத இதழைப் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அதில் தங்களது புகைப்படம் கண்டபோது கைநழுவிப்போன எனது வாய்ப்பு குறித்து வருந்தினேன். புத்தகங்களில் நல்ல செய்திகளையும், நல்ல தமிழையும் தேடி பழக்கப்பட்டதால் வழக்கம்போல் தேடினேன். ஆச்சர்யம். ஒவ்வொரு பக்கத்திலும் ஏதோ ஒன்று மனதை திருப்திப்படுத்தியது. மாதமிரு திருக்குறள் கற்போம், தொலைக்காட்சித் தொடர்களால் விளையும் சமுதாய சீர்கேடுகள், தென்கச்சி சுவாமிநாதன் அவர்களின் கரு பொதிந்த குட்டிக் கதை, தத்துவஞானி வேதாத்திரி மகரிஷியின் உறவுகள் மேம்பட, இன்னும் பல... எல்லா பக்கங்களையும் படித்த பின் என்ன விலையில் தமிழனுக்கு இந்த இதழ் கிடைக்கிறது என முன்பக்கத்தை திருப்பியபோது இலவசம் என கண்டு வியந்தேன். இலவசங்கள் மக்களை சோம்பேறிகளாக்கி வரும் இத்தருணத்தில் தமிழ் இலவசமாகக் கிடைப்பதை நினைத்து மகிழ்வுறுகிறேன். தொடரும் தங்களது தமிழ்ப்பணிக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகள்.

அன்புடன்
ப. ரவி
கோயம்புத்தூர்

# துணை

அந்தப் பசெஞ்சர் தாமதமாகப் புறப்பட்டது. இரவு ஒன்பதுக்குப் புறப்பட வேண்டியது. ஒன்பதரைக்குத்தான் அசைந்தது. இரையை அதக்கிய வெங்காணத்தியின் சொகுசும் சோம்பலும் அதன் ஓட்டத்தில் தெரிந்தது.

பதிவு செய்யப்பட்ட அந்தப் பெட்டியில் நானும் அவளும்தான் பயணம் செய்தோம்.

''இஞ்ச... இந்தப் பட்டணங்களிலை. மசமசக்கிற சனங்களில்லை. ஒரு சீவன் கூட எங்களுக்குத் துணையா வரப்படாதா...?''

குறைபட்டுக் கொண்ட எனது துணைவி. தொடர்ந்து கேட்டாள்:

''தஞ்சாவூருக்குப் பிறகு இந்த 'ட்ரெயின்' எங்கை நிக்கும்...?''

''சிதம்பரம்...!''

''சிதம்பரத்திலையாவது எங்கட பெட்டியிலை ஆரன் ஏறுவினமா....?''

''கடவுளுக்குத்தான் வெளிச்சம்''.

''எப்பவும் கடவுளெண்டா உங்களுக்குப்பகிடி... எங்கையாவது முட்டிக் கொண்டு நிக்கேக்கை தெரியும்''.

''அப்ப... பட்டாத்தான் புத்தி வருமெண்டு சொல்லிறை''. நான் மெதுவாகச் சிரித்துக் கொண்டேன்.

அவள் திடீரென ஒதுக்கம் கொண்டு, பேச்சு ஓய்ந்து போனவளாய், மௌனமாக இருந்தாள்.

அடுத்த கணங்களில் பரபரப்படைந்தவள்; காது, கை, கழுத்து, மூக்கு எனப் பளபளத்த நகைகளை எல்லாம் கழட்டி, தனது கைக்குட்டையில் மடித்து, மார்புச் சட்டையுள் பத்திரப்படுத்திக் கொண்டாள்.. கைப்பையில் வைத்துக் கொள்ளவில்லை.



முன்யோசனையுடன் நடந்து கொள்வதில் அவளுக்கு நிகர் அவள்தான்.

முகம் மலர, ''புத்திதான்...'' என்று கூறி, சிரித்தபடி அவளைப் பார்த்துக் கேட்டேன்:

''இதென்ன... இண்டைக்குப் புதிசு புதிசா ஏற்பாடெல்லாம் நடக்குது...''

''இதுவா...? இதெல்லாம் ஒருபாதுகாப்புத்தான்.... மடியில கனமிருந்தா... வழியில'' அவள் பலவீனமாகச் சிரித்தாள்.

'பய உணர்வு அவளை விட்ட பாடில்லை!' என நினைத்துக் கொண்டேன்.

அவளது வாய் சதா எதையோ ஜெபித்துக் கொண்டிருந்தது. 'சாயி நாமமா....? அல்லது காயத்திரி மந்திரமா...?'

நான் எழுந்து பெட்டியில் இருந்த எல்லா மின்விளக்குகளையும் போட்டேன்.

உங்களுக்குச் சரியான விசரப்பா... ! வெளிச்சம் இருந்தா... கள்ளன் வரமாட்டானா என்ன?'

அப்ப கதவுகளை உள்ளாலை பூட்டி விடட்டா...?

உனக்கும்... உந்தக் களிமண் கட்டீக்கை, கொஞ்சம் கிடக்குது என்று கூறுவது போலிருந்தது அவளது பார்வை அவளுக்கே உரித்தான அந்த மிடுக்கும், கீழ்க்கண்பார்வை ஏளனமும் அலட்சியமும் எனது நானை ஆழமாகவே காயப்படுத்தியது.

இப்படியான சந்தர்ப்பங்களிலெல்லாம் நான் மிகவும் நிதானமாகவே நடந்து கொள்வேன். அவள் ஒன்று சொல்ல; நான் பிறிதொன்று சொல்லி, வார்த்தைகள் தடித்து கூர்மை கொள்வதை நான் விரும்பவில்லை.

அவளுக்காக எதையுமே விட்டுக் கொடுத்து, அநுசரித்துப் போகும் எனக்கு, இந்த உணர்ச்சியும் உரசலும் இப்போதைக்கு இங்கு வேண்டாமே என்றிருந்தது.

எனது மௌனம் அவளுக்கு ஒருவகையான பாதுகாப்பு உணர்வை தந்திருக்க வேண்டும்.

அவள் இருந்த சீற்றிலேயே ஒருக்களித்துப் படுத்துக் கொண்டாள். தலையணையாக அவளது கைப்பை இருந்தது.

தலையைத் திருப்பி என்னைப் பார்த்தவள், கோவமா...? எனப்பிரியமாகக் கேட்டாள். அந்தப் பார்வையும் பரிவும் எனது நெஞ்சை நனைத்தது.

அடுத்த நிமிடங்களில் அவளிடமிருந்து லேசான குறட்டை ஒலி வந்தது.

இரத்த அழுத்தம், நீரிழிவு என அலைக்கழியும் அவளுக்குக் கிடைத்த அந்த அமைதியான உறக்கம் எனக்கு ஆறுதலாக இருந்தது.

தனித்து விடப்பட்ட எனக்கு ஏதேதோ நினைவுகள் மனக்குதிரை கைக்கடங்காத மீறலுடன் காற்றில் மிதந்தது.

அவள் அரும்பாய் இருந்தபோதே அவளில் ஒரு மனச்சாய்வும் பட்சமும் எனக்கு ஏற்பட்டு விட்டது. நான் பார்த்துப் பழகிய பெண்களில் அவள் ஒரு தனியள். துடுக்கும், துருதுருப்பும் மிகுந்த வித்தியசமான பெண்.

அவளைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு வெளிறிய குருத்தோலை நெட்டிதான் ஞாபகம் வரும். அவளது அந்த அடர்ந்த புருவங்களும், ஆர்வமூட்டும் பிரியமான கண்களும், கூர்மையான சற்று விடைத்த நாசியும், தீர்க்கமான வட்டமுகமும், மலராய் உதிரும் சிரிப்பும் என்னை நினைவிழந்து பரவசம் கொள்ள வைத்தன.

பட்டணத்தில் இருந்து, அவள் தாயாருடன்தான் எங்கள் வீட்டுப்பக்கம் வருவாள். ஒடிசலான உடம்பை வைத்துக் கொண்டு, பம்பரம்போல அவள் வீடு, வளவு, தோட்டம், துரவு என்று ஒரு சுற்றுச் சுற்றிவர அவளுக்குத் துணையாக நானும் உலாவருவேன்.

அவளுக்கு எங்களூரில் எத்தனை அதிசயங்கள் காத்துக் கிடந்தன !

வெள்ளித் தாரையாய்ப் பாயும் மாரிவெள்ளம். அதில் மின்னலாய் உடலசைக்கும் கச்சல் மாங்கன், கெழுத்தி, அயிரை மீன்கள் பதியங்களில் முகை நெகிழ்த்தி இளங்குருத்தாய்ப் பரவசிக்கும் பயிர்வகைகள் பச்சை வண்ண வயல் தடங்கள், அரசடிக்குளத்தின் எல்லை தொடமுடியாத நீர்ப்பரப்பு, வாழைப் புதர்களிலும் மரவள்ளித் தோட்டத்திலும் பதுங்கி இருந்து பயங்காட்டும் ரகசிய மௌனம் என எல்லாமே அவளைச் சொக்க வைத்தன.

இது மாரிமழையுடன் என்றால், கோடையில் வேறுவிதமான அநுபவங்கள் அவளுக்கு.

தாவாடித்துண்டின் மேற்குச் சாய்வில் நிற்கும் மஞ்சவெண்ணா மரத்தைக் கண்டுவிட்டால், அவ்விடத்திலேயே அவளது கால்கள் பாவிவிடும். என்ன சொல்லி அழைத்தாலும் அவள் அசையமாட்டாள். மரத்தின் கீழாக நட்சத்திரக் குவியலாய்ப் பளீரிடும் வெள்ளைமலர்களை மடிநிறையக் கட்டிக் கொள்வாள். அம்மலர்களின் வாசம் அவளுக்கு நிரம்பப்பிடிக்கும். கோலிய மடியுடன் சட்டையைத் தூக்கிப்பிடித்தபடி நடந்து வரும்போது, ''மணி நிக்கர் தெரியுது...!'' என்று சின்னச் சிரிப்புடன் சொன்னால், ''போடா கள்ளா...'' என்று கடிந்து கொண்டு, உடலை நெளித்துத் தனது சட்டையைச் சரி செய்து கொள்வாள்.

அப்படியே நடந்து, நொச்சிக்காட்டுப் பக்கம் போனால், அவளுக்கு மஞ்சளாய் ஒளி சிந்தும் சப்பாத்திக் கள்ளி மலர்கள் வேண்டும், கருநீலப்பழங்கள் வேண்டும். பழங்களைப் பறித்து சிறிசாயும் பெரிசாயும் உள்ள முட்களை எல்லாம் நீக்கிக் கொடுத்தால், அதை அவள் கடித்துக் குதப்பி உதடுகளும் வாயும் சிவக்கச் சிவக்க சாப்பிடுவாள். அந்த அழகை இன்றெல்லாம் பார்த்தபடி இருக்கலாம்.

சிலுந்தாப் பக்கம் போனால், தப்புத்தண்ணியில் அவளுக்கு நீச்சல் கற்றுத்தரவேண்டும். நீச்சல் கற்றுக் கொடுக்கும் சாக்கில் ஒரு சமயம் அவளது மார்பை நான் தடவிப் பார்த்தேன். அது தட்டையாக இருந்தது. ஏழெட்டு வயது நிரம்பிய ராணிக்கும் ராஜிக்கும் மார்பில் சட்டைக்கு மேலாக ஏதோ கொட்டைப் பாக்களவில் திரண்டிருக்க இவளுக்கு. இவளுக்கு மட்டும் ஏன் எதுவுமே இல்லை.

எனது மயக்கம் அவளுக்குப் புரிந்துவிடும்.

''தவம் கூடாதபிள்ளை... கெட்டபிள்ளை...'' என்று கூறி கூசி ஒதுங்கி விடுவாள்.

அந்தக் கூச்சமும் ஒதுக்கமும் ஒரு சில நிமிடங்கள் தான் நீடிக்கும். அடுத்த சில நிமிடங்களில் நான் எள்ளென்றால் அவள் எண்ணையாகி விடுவாள். அப்படி ஒரு ஒட்டுதலும் பாந்தமும் எங்களிடையே கூடி வரும்.

அவள் சாதாரண தரம் படித்த பொழுதுதான் பெரியவளானாள். என்ன பெரியவள்? அந்த ஓலை நெட்டித்தனம் மாறாமலேயே இருந்தது. பெண்மையின் பொலிவு, திரட்சி, மலர்ச்சி என்று எல்லாவற்றையுமே அவள் எங்கோ தொலைத்துவிட்டதுபோல, என்முன்னே நிற்பாள்.

கால நகர்வில் திசைக்கொருவராய் பிரிந்துவிட்ட நானும் அவளும் சந்தித்ததென்னவோ ஒரு சில ஆண்டுகளுக்குப் பின்னர்தான்.

அன்று எனக்குப் பட்டணத்தில் ஏதோ அலுவல். அலுவல் முடிந்து வந்து கொண்டிருந்த பொழுது, ''தவா...'' என்ற இனிமையான அழைப்பைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். பூபாலசிங்கம் புத்தகக் கடைக்கு முன்பாக அவள்.

முன்னைக்கு அவள் இப்பொழுது சற்று சதைப்பிடிப்போடு இருந்தாள். அந்த ஓலை நெட்டித்தனமெல்லாம் நிரவிய நிலையில், பூசிமெழுகிய பொம்மையின் பொலிவு அவளிடம் இருந்தது. கன்ன உச்சியும் பிருஷ்டம் வரை தழையும் ஒற்றைப் பின்னலுமாய் அவள் அப்ஸரசாக இருந்தாள்.

அவளது அகன்ற ஈரமான கண்களில் ததும்பி நின்ற பரிவும் காதலும் என்னை என்னவோ செய்தது.

''என்ன தவா..? எங்களை எல்லாம் மறந்தாச்சு போலக் கிடக்கு...''

''மறப்பதா... உன்னையா...?''

பேச்சுத் தடுமாற, அவளையே பார்த்தபடி நின்றேன். அப்பொழுது வீசிய மென்காற்று எங்கள் இருவரையும் தொட்டு அளைந்து சென்றது.

எனக்கு அருகாக வந்த அவள், எனது கரங்களை மிகுந்த வாஞ்சையுடன் தனது கைகளில் ஏந்தியபடி கூறினாள்:

''தவா! வாற சனிக்கிழமை வீட்டுப்பக்கம் வாருங்க... உங்களிட்டை எவ்வளவோ கதைக்க வேணும்...''

''வாற சனிதானே... பாப்பம்...''

''ஒண்டும் பாக்க வேண்டாம். கட்டாயம் வாருங்க...'' என்றவள் என்னிடம் விழி அசைத்து, விடை பெற்றுக் கொண்டாள்.

அவள் நடக்கும்போது ஒரு வேகம் இருக்கும். காலில் சக்கரம் கட்டியது போல, அப்பொழுதும் அந்த வேகம் அவளிடம் இருந்தது.

அந்தச் சனிக்கிழமை மட்டுமல்ல. அடுத்து வந்த சனிக்கிழமைகளிலும் நாங்கள் இருவரும் சந்தித்துக் கொண்டோம்.

எங்களிடையே ஏற்பட்ட அந்த நெருக்கமும் நெருடலற்ற இதமான ஈர்ப்பும் அவளை எனது இனிய துணையாக்கியது.

இருபது வருஷத்துக்கு மேலான தாம்பத்தியம் எங்களுடையது.

அந்த உறவின் இனிமையை, இங்கிதம் நிரம்பிய பிணைப்பை அநுசரிப்பை என்னென்பது. உடற்தேவைகளுக்கு மேலாக எங்களிடையே லபித்த ஆன்ம லயமும் இசைவும் பல நூறு வருஷங்கள் வாழ்ந்த சுகத்தை எங்களுக்குத் தந்தது.

ட்ரெயினின் சீரான அசைவில் கண்ணயர்ந்தாள். விழித்துக் கொண்டாள்.

வெளியே மின் விளக்குகள் ஒளிப்பொட்டாக நடுங்கின.

பெட்டியின் ஜன்னல்களை லேசாக நான் திறந்துவிட்டேன். ஜன்னல்கள் நீக்கலால் உள் நுழைந்த காற்று, அவளை ஈரப்படுத்திச் சென்றது. ''குளிருதப்பா...'' என்று நடுங்கியவள், சேலைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டாள்.

''என்ன... சிதம்பரமா..? வந்திட்டதா...?'' கேட்டபடி எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

சிதம்பரத்தில் வண்டி தரித்து நின்றபொழுது, இவள் கழுத்தை வெளியே நீட்டி, 'ப்ளாற்போர்மை'ப் பார்த்தாள். சனசந்தடி இருந்தது சிலர் அடித்துப் பிடித்துக் கொண்டு வண்டியில் ஏறவும் செய்தார்கள். ஆனால், எங்களது பெட்டியில் மட்டும் ஒருவரும் ஏறவில்லை.

அது அவளுக்கு ஏமாற்றமாயிருந்திருக்க வேண்டும். கவலையுடன் என்னைப் பார்த்தாள்.

அவள் முகத்தில் பயம் உறைந்த நிலையில் இருந்தது.

''பயப்பிடாதை மணி நானிருக்கிறன்..''

''உங்க துணை மட்டும் போதுமா..?''

''உன்ரை கடவுளையும் நினைக்கிறது.''

''அதென்ன உன்ரை கடவுள்.. உங்களுக்கு இல்லையா...?'' என்று சிரித்தவள், தொடர்ந்து கூறினாள்.

''இந்த உடம்பு நோயின்ரை கூடாரமாப் போச்சு. ஒண்டுமே வேண்டாமெண்டு இருக்குது.. எல்லாத்தையும் அவன்ரை அந்தப்பரம்பொருளின்ரை காலடியிலை போட்டிட்டு, பட்டென போயிட வேணும்போலை கிடக்கு...''

''ஐம்பது வயசு கூட ஆகேல்லை... அதுக்குள்ள சுடலை ஞானமா...?''

''அதில்லையப்பா.. தெய்வங்களிட்டை உள்ள பிடிப்பும் பற்றுதலும் இந்த மனிசரிட்டை ஏற்படுகுதில்லை...''

''என்னிடமுமா...?''

''நீங்க என்ன கொம்பனா...?''

''இல்லை இல்லை உன்ரை கடவுள்தான் பெரிய கொம்பனாக்கும்...''

எனது குரலில் இழைந்த ஏளனமும் சீண்டலும் அவளுக்கு எரிச்சலூட்டியிருக்க வேண்டும்.

''எதுக்கெடுத்தாலும் உங்களுக்குக் கடவுளெண்டு வந்தா, குத்தலும்... குதர்க்கமும்தான்...''

''இல்லை மணி... உனக்கு ஆறுதலா இருக்குமெண்டா... கடவுளைக்கும்பிடு. நல்லாக்கும்பிடு. கும்பிடுறதிலை பிழையில்லை. இந்தக் கடவுள் பக்தி எல்லாமே மனசை அழுத்தும் துயரங்களுக்கு ஒரு வடிகால் மாதிரி... அவ்வளவுதான். மனித மனம் தன்னை இழந்து தப்பித்துக் கொள்ள பல விஷயங்களிருக்கு. கலைகள், இலக்கியங்களெண்டு இல்லையா..? அதுபோல கடவுளைக் கும்பிடுறதும் ஒண்டு காலாதி காலமா... மனித மனசுக்கு ஒத்தடம் கொடுக்கிற விஷயம் இதென்பதை ஒத்துக் கொள்ளிறன். ஆனா அதுக்கு மேலாலை எதையுமே நாம யோசிச்சுக் குழம்பக்கூடாது.''

''நீங்களும் உங்கடை சித்தாந்தமும்.. போதும். போதுமப்பா உங்கடை பிதற்றல்.. கேக்க முடியேல்லை. நாராசமாய் இருக்கு...''

இரு காதுகளையும் அவள் இறுக்கமாகப் பொத்திக் கொண்டாள்.

அவள் கண்கள் உமிழ்ந்த வெம்மை என்னைத் தகித்தது. என்னால் தாள முடியவில்லை. நிலை குலைந்த நான், அவளை ஆதரவாகப் பார்த்தேன். எனது பேச்சு அவளைக் காயப்படுத்தி, உணர்ச்சிப் பிழம்பாக ஆக்கி இருந்தது. எனக்கு அது பயம் தருவதாக இருந்தது.

கைகளும் கால்களும் வசமிழந்து சோர்ந்த நிலையில் அவள் இருக்கையில் சாய்ந்து கொண்டாள்.

''எனக்கு என்னவோ செய்யுதப்பா.. நெஞ்சுப் படபடப்பு. அதிகமா இருக்கு.. இதென்ன இப்பிடி வேர்க்குது.. இதுதான் மரண வேர்வையா...?''

திடீரென எழுந்து அவளைத் தாங்கிக் கொண்டேன்.

''மருந்துக் குளிசை எல்லாம் போட்டனியா...?''

''ம்...'' மிக மெலிதாக முனகினாள்.

அவளது உடலில் வேர்வை ஆறாகப் பெருகியது அவளது உடலை துவாயலையால் நன்றாய்த் துடைத்து விட்டேன்.

சோர்ந்து கண்களை மூடி இருந்தவள், விழித்து என்னைப் பார்த்துக் கூறினாள்:

''நான் கெதியிலே முடியத்தான் போறன் போலைக் கிடக்கு. உங்களை நினைச்சாத்தான் பாவமா இருக்கப்பா.. நீங்க தனிச்சுத் தவிக்கப் போறயள்...''

''சும்மா அசட்டுப் பிசட்டெண்டு பேசாதை. எல்லாம் சரியாப் போயிடும். சென்னை போன கையோடை ஒரு ஃபுல் மெடிக்கல் செக்கப் செய்ய வேணும்...''

''சரி... செய்தாப் போச்சு.''

''இந்த வருசத்தோடை கோயில் குளம் எண்டு இனிப்புப் அலையேலாது மணி, ஊருக்குப் போறது தான் புத்தி.''

''எங்கை போகாட்டிலும் திருவண்ணாமலைக்குப் போய் தீபம் பாத்திட்டுத்தான் ஊருக்குப் போகவேணும். இன்னுமொரு தரம் வர இந்த உசிர் இருக்குமோ தெரியாது.''

''உசிரிருக்கும் பயப்படாதை மணி.''

எனது கரங்களை அன்பாகப் பற்றியவள். ''என்னை அணைத்தபடி இஞ்சை பக்கத்திலை இருங்கப்பா. சதிரம் பதறுது. சன்னி கண்டதுபோலை உள்ளாலை குளிர் வேற இருக்கு...'' என்றாள்.

அவளது விருப்பப்படியே அவளை அணைந்து சிறிது நேரம் இருந்த நான், அமிர்தாஞ்சன் ஸ்ராங்கை எடுத்து அவளது நெற்றிப் பொட்டிலும், கன்னத்திலும் மார்பிலும் நன்றாகத் தேய்த்துவிட்டேன்.

எனது கைகளிலிருந்து விடுபட்ட அவள் மீளவும் இருக்கையில் ஒருக்களித்துப் படுத்துக் கொண்டாள். அவளது மெல்லிய மூச்சொலி என்னை ஓராட்டியது. நானும் அயர்ந்து தூங்கினேன்.

புலரியின் சிவந்த சிரிப்பு என்னை விழிப்புக் கொள்ள வைத்தது. எழுந்து உட்கார்ந்து கொண்டேன்.

அவளும் விழித்தெழுந்து தலைவாரிக் கொண்டிருந்தாள். ஏனோ அவளது கண்கள் பனித்திருந்தன. அதில் எத்தனை பாவங்கள் கொட்டிக் கிடந்தன. பழசெல்லாம் அவளது ஞாபகத்துக்கு வந்திருக்க வேண்டும். அவளது நெற்றியில் துளிர்த்திருந்த வியர்வையை மெதுவாகத் துடைத்து விட்டேன்.

அப்பொழுது அவளது உலர்ந்த உதடுகள் மலர்ச்சி கொள்ள மென்மையாகக் கூறினாள்.

''நீங்க பக்கத்திலை இருக்கேக்கை.. உந்த கண்ணுக்குத் தெரியாத கடவுளிட்டை ஏன் அலைய வேணுமப்பா.. நீங்கதான் எனக்குக் கடவுள் மாதிரி. கண்ணுக்கு முன்னாலை இருக்கிற கடவுள் மாதிரி.''

''ஒரு எல்லையில் இருந்து இன்னொரு எல்லைக்கு அவளால்தான் போகமுடியும். சற்று முன்னர் இருந்த அவளது மனோநிலை இப்பொழுது மாறியிருந்தது. அதுதான் அவள்.''

நினைவுகள் ஒதுக்கங்கொள்ள... ''தாம்பரம் வந்திட்டுது மணி. சென்னை பக்கத்திலைதான்...'' என்று கூறினேன்

நான் கூறியது அவளுக்குக் கேட்கவில்லை.

ஏதேதோ நினைவுகளில் திழைத்துக் கிடந்த அவள், எனது வலது கரத்தை எடுத்துத் தனது கரங்களால் அழுத்தமாகப் பிடித்துக் கொண்டாள்.

அந்த ஸ்பரிசம் எனக்கும் அவளுக்கும் அப்பொழுது தேவையாக இருந்தது.

## க. சட்டநாதன்

அவர்கள் எழுதிய புதியவர்கள் சிறுகதை தொகுப்பிலிருந்து...

## தஞ்சாவூர் ஸ்ரீ பிரகதீஸ்வரர் கோயில் பிரதோஷ நாட்கள்

| | | |
|---|---|---|
| 16-06-2008 | 26-09-2008 | 08-01-2009 |
| 30-06-2008 | 12-10-2008 | 23-01-2009 |
| 15-07-2008 | 26-10-2008 | 07-02-2009 |
| 30-07-2008 | 10-11-2008 | 22-02-2009 |
| 14-08-2008 | 25-11-2008 | 08-03-2009 |
| 28-08-2008 | 10-12-2008 | 24-03-2009 |
| 12-09-2008 | 24-12-2008 | 07-04-2009 |

# திருக்கேதீச்சரம்

ஈழத்திருநாட்டிலுள்ள புராதன சிவத்தலங்களிலே திருக்கேத்தீச்சரமும், திருக்கோணேஸ்வரமும் வரலாற்றுப் புகழ் பெற்றவை. தேவார முதலிகளின் திருப்பாடல்களினாலே சிறப்பிக்கப்பட்டவை. சிறப்பு வாய்ந்த மரபுகளும், ஐதீகங்களும் கொண்டவை. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றின் சிறப்புவாய்ந்தவை.

திருக்கேத்தீச்சரம் பற்றி விரிவாக அறிதற்கான நம்பகமான வரலாறு மூலங்கள் அதிகம் இல்லாவிடினும், தமிழ், வடமொழி, பாளி, சிங்களம் முதலிய மொழிகளிலுள்ள சில நூல்களும், தொல்லியற் சின்னங்கள் வெளிநாட்டாசிரியர் குறிப்புக்கள் சிலவும் திருத்தலங்கள் பற்றி அறிவதற்கு ஓரளவாவது துணைபுரிகின்றன.

புராதன காலத்தில் இத்திருத்தலம் மஹாதுட்டாபுரம் என அழைக்கப்பட்டதாகவும், அப்பெயரே மாதோட்டம், மாந்தோட்டை, மாந்தை என மருவி வந்துள்ளதாகவும் ஒரு சாரார் கூறுவர். இவ்விடம் புராதன பாளி, சிங்கள நூல்களில் மஹாதித்த, மஹாதித்தபட்டணமாக, மஹாவுடு எனவும் அழைக்கப்பட்டு வந்துள்ளது. மஹாதித்த எனும் சொல் மஹாதீர்த்தம் (பெரிய தீர்த்தம்) எனும் வடமொழிப் பதத்திலிருந்து வந்ததாகலாம். இத்திருத்தலம் பாலாவியின் கரையிலே அமைந்துள்ளது. இத்தலத்திலுள்ள தீர்த்தவிசேடம் தேவார முதலிகளை நன்கு கவர்ந்துள்ளமை குறிப்பிடப்பிடற்பாலது. பௌத்த மரபுகளிலும் இவ்விடம் சைவசமயச் செல்வாக்கு கூடுதலாக உள்ள இடமாகவே கூறப்படுவதும் மேற்குறிப்பிட்ட கருத்தினை மேலும் வலியுறுத்துகிறது. பொதுவாக நோக்கும்போது மாந்தையினைப் புராதன இலங்கையின் முக்கியமான ஒரு துறைமுக நகரமாகவும், திருக்கேத்தீச்சரத்தினை அங்கு விளங்கிய பிரபல்யமான சிவத்தலமாகவும் கொள்ளுதலே பொருத்தமாகும்.

மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்பு வாய்ந்த இத்தலத்திலே கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் சிவபிரான் கேதீசநாதர் எனவும், அவரின் சக்தி கௌரியம்மை எனவும் திருப்பெயர்களால் அழைக்கப்படுவர். திருத்தலம் திருக்கேத்தீச்சரம் எனவும், இங்குள்ள திருத்தீர்த்தம் பாலாவி எனவும் அழைக்கப்படும். இங்குள்ள தலவிருஷம் வாகை, (ஈச(ன்) எனும் பதம் சிறப்பாகச் சிவபிரானையேக் குறிக்கும். அவர் எழுந்தருளியிருக்குமிடம் ஈஸ்வரம் என அழைக்கப்படும்.

தமிழகத்திலுள்ள பிரதான கோயில்கள் சிலவற்றிற்குப் போன்று திருக்கேத்தீச்சரத்திற்கும் பழைய புராணம் ஒன்றிருந்திருக்கலாம். சேர்.பொன். இராமநாதன் இதன் சிறப்புக்கூறும் புராணம் ஒன்று இருந்து மறைந்துவிட்டதாக 1887லே இலங்கைவேத்திய சங்கத்திலே ''போக்'' என்பவர் திருக்கேத்தீச்சரம் பற்றி வாசித்த கட்டுரையினை விமர்சிக்கும்போது குறிப்பிட்டுள்ளார். வடமொழியிலுள்ள ஸ்காந்த புராணத்தின் ஒரு பகுதியாம் தக்ஷிணகைலாச மாஹாத்மியத்திலே ஸ்ரீகேதீஸ்வர க்ஷேத்திர வைபவம் என்ற பகுதியிலே திருக்கேத்தீச்சரச் சிறப்புப் பௌராணிகரீதியிலே கூறப்பட்டுள்ளது.

''பெருமைவாய்ந்த தக்ஷிணகைலாசம் என்னும் திருக்கோணாசலத்திலே சிவபெருமான் உமையம்மையாருடன் பிரத்யக்ஷமாக இருத்தலினாலும், மாதோட்டம் எனும் திருக்கேத்தீஸ்வரத்திலும் அடியார்க்கருள்புரியும் நோக்கமாக கௌரியம்பிகை நேத்திரானந்தம் கொள்ளப்பஞ்சகிருத்ய நடனஞ்செய்து கொண்டிருத்தலினாலும், இவ் இலங்கை 56 தேசங்களிலும் சிறந்ததாகவிருக்கின்றது. இதற்கொப்பான தேசம் பிறிதொன்றுண்டானதுமில்லை. இனி உண்டாவதுமில்லை என முக்காலமும் உணர்ந்த சூதமுனிவர் நைமிசாரண்ய முனிவர்களுக்கு எடுத்துரைத்ததாகக் கூறப்பட்டுள்ளது. மேலும் எவ்வருணத்தினனாயினும், எக்குலத்தினனாயினும் பாலாவித்தீர்த்தத்திலே மூழ்கித் திருக்கேத்தீஸ்வர தரிசனம் செய்வானேல் போக மோக்ஷம் இரண்டையும் பெறுவான். இத்தலத்துக்கிணை புண்ணிய க்ஷேத்திர முன்னுண்டானதும் இனியுண்டாவதுமில்லை'' எனவும் இப்பகுதியிற் கூறப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட நூலினைத் தழுவி சிவஸ்ரீ ச.கு.வைத்தீஸ்வரக் குருக்கள் திருக்கேத்தீச்சரப் புராணம் பாடியுள்ளார்.



மேலும் பௌராணிகமரபிலே ஆதிசேடனும் வாயுதேவனும் புரிந்த கடும் போரின் விளைவாக



பிடுங்கப்பட்டு வெவ்வேறு இடங்களில் விழுந்தனவும், கயிலை மலையின் சிகரங்களுமே திரி கூடமலை, கந்தமாதனம், திருக்கேதீஸ்வரம் ஆயினவெனக் கூறப்பட்டுள்ளது. மேலும் திருக்கேதீச்சரம் தென் கைலாசம் எனவும் கூறப்படும். கேது பகவான் இங்கு சிவபிரானை வழிபட்டுத் திருவருள் பெற்றமையால் இப்பெயர் ஏற்பட்டதெனக் கூறப்படுகின்றது. தேவ சிற்பியாகிய மஹாதுவட்டா இங்கு சிவபிரானையும் கௌரியம்பாளையும் பூசித்துத் திருவருள் பெற்றமை காரணமாக இத்தலம் மஹாதுவட்டாபுரம் என அழைக்கப்படும். இராமன் அகஸ்திய முனிவர் முதலியோர் இங்கு இறைவனை வழிபட்டுத் திருவருள் பெற்றனர். அகத்தியர் முறையே ஒன்பதும், பத்தும் ஆகிய சுலோகங்கள் துதிகளாற் சிவபிரானைப் பாடித்துதி செய்தார். இவற்றுள்ளே பத்து சுலோகங்கள் கொண்ட துதி கேதீஸ்வர தசகம் எனப்படும். இவ்விரண்டும், கேதீஸ்வர அஷ்டகமும் கேதீச்சரம் பற்றிய தேவாரப் பதிகங்களை நினைவூட்டுவன. இவ்வாறு பௌராணிக ரீதியிலே திருக்கேதீச்சரச் சிறப்புகள் பற்றிக் குறிப்பிடலாம்.

மேலும் கேது எனும் பதம் வயல், ஒளி, கொடி முதலிய பல பொருட்படும். திருக்கேதீசரத்தையடுத்து நெல்வயல்கள் பரந்து காணப்படுகின்றன. எனவே வயல் வெளியின் ஒரு புறத்தின் பாலாவி ஆற்றங்கரையிலே வயல்களுக்குத் தலைவனாக – கேதீஸ்வரனாக கேதீச்சரனாக இறைவன் விளங்குகின்றான் எனலாம். இங்குள்ள லிங்கம் ஜயோதி (ஒளிமயமான) லிங்கம் எனவும் போற்றப்படுகின்றது. பொதுவாக சிவலிங்கம் ஒளிமயமானதென்றே பாவனைசெய்து வழிபடப் படுகின்றது. எனவே ஒளிவடிவாக இறைவன் இங்கு விளங்குகிறான் எனவும் கூறலாம்.

மகாவம்சமும், மகாவம்சடீகாவும் திருகோண மலையிலும், வேறிரு இடங்களிலும், இருந்த சிவலிங்கத்தலங்களையும் இலங்கை அரசனான மகாசேனன் (கி.பி 276 – 303) அழித்தான் எனக் கூறுவன. இவனுடைய மகனான ஸ்ரீ மேக வண்ணனின் (303 – 331). ஆட்சிக் காலத்தில் இலங்கைப் பௌத்தர்களின் புனித சின்னங்களிலொன்றான தந்ததாது இங்கு கொண்டு வரப்பட்டதாகத் தந்ததாதுவின் வரலாறுக் கூறும் தாடாவம்சம் கூறுகின்றது. அது கொண்டுவரப்பட்ட காலத்திலே திருக்கேத்தீச்சரத்தில் அழகிய இந்துக்கோயில் இருந்ததாக இந்நூல் குறிப்பிடுகின்றது.

தேவார முதலிகளின் காலத்திற்கு முன்பே இதுவும் தமிழகத்திலே புகழ்பெற்றிருந்தது. எனவே கி.பி 7ம் நூற்றாண்டிலே தமிழகத்திலே வாழ்ந்த திருஞான சம்பந்தரும், 8ம் நூற்றாண்டிலே வாழ்ந்த சுந்தரரும் திருக்கேதீச்சரம் பற்றி ஒவ்வொரு பதிகங்கள் பாடியுள்ளனர். திருநாவுக்கரசருடைய தேவாரம் ஒன்றில் இத்தலம் பற்றிய குறிப்பு ஒன்று உள்ளது. மேற்குறிப்பிட்ட இரு நாயன்மார்களின் பதிகங்களிலே இத்தலத்தின் நீர்வளம், நிலவளம், பொருள்வளம், புனிதத்தன்மை, திருவருட்சிறப்பு முதலியன இடம்பெற்றுள்ளன. திருஞானசம்பந்தரின் பதிகத்திலே திருக்கேத்தீச்சரத் தானைத் தொழப் பழைய வினைகள், பாவங்கள் அற்றுப் போகுமெனக் கூறப்படுகின்றது. சில நேரங்களில் இத்தலத்தின் இயற்கைவளம், அழகு முதலியனவும் சேர்த்துக் கூறப்படுகின்றன. எடுத்துக்காட்டுகளாக

*''கனை கடந் கடிகமழ், பொழிலணி மாதோட்டங்*
*கருதநின்ற கேதீச்சரங் கைதொழக், கடுவினை*
*யடையாவே''* எனவும்

*''வண்டு பண் செயு மாமலர்ப் பொழில் மஞ்ஞை*
*நடமிடுமாதோட்டந், தொண்டர் நாடொறுந்*
*துதிசெய வருளசெய் கேதீச்சரமதுதானே''* எனவும்

*''மாவும் பூகமும் கதலிற நெருங்கு மாதோட்ட*
*நன்னகர்''* எனவும் வந்துள்ளவற்றைக் குறிப்பிடலாம்.

சுந்தரரின் தேவாரப் பதிகத்தில் இவற்றுடன் வெளிநாட்டு வர்த்தகம் பற்றிய குறிப்புகளும் பிறவும் வந்துள்ளன. எடுத்துக் காட்டுகளாக

*''அங்கத்துறு நோயகளடி யார்மேலொழிந்தருளி*
*வங்கம் மலிகின்ற கடல் மாதோட்டநன்னகரிற்*
*பங்கஞ் செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேற்*
*தெங்கம் பொழில் சூழ்ந்த திருக்கேதீச்சரத்தானே''* எனவும்

*மூவரெனவிருவரென முக்கணுடைமூர்த்தி*
*மாவின்கனி தூங்கும் பொழின் மாதோட்டநன்னகரிற்*
*பாவம் வினையறுப்பர் பயில்பாலாவியின் கரைமேல்*
*தேவனெனையாள்வான் திருகேதீச்சரத்தானே''*

எனவும் பாலாவியின் கரைமேல் திடமாவுறை கின்றான் எனவும் வந்துள்ள தேவாரங்கள் குறிப்பிடற் பாலன. ''வங்கம் மலிகின்ற கடல் மாதோட்டம்'' என்று பிறிதொரு தேவாரத்திலும் வந்துள்ளது. இஃது அக்காலத்திலே மாதோட்டம் பல நாடுகளிலிருந்து வந்த கப்பல்கள் வியாபார நோக்கத்திற்காகவும், பிறவுக்குமாக

அங்கு வந்து சென்றமையை புலப்படுத்தும் மாந்தை – மாதோட்டம் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே சமகால உலகிலே புகழ்பெற்ற துறைமுக நகராக விளங்கியமை கிரேக்க ரோம ஆசிரியர் குறிப்புகளாலும், இங்கு கிடைத்துள்ள தொல்லியற் சின்னங்களாலும், பிறவற்றாலும் உறுதிப்படுத்தப்படும்.

அநுராதபுர காலப் பிற்பகுதிக்குரிய சிங்களக் கல்வெட்டுக்கள் மூலம் இலங்கையின் தலைநகராக விளங்கிய அநுராதப்புரத்திலும், தென்கோடியிலுள்ள கதிர்காமத்திலும் வாழ்ந்த பௌத்தர் மத்தியிலும் கேதீச்சரம் பெற்றிருந்த பெருமதிப்பும், சிறப்பும், புனிதத்தன்மையும் தெளிவாகின்றன. அநுராதபுரக் கல்வெட்டில் ஜேதவன தூபிக்கு வழங்கப்பட்ட தானம் ஒன்றினை மீறியவர்கள் மஹாவுது( மாதோட்டம்) எனுமிடத்தில் ஆட்டினைக் கொன்ற பாவங்களை அடைவர்'' எனவும், கதிர்காமக்கல்வெட்டிற் குறிப்பிட்ட விதிகளை மீறுவோர் தொடியிலே (மஹாதீர்த்தத்திலே) பசுக்களைக் கொன்றோரின் பாவங்களை எய்துவர் எனவும் கூறப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் கி.பிபத்தாம் நூற்றாண்டில் இலங்கையின் தலைநகரிலும், தென்கோடியிலும் இத்தலம் புனிதமாகக் கருதப்பட்டமை தெளிவாகும். எச் எல்லாவெல எனும் வரலாற்றிஞர் பௌத்தர்களிலும் பார்க்கச் சைவர்களுக்கே இஃது அதிமுக்கியமான இடமாக விளங்கிற்று என எடுத்துக் காட்டியுள்ளார்.

கி.பி 10ம் நூற்றாண்டு முடிவு காலகட்டத்தில் சோழப் பெருமன்னர் ஆட்சி ஏற்படத்தொடங்கி 11ம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் இலங்கை முழுவதும் அவர்களின் ஆட்சி ஏற்பட்டது. (கி.பி 993–1070) சோழப்பெருமன்னர் பெரிய சிவபக்தர்கள். எனவே இதனை நன்கு ஆதரித்தனர். இங்கு கிடைத்துள்ள இரு சோழகல்வெட்டுக்களிலே மாதோட்டத்திலே திகழ்ந்த ராஜராஜேஸ்வரம் திருவீராமேஸ்வரம் ஆகிய இரு கோவில்கள் பற்றி அறியப்படுகின்றது. இதிலே முன்னையதனைத் தாழி குமரன் எனும் சோழ அதிகாரி கட்டுவித்தான். ஏற்கனவே இருந்த சிவாலயத்தை திருத்தியமைத்து அதற்குத் தலைநகரான தஞ்சாவூரிலுள்ள சிவாலயத்திற்குப் போல பேரரசனின் பெயரால் இதையும் ராஜராஜேஸ்வரம் எனச்சோழா அழைத்தனர் எனக் கொள்ளலாம். பிறிதொரு கல்வெட்டுத்திருவிரா மீஸ்வரத்திற்கு 1ம் ராஜேந்திரனின் ஓர் அதிகாரி வழங்கிய கொடை பற்றிக் கூறுகின்றது. மூன்றாவது கல்வெட்டிலே சில தமிழ் வர்த்தக சமூகத்தினர் கோவிலிற்குச் சமீபமாக குடியேறியிருந்தமை பற்றிக் குறிப்பிடுகின்றது.

12ம் நூற்றாண்டிலே சைவ நாயன்மார் வரலாற்றினைப் பக்திச் சுவையுடன் காவியமாகப் பாடிய சேக்கிழார் சுவாமிகளின் பெரிய புராணத்திலே திருக்கேதீச்சரம், திருக்கோணேஸ்வரம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கி.பி. 13ம் நூற்றாண்டிலெழுச்சி பெற்ற இரண்டாம் பாண்டியப் பெருமன்னரின் ஆட்சி இலங்கையிலே குறிப்பாக வட பிராந்தியத்திலேற்பட்ட போது சைவர்களான அப்பெருமன்னர் திருக்கேதீச்சரத்திற்கு ஆதரவு நல்கினர். பாண்டியரின் கல்வெட்டுக்கள் இங்கு இதுவரை கிடைக்காத போதும், இக்காலத்திற்குரிய கட்டடப் பகுதிகள் சில இங்கு காணப்பட்டனவாகக் கூறப்படுகின்றது. இரண்டாம் பாண்டிய பேரரசர்களில் ஒருவனான முதலாம் சுந்தர பாண்டியன் காலத்தில் சிதம்பரம் கல்வெட்டொன்றிலே திருக்கேதீச்சரம் பற்றிய குறிப்பும் காணப்படுகின்றது. பாண்டியருக்கப்பின் தென்னிந்தியாவில் எழுச்சிப் பெற்ற விஜயநகர – நாயக்க மன்னர் ஆட்சி காலத்திலும் திருக்கேதீச்சரத்திற்கு சில காலங்களில் அவர்களின் ஆதரவு இருந்திருக்கலாம்.

இக்காலகட்டத்தில் இரண்டாம் பேரரசின் அனுசரணையுடன் வட இலங்கையிலே யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு உருவாகிய தமிழரசு (கி.பி 13ம் நூற்றாண்டு நடுப்பகுதி தொடக்கம் 1619 வரை) காலத்திலே திருத்தலம் சைவர்களான அவ் அரசர்களின் ஆதரவைப் பெற்றிருந்தது எனலாம். ஆனால் கி.பி 16ம் நூற்றாண்டு பிற்பகுதியிலே (1590ல்) போத்துக்கீசராதிக்கம் மன்னாரிலேற்பட்டது. அராலியைச் சேர்ந்த விஸ்நாத சாஸ்திரியாரின் சம்பவக் குறிப்பிலே திருக்கேதீசரத்தின் ஒரு பகுதியினை 1540 இலே கடல் கொண்டதெனவும் பூசைகள் வழக்கம் போல 1589 வரை நடைபெற்றதாகவும் கூறப்பட்டுள்ளது. மன்னாரைப் போத்துக்கீசர் 1590லே தமது ஆட்சிக்குட்படுத்தியமை குறிப்பிடற்பாலது. போர்த்துக்கீசருக்கு முன்பே திருக்கேதீச்சரம் புகழ் மங்கிற்று என ஒரு சாரார் கொள்ளினும், அவர்களின் ஆதிக்கப்படர்ச்சியாலேதான் திருக்கேதீச்சரம் அழிவுற்றது எனலாம். திருக்கேதீச்சரம் பற்றிப் போர்த்துக்கீசர் விரிவாகக் கூறாவிடினும், மறைமுகமான குறிப்புகள் உள்ளன. குவேறோஸ் சுவாமிகள் தமது நூலிலே மன்னார்ப்பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெரிதும் சிறிதுமான சைவ விக்கிரகங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இவை திருக்கேதீச்சரத்தைச் சேர்ந்தவையாக இருந்திருக்கலாம். இவை உருக்கப்பட்டுக் கிறிஸ்தவ தேவாலயத்திற்கு மணியொன்று செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது. கூத்தோ எனும் போர்த்துக்கீச ஆசிரியர் இப்பகுதியிலே மிகப்பெரிய உருக்குச் சங்கிலியொன்று கிடைத்தமை பற்றிக் குறிப்பிட்டுள்ளார். போர்த்துக்கீசர் திருக்கேதீச்சரக் கோவிலை இடித்து அதிலிருந்து கற்களாலே மாந்தையிலுள்ள தேவாலயத்தைக் கட்டினார்கள் என அறியப்படுகின்றது.

போர்த்துக்கீசரால் இறுதியாக இவ் ஆலயம் அழிக்கப்பட்டபின் சுமார் 300 ஆண்டுகளாக இத் திருக்கேதீச்சரம் பற்றி இலங்கையிலே சைவ மக்கள் மறந்திருந்தனர். பின்னர் இலங்கைச் சைவ மறு மலர்ச்சியின் தந்தையெனப் போற்றப்படுபவரான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் 1872ம் ஆண்டு இத்திருத்தலத்தின் சிறப்பினைச் சுட்டிக்காட்டி மக்களை விழிப்படையச் செய்தார். ''யாழ்ப்பாணத்துச் சைவசமயநிலை'' எனும் சிறு பிரசுரத்திலே ''சைவசமயிகளே! இன்னும் ஒன்று சொல்லி முடிப்போம். தேவாரம் பெற்ற சிவதலங்களுள் இரண்டு இலங்கையிலுள்ளன. அவற்றுள் ஒன்றான திருக்கோணமலைக்குச் சம்பந்தமூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றிருக்கின்றது. மற்றொன்றாகிய திருக்கேதீச்சரத்துக்குத் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றும், சுந்தரமூர்த்தி நாயனார் பதிகமொன்றும் இருக்கின்றன. இத்திருக்கேதீச்சரம் இவ் வடமாகாணத்தின் கண்ணுள்ள மன்னாருக்கு அதி சமீபத்திலிருக்கின்ற மாதோட்டத்திலுள்ளது. இத்திருக்கேதீச்சரம் அழிந்து காடாகக் கிடக்கின்றதே! புதிது புதிதாக இவ் இலங்கையில் எத்தனை கோயில்கள் கட்டப்படுகின்றனவே! நீங்கள் இந்த மஹாஸ்தலத்தைச் சிறிதும் நினையாத தென்னையோ ! இவ் இலங்கையிலுள்ள விபூதிதாரிகள் எல்லாருஞ் சிறிது உபகரிக்கினும் எத்துணைப் பெருந்தொகைப் பொருள் சேர்ந்துவிடும்! இதை நீங்கள் எல்லாருஞ் சிந்தித்து இத்திருப்பணியை நிறைவேற்றுவீர்களாயின் அருட்கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அநுக்கிரகஞ் செய்வார்'' எனவும், ''மன்னாருக்குச் சமீபத்திலுள்ள மாதோட்டத்தில் திருக்கேதீச்சரம் என்னும் தேன் பொந்து ஒன்று உளது அங்கு மருந்து ஒன்று மறைந்திருக்கின்றது. அதனைச் சென்றடையுங்கள்'' எனவும் கூறிச் சைவ மக்களுக்கு இதன் முக்கியத்துவத்தினை எடுத்துக்கக்காட்டி அவர்களை விழிப்படையச் செய்தார். இவர் இவ்வாறு இத்திருக்கோயில் மீள அமைப்பதற்கு அடிகோலினார். இவ்வகையில் இது இத்திருக்கோவிலின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும்.

நாவலர் பெருமானின் வேண்டுகோளைத் தொடர்ந்து சைவப்பெரு மக்களில் ஒரு சாரார் இத்திருத்தல் ஈடுபாடு கொண்டு இஃது அமைந்துள்ள நிலப்பகுதியை அரசாங்கத்திடமிருந்து (அப்போது அது முடிக்குரிய நிலமாயிருந்தது) விலைக்கு வாங்கி ஆலயத்தினை மீண்டும் அமைக்க விரும்பினார். அவர்களில் கொழும்பு தம்பையா முதலியோர், கபதார் வைத்திலிங்கம், நல்லூர் கந்தசுவாமி கோவில் அறங்காவலர், ஒப்பந்தக்காரர் ஆசைப்பிள்ளை ஆகியோர் தாம் கோவிலை மீள அமைக்கப்போவதாகக் குறிப்பிட்டு அந்நிலத்தை 1887லே விலைக்கு வாங்க முயற்சித்தனர். ஆனால் முடியவில்லை. அக்காலத்திலே யாழ்ப்பாணத்திலே நன்கு செயற்பட்ட சைவ பரிபாலன சபையும் இத்திருத்தலமுள்ள இடத்தை தாம் ஆதரிப்பவருக்கு விற்குமாறு அரசாங்கத்திற்குக் கூறிவந்தது.

இதைத் தொடர்ந்து 13.12.1893லே யாழ்ப்பாண அதிபர் துறைவனம் இந்நிலம் தொடர்பான ஏல விற்பனையை யாழ்ப்பாணக் கச்சேரியிலே நடத்தியபோது, நாட்டுக்கோட்டை நகரத்தவராகிய சைவப் பெரியார் ரா.அரு.பழனியப்பச் செட்டியார் 3100 ரூபாவுக்கு இத்தலம் அமைந்துள்ள இடத்தோடு கூடிய 44 ஏக்கர் முடிக்குரிய நிலத்தை வாங்கினார். அப்பகுதி அப்போது அரங்கள், பற்றைகள் நிறைந்த காடாகக் காணப்பட்டது.

எனினும் கோவிலமைந்திருந்த பகுதியை அடையாளங் கண்டு, அதை மீள அமைக்கும் பெருமுயற்சி இத்துடன் தொடங்கிற்று. 1894ம் ஜனவரி மாதம் வண்ணைச் சைவபெருமகனார் சி.மு.பசுபதிச் செட்டியாரும் வேறு ஆர்வலர்களும் திருக்கேதீஸ்வரத்தில் மேற்கொண்ட செயற்பாடுகளின் விளைவாகக் காடு வெட்டப்பட்டு அழிபாடுகளிலே பழைய கோவிலின் அத்திவார அமைப்புக் கண்டுபிடிக்கப்பட்டது. எஞ்சியிருந்த சுவர்கள் 10–20 அடி உயரம் கொண்டிருந்தன. சுவரின் அத்திவாரம் கருங் கல்லினாலும், அதன் மேல்பகுதி முருகைக்கல், செங்கட்டிகளாலமைக்கப்பட்டிருந்தன. இங்கு காணப்பட்ட இடிக்கப்பட்ட கட்டிடப் பகுதிகளிலே ஒரு பெரிய சிவலிங்கம், நந்தி, கணேசர் சிலை ஆகியன கண்டுபிடிக்கப்பட்டன. இவை பழைய கோவிலுக்குரியவை. இந்த சிவலிங்கம் இப்போது கோவிலின் மேற்கு வீதியிலே பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. பசுபதிச் செட்டியார் சைவபரிபால சபையின் பொருளாளராக இருந்து இத்திருப்பணியை நடத்தினார். அவருக்குச் சைவப் பெரியார் க.சிவபாதசுந்தரம் முதலியோரும், ஆலயத்திற்கு அண்மையிலே வாழ்ந்த மக்களும் நன்கு உதவி செய்தனர். இவர் யாழ்ப்பாணத்திலிருந்து அந்தணர்கள், சிற்பிகள், தொழிலாளிகள் முதலியோரை அங்குக் கூட்டிச் சென்று செயற்பட்டார். பழைய கோவிலமைந்திருந்த இடத்தில் ஒரு சிறு கோவிலமைக்கப்பட்டு 1903லே என் குமாரசுவாமி தீக்ஷிதரால் மகாகும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. சிவலிங்கம், நந்தி, பலிபீடம் ஆகியனவும் அப்போது பிரதிஷ்டை செய்யப்பட்டன. இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கம் காசியிலிருந்து கொண்டு வரப்பட்டதாகும். பசுபதிச் செட்டியார் காலமான பின்னர் கோவில் திருப்பணிகள் ஓரளவு மந்த நிலையடைந்தன.

1903ம் ஆண்டு நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்தின் பின் ஆலய பராமரிப்பு, நிர்வாகமாகியனவற்றை கொழும்பிலிருந்த நகரத்தார்

எனும் வணிகப் பெருமக்கள் நடத்தி வந்தனர். இவர்கள் இந்து சமயப் புவலர்களிலே புகழ் பெற்றவர்கள்.

கொழும்பிலுள்ள கதிரேசன் கோவிலை நடத்தியவர்களே இக்கோவிலையும் கவனித்து வந்தனர். 1903ம் ஆண்டு மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து, கும்பாபிஷேக நாள் (மணவாளக் கோலநாள்) ஆண்டு தோறும் கொண்டாடப்பட்டது. நித்திய பூசைகள் ஒழுங்காக நடைபெற்றன. எனினும் கோவில் பராமரிப்பினைச் செய்தோர் நன்னீர், மலேரியா, காட்டு மிருகங்கள் முதலியவற்றின் பிரச்சினை போன்றவற்றை எதிர் நோக்க வேண்டியவராயினர். வறட்சிக் காலத்திலே கோயிற் பூசகர் மன்னாரிலே தங்கினார்.

பிரபல சைவசித்தாந்தியும், தமிழ் ஆங்கில அறிஞருமான திரு.க.சிவபாதசுந்தரம் அவர்களின் பெரு முயற்சியினாலே திருக்கேதீச்சர ஆலய புனரமைப்புச் சபை 1948ல் உருவாயிற்று. இவர் இத்திருத்தலத்தின் வரலாறு, சமயச்சிறப்பு முதலியனவற்றை உள்ளடக்கிய ஒரு கடித மூலம் மலேசியாவிலுள்ள சைவாபிமானிகளை இப்புனருத்தாரணப் பணியில் ஈடுபடுமாறு வேண்டுகோள் விடுத்தார். இவரின் வேண்டுகோளுக்கு இணங்கிய மலேயாவிலுள்ள சிவனடியார்கள் இதற்காக ஒரு சங்கத்தினைத் தொடங்கினர். கௌரியம்மன் ஆலயம், அவ்வாலயத்திற்கான கோபுரமாகியனவற்றை அமைப்பதற்கான நிதியுதவியினைச் செய்தனர். திருக்கேதீச்சர ஆலய புனரமைப்புச் சபைக்குத் தலைவராகத் திரு.க.சிவபாதசுந்தரம் ஏக மனதாகத் தெரிவு செய்யப்பட்டார். 1948ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் பம்பலப்பிட்டியிலுள்ள பழைய கதிரேசன் கோவிலில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலே இச்சபை சம்பிரதாய பூர்வமாகத் தொடங்கப்பட்டது. திரு.சிவபாதசுந்தரம் நடராஜர், சிவகாமசுந்தரி அம்மன் சிலைகளை ஆலயத்திற்கு வழங்கினார். 1948ல் அங்கு ஒரு சைவ மகாநாடு நடைபெற்றது.

1947 – 1952க்குமிடைப்பட்ட காலத்திலே கோவிலை நன்கு பெரிய அளவிலே மீள அமைத்ததற்கான ஏற்பாடுகள் தொடர்ந்து செய்யப்பட்டன. அச்சுவேலி குமார சுவாமிக் குருக்கள், பழனியைச் சேர்ந்த ஈசான சிவாச்சாரியார் ஆகியோரின் ஆலோசனையினைச் செயலாளர் பெற்றார். ஆலய அமைப்பினை நன்கு திட்டமிட்டுச் செய்வதற்குப் பழனியைச் சேர்ந்த செல்லக்கண்ணு ஸ்தபதி, வைத்தியநாத ஸ்தபதி ஆகியோரின் நிபுணத்துவ ஆலோசனைகளும் பெறப்பட்டன. சென்னையிலுள்ள கோவில் கலை நிபுணரான நரசிம்மனும் ஆலோசனை வழங்கினார்.

கேதீச்சரநாதர் கௌரியம்மைக்கான கோவில்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டவாறிருக்க, ஏனைய பரிவார தெய்வங்கள், ராஜகோபுரங்கள் முதலியன தொடர்ந்து அமைக்கப்பட்டு வந்தன. 1952லும், 1960லும் மகா



கும்பாபிஷேகங்கள் நடைபெற்றன. மணிக்கூட்டுக் கோபுரம் அமைக்கப்பட்டு பிரித்தானியாவிலே செய்து கொண்டு வரப்பட்ட மணி அதிலே பிரதிஷ்டை செய்யப்பட்டது. கோவிலின் பிரதான வாசலிலே ஐந்து தளமுள்ள ராசகோபுரம் அமைக்கப்பட்டது. அம்மன் சந்நிதிக்கு முன்பும் ஒரு இராச கோபுரம் அமைக்கப்பட்டது. 1974லே புனரமைப்புச் சபைச் செயலாளராக திரு. ஆர். நமசிவாயம் மிகுந்த உற்சாகத்துடன் பல ஆண்டுகளாக திருப்பணிகளில் ஈடுபட்டுவந்துள்ளார். கேதீசநாதர், அம்பாளுக்கான மூலஸ்தானம், அர்த்தமண்டபம், பாரிய பரிமாணம் ஆகியன கருங்கல்லினால் அமைக்கப்பட்டன. அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்ட கல் விக்கிரகங்கள் அனைத்தும் மாமல்லபுரத்திலுள்ள அரசு கட்டிடக்கலை, சிற்பக்கலைக் கல்லூரியிலே நன்கு உருவாக்கப்பட்டவை. 31 அடி கொண்ட கொடிமரம் (துவஜஸ்தம்பம்) தாமிரத்தினால் மூடி அமைக்கப்பட்டுள்ளது. இத்துடன் நந்தி, பலிபீடம் ஆகியன பிரதிஷ்டை செய்யப்பட்டன. கௌரி அம்பாள் சந்நிதிக்கு முன்பும் நந்தியும், பலிபீடமும் செய்யப்பட்டன.

கும்பகோணத்தைச் சேர்ந்த ஸ்தபதி ஜகந்நாதனும் மகன் சிவசங்கரன் ஸ்தபதியும் சிறந்த பல வெண்கலச்சிலை செய்தனர். இவற்றுள் சோமஸ்கந்தர், அம்பாள் சமேத நடராஜர், பிச்சாடனர், சரபமூர்த்தி, பிரதோஷமூர்த்தியும் அம்பாளும், உற்சவ அம்பாள், உமாமகேஸ்வரர், கலியாணசுந்தரர் போன்றோர்க்கான சிலைகளைக் குறிப்பிடலாம்.

சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலே முன்னர் குறிப்பிட்ட சு.சிவபாதசுந்தரத்தை விட சேர்.கந்தையா. வைத்தியநாதன், மு.ஞானப்பிரகாசரும், ஆர்.நமசிவாயம், சு.சிவசுப்ரமணியம், எஸ்.ஆறுமுகம் முதலிய சைவப் பிரமுகர்கள் இக்கோவிலுக்குப் பல திருப்பணிகளைச் செய்து வந்துள்ளனர்.

இங்கு சேர்.கந்தையா வைத்தியநாதனின் கருத்திற்கமைய அந்தண மாணவர்கள் தங்கியிருந்து வேதாகமங்கள், சைவத்திருமுறைகள், கோவில

கிரியைகள் முதலியனவற்றைக் கற்பதற்கான சிவானந்த குருகுலம் 1962லே நிறுவப்பட்டது. இதிலே கற்பவர்கள் கோவில்களிலே பூசகர்களாக விளங்கும் வகையிலே பயிற்சியளிக்கப்பட்டு வந்துள்ளது. இந்த நிறுவனம் திருமதி. சிவானந்தம் தம்பையா முதலியோர் அளித்த நிதியுதவியைக் கொண்டு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சார்பிலே தொடங்கப்பட்டது.

முழுமையான ஒரு சிவாலயத்திற்கான பல்வேறு அமைப்புக்களும் இக்கோவிலிலே பொருத்தமான இடங்களிலே அமைக்கப்பட்டுள்ளன. பிரதான சிவபிரான், அம்மன் ஆலயங்களைவிட பரிவார தெய்வங்கள் – பிள்ளையார், முருகன், பைரவர், நவக்கிரகங்கள், 63 நாயன்மார்கள் முதலியோருக்கான அமைப்புக்களும், ராஜகோபுரங்கள் முதலியன வெவ்வேறு பிரகாரங்களில் இடம் பெற்றுள்ளன. இவற்றைவிடத் தேர், சப்பறம், வாகனங்கள் ஆகியனவும் குறிப்பிடற்பாலன.

கோவிலருகிலே வெவ்வேறு திசைகளிலே பல மடங்கள் – திருஞானசம்பந்தர் மடம், சுந்தரர் மடம், நாட்டுக்கோட்டை நகரத்தார் மடம், அம்மா மடம், பசு மடம், திருவாசக மடம், கௌரீசர் மடம், நாவலர் பெருமாள் மடம், முதலியன நிறுவப்பட்டுள்ளன. இவற்றுள் திருவாசக மடத்தினை திருக்கேதீச்சரம் திருவாசகம் ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள் 1952லே நிறுவிப் பல ஆண்டுகளாக அதனை நன்கு நடத்தி வந்தார். திருவாசகத்திலே மிக்க ஈடுபாடுள்ளவராக அதனை முதன்மைப்படுத்திச் சொல்லிலும், செயலிலும் திருவாசக நெறியினை வாழ்ந்து காட்டியதோடு அதனை மற்றவர்களுக்கும் எடுத்துக்கூறிப் பலரைத் திருவாசகத்திலீடுபடச் செய்தவர். குறிப்பாக மார்கழி மாதத்திலே திருவெம்பாவைக் காலத்திலே திருவாசக விழாவை ஏற்படுத்தி வந்தார். சேர்.கந்தையா வைத்தியநாதன் அவர்கள் செய்து வந்த திருப்பணிகளுக்கு மிகவும் உதவி செய்தார். அவர்களின் ஏற்பாட்டில் கௌரீசர் பாடசாலையையும், நெசவுசாலையையும் கட்டி முடித்தார். திருக்கேதீச்சரம் வரும் அடியார்களுக்கு, அன்னதானம் வழங்குதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். தாம் அங்கு, ஒரு குடிசையிலே வாழ்ந்து கொண்டு பல சேவைகள் செய்துவந்தார். அவருக்குப் பின் சி.சரவணமுத்து சுவாமிகள் திருவாசக மடத்தைத் தொடர்ந்து கவனித்து வந்தார். சபாரத்தினம் சுவாமிகள் இறைவன் திருவடி சேர்ந்த பின் அவரின் இலட்சியங்களை முன்னெடுப்பதற்காக அவரின் பெயரில் உருவாக்கப்பட்ட தொண்டர் சபை குறிப்பிடற்பாலது. திரு.எஸ். தியாகராஜா (எஸ்.ரி.ஆர்) தலைவராகவும், திரு.த.துரைராசா செயலாளராகவும் இச்சபையிலே பணிபுரிந்து வருகின்றனர்.

இவ் ஆலயத்திலே 1976ம் ஆண்டு கோலாகலமாக சிவஸ்ரீ ஐ.கைலாசநாதன் குருக்கள் தலைமையிலே நடைபெற்ற மஹா கும்பாபிஷேகம் குறிப்பிடற்பாலது. இதையொட்டி பெரிய சிறப்புமலர் ஒன்று வெளிவந்துள்ளது.

இங்கு வேதாகம முறைப்படி நாடோறும் பூசைகள் நடைபெற்று வந்தள்ளன. திருவெம்பாவை, நடேசர் அபிஷேகங்கள், சைவ நாயன்மார் குருபூசைகள், விநாயகர் சதுர்த்தி, கந்தஷஷ்டி போன்றவை சிறப்பாக நடைபெறுகின்றன. மஹோத்சவம் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. தேர்த் திருவிழாவன்று ஐந்து தேர்களிலே ஐந்து தெய்வமூர்த்திகள் வீதிவலம் வரல் கண்கொள்ளாக் காட்சியாகும். இங்கு நடைபெறும் சிவராத்திரி விழாவும் நன்கு குறிப்பிடற்பாலது.

திருக்கேதீச்சரத்தின் தனிச் சிறப்புகள், தொன்மை முதலியானவற்றைப் பாமாலைகள் மூலம் சில அன்பர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். இவற்றிலே பக்திச்சுவையும், மருவிக் காணப்படும். ஏற்கனவே குறிப்பிட்டவற்றை விட அச்சுவேலி சி.குமாரசுவாமிக்குருக்கள் ஏழாலை இலக்கிய கலாநிதி பண்டிதர் மு.கந்தையா போன்றோரின் ஆக்கங்கள் குறிப்பிடற்பாலன. புங்குடுதீவைச் சேர்ந்த க. சதாசிவம்பிள்ளை எழுதிய கௌரியம்மை பிள்ளைத் தமிழும் இவ்வகையிலே குறிப்பிடற்பாலது.

திருக்கேதீச்சரம் இவ்வாறு 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாறு கொண்ட திருத்தலமாகும். இடையிலே மூன்று நூற்றாண்டுகளாக இவ் ஆலயம் வெளிநாட்டவரின் ஆக்கிரமிப்பாலும், ஆட்சியாலும் பெருமளவு அழிந்து போனாலும், மீண்டும் கடந்த நூற்றாண்டுக்கு மேலாகப் படிப்படியாக மீண்டும் முன்னைய சிறப்பினைப் பெற்று வந்துள்ளது. கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக வட இலங்கையிலே நிலவி வரும் போர்ச் சூழ்நிலை காரணமாக மீண்டும் ஒரு நெருக்கடியான நிலையேற்பட்டு ஓரளவு பாதிப்புற்றுப் பின்னர் தொடர்ந்து இயல்பு நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கையிலே சைவ சமயத்தின் தொன்மைக்கும் சிறப்புக்கும் இத்தலமும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

**உசாத்துணை**


1. திருக்கேதீச்சரம் திருக்குடத்திருமஞ்சன மலர், கொழும்பு 1976
2. திருக்கேதீச்சரம் சைவ மகாநாட்டு மலர் 1960
3. பட்டுச்சாமி ஓதுவார், வித்துவான் இலங்கைத் திருக்கேதீச்சரக் கோயில் வரலாறு, யாழ்ப்பாணம் 1974
4. கந்தையா ஆ.திருக்கேதீச்சரம், யாழ்ப்பாணம், 1968
5. Pathmanathan, Prof.S.Temples of Siva in Sri Lanka, Colombo - 1999


– பேராசிரியர் வி.சிவசாமி

# மார்லன் பிராண்டோ



நடிப்பில் உலகை உலுக்கிய வெகு சில நடிகர்களில் நம் மனக்கண் முன் பளிச்சென வந்து நிற்பவர் மார்லன் பிராண்டோ அவர்கள். காலத்தால் அழிக்க முடியாத அவரது நடிப்பும், நடித்த கதாபாத்திரங்களும் எவராலும் மறக்க முடியாதது.


மார்லன் பிராண்டோ என்ற பெயரைக் கேட்டதுமே அவர் ஒரு சிறந்த நடிகர் என்பதுடன் கூடவே முரட்டுத்தனம் மிகுந்தவர். தலைக்கனம் பிடித்த கர்வி, எப்பொழுதும் படப்பிடிப்பிற்கு கால தாமதமாகவே வருவார், இயக்குநர் சொல்லிக் கொடுக்கும் வசனத்தைப் பேசாமல் தன்னிஷ்டத் திற்கு ஏதாவது பேசுவார். அதையும் சுத்தமாகத் தெளிவாகப் பேசாமல் முணுமுணுத்துவிட்டு அதன் பிறகு டப்பிங் (Dubbing)கில் பெரும் தலைவலியை ஏற்படுத்துவார் என பலவகையான குற்றச் சாட்டுக்கள்தான் பலருக்கு ஞாபகத்தில் வரும். அது உண்மைதான்.

இவையனைத்தையும் கடந்து அவர் ஒரு மிகச் சிறந்த மனிதாபிமானி, சினிமா மூலம் அவர் அதுவரை அடைந்த புகழ் அனைத்தையும் அலட்சியப்படுத்தியவர். உலகமே பாழ்பட்டு இருக்கிறபோது தான் மட்டும் வெறுமனே காமிராவின் முன்னால் நடித்துக் கொண்டிருப்பதில் எந்த அர்த்தமுமில்லை என வேதனைப் பட்டிருக்கிறார். எங்கெல்லாம் அதிகாரத்தால் மக்கள் நசுக்கப்படுகிறார்களோ அங்கெல்லாம் ஓடிச் சென்று அவர்களுக்காக குரல் கொடுத்திருக்கிறார். கறுப்பு இனத்தவருக்கு இழைக்கும் கொடுமைகளை எதிர்த்து தனக்கு ஆஸ்கார் அவார்டு தேவையில்லை என உதறித் தள்ளியவர்.

மேற்சொன்ன அத்தகவல்கள் அனைத்தும் அவரைப் பற்றி எவரும் அறியாதது. இதுபோன்று பட்டியலிட்டால் இப்படி ஒரு நடிகன், ஒரு கலைஞன் அமெரிக்காவில் வாழ்ந்தாரா என ஆச்சரியப்படுவார்கள். ஆனால் பத்திரிகைகள் அவரை அவரது நற்குணங்களை மறைத்து இருட்டடிப்புச் செய்து கொண்டிருந்தன. ஏனெனில் மார்லன் பிராண்டோ பத்திரிகையாளர்களை மிகவும் வெறுப்பவர். அவர்களைப் பற்றி அவர், தங்களது நுண்ணறிவை விற்று கூலிக்கு எழுதுபவர்கள் எனக்கூறுவர். ஆரம்ப காலம் தொட்டு அவர்களுடன் முரண்பட்டும் வந்திருக்கிறார். இதனால் பிராண்டோவை பத்திரிகைகள் அனைத்தும் வெறுத்தன. பொதுவாக அவரைப் பற்றிய நல்ல தகவல்களைக் கூட தவறாகத் திரித்து எழுதி வந்தன.

மார்லன் பிராண்டோ 1924 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3ம் தேதி நடு இரவில் ஓமஹா (Omaha) எனும் ஊரில் பிறந்தார். இவரது பெற்றோர்கள் நெப்ராஸ்காவிலுள்ள ஐரீஷ் இனத்தைச் சேர்ந்தவர்கள். இவரது தந்தை மார்லன் பிராண்டோ சீனியர் (Marlon Brando Senior), தாயார் டாரத்தி பென்னேபேக்கர் (Dorothy Penebaker). மார்லன் பிராண்டோவிற்கு முன் பிறந்தவர்கள் இரண்டே இரண்டு சகோதரிகள். ஒருவர் ஜோஸ்லின் (Jocelyn) மற்றொருவர் பிரான்சிஸ் (Frances) ஆவார். மார்லன் பிராண்டோவின் தந்தை ஒரு விவசாயக்கம்பெனியில் ஏலக்காரனாக வேலை பார்த்து வந்தார். இப்படிப்பட்ட வேலையில் இருப்பதால் அவர் கம்பெனி விஷயமாக எப்போதும் வெளியூர்களுக்குப் பிரயாணம் செய்து கொண்டே இருப்பார். வீட்டில் தங்கியதும் இல்லை. அருமைக் குழந்தைகளுடன் சந்தோஷமாகக் காலத்தைக் கழித்ததும் இல்லை. மேலும் அவர் தன் குழந்தைகளிடம் முரட்டுத்தனமாக நடந்து கொள்வார். அதுமட்டுமல்லாமல் குழந்தைகளின் கண் முன்னரே தன் மனைவியை பெல்ட்டால் அடித்துக் கொடுமைப் படுத்துவார்.

இதனால் அவருக்கும் இவரது தந்தைக்கும் இடையே உள்ள பாசம் சிறிது விலகியே இருந்ததில் வியப்பில்லை. இதன் காரணமாக மார்லன் பிராண்டோ தனது தாயாரின்





அரவணைப்பிலேயே வளர்க்கப்பட்டதால் இவர் தாயாருடன் அதிகமாக நெருங்கி இருந்து வந்தார். இவரது தாயார் டாரத்தி பிராண்டோவிற்கும் குடிக்கும் பழக்கம் உண்டு. இதுவும் மேலை நாட்டு நாகரீகம் என்றாலும் எந்த நேரமும் தாயாரின் அருகில் சென்றால் ஜின் வாசனையே தனக்கு ஞாபகத்தில் வரும் என மார்லன் பிராண்டோ கூறியதுண்டு.

இவரது தாயாருக்குத் தொழில் ஓமாஹா கம்யூனிட்டி பிலேஃஹவுஸ் (Omaha Community Playhouse) இல் நாடக ஆசிரியர். அது மட்டுமல்லாமல் அங்கே அவர் போர்டு ஆஃப் டைரக்டர்ஸ் (Board of Directors) இல் உறுப்பினராகவும் பதவி வகித்து வந்தார். இதனால் நடிகர்கள் எழுத்தாளர்கள் போன்றவர்களது வருகை இவர்களது வீட்டில் அடிக்கடி நடப்பதுண்டு. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நடிப்பின் சுவாசம் ஆறு வயதிலேயே சூழந்திருந்ததால் மார்லன் பிராண்டோ பின்னாளில் திரையுலகில் மாபெரும் நடிகனாக வலம் வந்தது ஆச்சரியமில்லை என்றே கூறலாம்.

மார்லன் பிராண்டோ தனது ஆறாவது வயதில், லின்கோவின் ஸ்கூலில் (Lincoln School) சேர்ந்தார். அந்தப் பள்ளியில் அவர் படிக்கும் பொழுது வாலி காக்ஸ்(Wally Cox) என்ற நண்பன் கிடைத்தான். மார்லன் பிராண்டோவின் நண்பர்கள் இவரைச் செல்லமாக பட் (BUD) என்றே அழைப்பார்கள். அதன் பிறகு மார்லன் பிராண்டோவின் குடும்பத்தினர் லிபர்டிவில்லே (Liberty Ville) என்ற ஊருக்கு வந்து வசிக்கத் துவங்கினர். எனவே மார்லன் பிராண்டோவை லிபர்டிவில்லே டவுன்ஷிப் ஹைஸ்கூலில் (Liberty Ville Township High School) சேர்த்தனர். டவுன்ஷிப் ஹைஸ்கூலில் படிப்பு விஷயத்தில் மிகவும் கெட்டிக்காரராக மன உறுதியுடன் யாருடைய ஆதரவுமின்றி தனியே படித்து வந்தார். அனைத்து விளையாட்டுகளிலும் மிகுந்த ஆர்வம் கொண்டவராகத் திகழ்ந்தார். அதேபோல் இசையிலும் அதிக நாட்டம் கொண்டார். பியானோ (Piano) வாசிப்பதில் கெட்டிக்காரராகத் திகழ்ந்தார். இப்படிப் பட்ட திறமைகள் அந்த மனிதனிடம் ஒருபுறம் இருந்தாலும், அதே மனிதனின் மறுபுறம் முற்றிலும் மாறுபட்ட மனிதனாகத் திகழந்தார். அதாவது வீட்டிலும் பள்ளியிலும் யாருக்கும் அடங்காத பிள்ளையாக இருந்து வந்தார். இதனால் தங்களது மகனின் எதிர்காலம் எப்படி இருக்கும் எனக் கவலை கொண்ட பெற்றோர் இவரை மிலிட்டரி ஸ்கூலுக்கு (Military School) அனுப்பி வைத்தனர்.

பிராண்டோ 1941 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஷாட்டுக் மிலிட்டரி அகாடமியில் (Shattuck Military Academy) சேர்ந்தார். ஆனால் பிராண்டோவிற்கு அந்த இடம் பிடிக்கவில்லை. ஏனென்றால் அங்கு உள்ள அதிகாரம், உரிய நேரத்தை கடைப் பிடித்தல், இவைகளெல்லாம் அவருக்கு பிடிக்கவில்லை. அங்கும் அவர் தனது குறும்புத்தனத்தை விடவில்லை. ஆசிரியரின் நாற்காலிக்கு அடியில் பட்டாசு வைப்பது, வேலை நேரங்களில் அதிகாரிகளுடன் அரட்டை அடிப்பது, போன்ற செயல்கள் மேலதிகாரிகளின்



## மாதமொரு சமையல்

**தேவையான பொருட்கள்**

| | | | |
|---|---|---|---|
| அரசி ரவா | : 1 ஆழாக்கு | மஞ்சள் பொடி | : 1/2 டீஸ்பூன் |
| துவரம் பருப்பு | : 1/2 ஆழாக்கு | பீன்ஸ் | : 50 கிராம் |
| வெங்காயம் | : 100 கிராம் | உருளைக் கிழங்கு | : 100 கிராம் |
| தக்காளி | : 100 கிராம் | காரட் | : 100 கிராம் |
| பச்சை மிளகாய் | : 1 | கறிவேப்பிலை | : 1 கொத்து |
| சீரகம் | : 2 தேக்கரண்டி | உப்பு | : தேவையான அளவு |
| கிராம்பு | : 3 | எண்ணெய் | : 30 மில்லி (அ) 1/2 க |
| சாம்பார் பொடி | : 2 தேக்கரண்டி | கொத்தமல்லித்தழை | : சிறிது |



கவனத்திற்குச் சென்றது. இக்குற்றச்சாட்டுகளின் காரணமாக அவர் அந்தப் பள்ளியில் நீடிக்க முடியவில்லை. எனவே மார்லன் பிராண்டோ 1943 ஆம் ஆண்டில் மீண்டும் தனது லிபர்ட்டிவில்லே ஊருக்குத் திரும்பி வந்து விட்டார். இதனால் அவரது தாயார் இவர் மீது கடும் கோபம் கொண்டார். தன் மகனுக்கு படிப்பின் மீது அக்கறை இல்லை என அறிந்து கொண்ட தாயார் அந்த ஊரில் உள்ள ஒரு கம்பெனியில் இவரை ஒரு ஊழியராக சேர்த்துவிட்டார். அந்தக் கம்பெனியின் வேலையும் இவருக்குப் பிடிக்கவில்லை. எனவே அந்த வேலையை ராஜினாமா செய்துவிட்டு 1943 ஆம் ஆண்டு நியூயார்க் சென்றார். அந்தச் சமயம் பிராண்டோவிற்கு வயது பத்தொன்பது.

அங்கு அவரது அக்கா பிரான்ஸஸ் (Frances) அவர்களது வீட்டில் தங்கியிருந்தார். பிராண்டோவின் இன்னொரு சகோதரியான ஜோஸ்லின் (Jocelyn) என்பவருக்கும் இவரைப் போலவே சினிமாவில் நடிக்க வேண்டும் என்ற தாகம் இருந்து வந்தது. இதனால் இவரும் பிராண்டோவைப் பின் தொடர்ந்து நியூயார்க்கிற்கு வந்து சேர்ந்தார். அங்கு அவர் டிராமாடிக் ஒர்க்ஷாப் ஆஃப் தி நியூ ஸ்கூல் ஃபார் சோஸியல் ரிஸர்ச் (Dramatic Workshop of the New School for Social Research) என்ற பள்ளியில் சேர்ந்து படித்து வந்தார். மார்லன் பிராண்டோவும் தனது சகோதரி ஜோஸ்லின் படிக்கும் அதே டிராமாடிக் ஒர்க்ஷாப்பில் சேர்ந்து படிக்கலானார். அங்கு டிராமா பயிற்சியாளராக இருந்த ஸ்டெல்லா அட்லர் (Stella Adler) என்பவரிடம் திறமையாகப் படித்து நல்ல பெயரைப் பெற்றார். பிராண்டோவின் திறமையைக் கண்டு ஸ்டெல்லா அட்லர், ''பிராண்டோ இன்னும் ஒரு வருடத்தில் இந்த அமெரிக்கன் தியேட்டரின் சிறந்த நடிகராக வலம் வரப்போகிறார்'' என்று கூறினார்.

இந்தக் காலக்கட்டத்தில் பிராண்டோ தன்னை ஒரு நடிகராக உருவாக்கிக் கொள்ள அநேக முயற்சிகளை மேற்கொண்டார். மக்கள் கூடும். மார்க்கெட், தியேட்டர், மருத்துவமனை போன்ற பகுதிகளுக்குச் சென்று அவர்களது நடையுடை, முகபாவங்களையும், உணர்ச்சிகளின்போது வெளிப்படும் உடல் அசைவுகளையும் நுட்பமாகக் கவனித்து மனதில் பதிய வைத்துக் கொள்வார். நடிப்பின் மீது உள்ள ஆர்வம் காரணமாக ஸ்டெல்லா ஆட்லரின் வீட்டிலேயே பெரும்பாலான நேரம் செலவழித்து நடிப்புப் பற்றியும், அரசியல், இலக்கியம் மற்றும் இதர துறைகளைப் பற்றி பேசுவதன் மூலம் தன்னையும் தன் அறிவையும் வளர்த்துக் கொள்வதில் பெருமுயற்சி எடுத்துக் கொண்ட அதே நேரத்தில் தனி மனித ஒழுக்கங்களில் எல்லை மீறியவராகவும், எளிதில் காதல் வசப்படுபவராகவும் இருந்தார். தன் சகோதரியின் வீட்டை விட்டு வெளியேறி ஒரு பிளாட்டில் குடியேறினார். இரவு நேரங்களில் கேளிக்கை விடுதிகளில்கலந்து கொள்வது. அங்கே எல்லோரும் தன்னை கவனிக்கும் விதமாக வித்தியாச மாக எதையாவது செய்வது என்பது அப்போது அவருக்குப் பிடித்த பொழுது போக்கு.

ஒருமுறை விருந்து நடை பெற்ற எட்டாவது மாடியிலிருந்து கீழே குதிக்கப்போகிறேன் என

**செய்முறை :**

- காய்கறிகளை நன்கு கழுவி சிறிய துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும்.
- பச்சை மிளகாயைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.
- அரிசியைக் கழுவி வைத்துக் கொள்ளவும்
- துவரம் பருப்பை ஊற வைக்கவும்.
- தக்காளி வெங்காயத்தைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.
- வாணலியில் எண்ணெய் ஊற்றி சூடானதும் சீரகம் கிராம்பைப் போட்டு பொரிக்கவும். அதில் வெங்காயம், தக்காளி, கறிவேப்பிலை, சாம்பார் பொடி, மஞ்சள் தூள் போட்டு வதக்கிக் கொள்ளவும்.
- அதில் நறுக்கி வைத்துள்ள காய்கறிகள், பச்சை மிளகாய், அரிசி, பருப்பு போட்டு 1:3 என்ற தண்ணீர் விட்டு நன்கு கிளறி விட்டு வேக வைக்கவும். பின்னர் உப்பு போட்டுக் கிளறிக் கொள்ளவும். சாதம் வெந்ததும் கொத்தமல்லித் தழையைத் தூவி அலங்கரிக்கவும். அப்பளத்துடன் சூடாகப் பறிமாறவும்.

அனைவரையும் பயமுறுத்தி அனைவரும் தன்னிடம் கெஞ்சிய தையும் போதையில் மறந்து கண்ணீர் விட்டதையும் ரசித்ததாகக் கூறுவார். தனது பிற்கால வாழ்க்கையில் அதனை நினைத்து வேதனைப் படவும் செய்தார். அவரது காலத் திலேயே மூன்றே படங்களில் நடித்துப் புகழ் பெற்ற பின் புகழோடு ஒரு விபத்தில் மரணமடைந்த சிறந்த இளம் நடிகர் ஜேம்ஸ் டீனிடம் ஒருமுறை, ''நான் இளமைக்காலத்தில் செய்த தவறுகளையே நீயும் செய்கிறாய். என்னை ஃபாலோ செய்வது என்பது என் நடிப்போடு நிற்கட்டும். என் தீய பழக்கங்களை அல்ல'' என அன்புடன் அறிவுறுத்தினார்..

இந்தக் காலக்கட்டத்தில் அவர் மிகுந்த மன அழுத்தம் கொண்டவ ராக தான் ஒரு அனாதை என நினைத்துக் கொள்வார். இப்படிப் பட்ட அவரது தவறுகளுக்குக் காரணம் அவரது தந்தையும் தாயாரும் அடிக்கடி சண்டை போட்டுத் தனித் தனியே வாழ்ந்து எப்பொழுதும் அவருக்கு மன உளைச்சலை ஏற்படுத்தியது. இப்படியாக அவரது இளமைக்காலம் குடிப்பதிலும் கேளிக்கைகளிலும் இருந்தாலும் நாடகப்பயிற்சியை பொறுத்த வரை தான் ஒரு சிறந்த மாணவன் என்பதை அவர் நிரூபிக்கத் தவறியதில்லை.



அதன் பிறகு பிராண்டோ மேடை நாடகங்களில் நடிக்கத் துவங்கினார். குறிப்பாக அவர் செபாஸ்டியனாக (Sabastin) ட்வல்த் நைட் (Twelth Night) என்ற நாடகத்தில் நடித்தது பெரும் வரவேற்பைப் பெற்றது. மேனார்ட் மாரீஸ் (Maynard Mauris) என்பவர் பிராண்டோவை ஐ ரிமெம்பர் மமா (I Remember Mama) எனும் நாடகத்தில் நடிக்க வைத்தார். இந்த நாடகத்தை இயக்கிய ராபர்ட் லூயிஸ் (Robert Luis) என்ற இயக்குநர் பிராண்டோவின் நடிப்பைக் கண்டு ''யார் இந்த இளைஞன் சிறுவயதிலேயே நட்சத்திரமாக ஜொலிக்கிறானே'' என வெகுவாகப் பாராட்டினார். 1946 ஆம் ஆண்டு மேக்ஸ்வல் ஆண்டர்ஸனின் (Maxuel Anderson) ட்ராங்லைன் கேஃப் (Trunkline Cafe) எனும் நாடகத்தில் நடித்தார். ஆனால் இந்த நாடகம் எதிர்பார்த்த அளவிற்கு பெரிய வரவேற்பைப் பெறவில்லை. நாடகம் சுமாராகவே ஓடியது.

அடுத்ததாக பிராண்டோ பென் ஹேசட் (Ben Hecht) என்ற எழுத்தாளர் எழுதிய ஏ ப்ஃளாக் இஸ் பார்ன் (A Flag is Born) எனும் நாடகத்தில் நடித்தார். இந்த நாடகம் ஸ்டெல்லா ஆட்லரின் கணவர் யூதர்களுக்கு நிதி திரட்டுவதற்காக உருவாக்கிய நாடகம். இந்த நாடகமும் சுமாராகத்தான் ஓடியது. ஆனால் பிராண்டோவின் நடிப்பு அனைவரையும் பாராட்டும் வண்ணம் அமைந்திருந்தது.

## பாக்சிங்:

பிராண்டோ ஓய்வு நேரங்களில் பாக்சிங் (Boxing) கற்றுக் கொண்டிருந்தார். இப்படி பாக்சிங் கற்றுக் கொள்வது போட்டியில் பங்கு கொள்வதற்காக அல்ல. தன் உடலைக் கட்டுக் கோப்பாக வைத்திருப்பதற்காகத்தான். அப்படி ஒருநாள் கடுமையாக எதிராளியுடன் பாக்சிங் செய்து கொண்டிருக்கும் பொழுது தவறுதலாக எதிராளியின் கை அவரது மூக்கில் பட்டு மூக்கிலிருந்து ரத்தம் கொட்டியது. உடனே அவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார்கள். சிகிச்சையும் அளிக்கப்பட்டது. டாக்டர்கள் அவரிடம் பிளாஸ்டிக் சர்ஜரி செய்வது நல்லது எனக் கூறினர். ஆனால் பிராண்டோ சர்ஜரி செய்து கொள்ள ஏனோ மறுத்துவிட்டார்.

வாரத்தில் இரண்டு நாட்கள் அல்லது மூன்று காட்சிகள் மற்ற நாட்களில் இரண்டு காட்சிகளாக நடைபெற்ற நாடகத்தின் வெற்றியைத் தொடர்ந்து அதன் தயாரிப்பாளர்கள் பிராண்டோவை ஒரு வருடத்திற்கு ஒப்பந்தம் செய்தனர். சுதந்திரமாக வாழ விரும்பிய பிராண்டோவிற்குக் கைகளைக் கட்டிப் போட்டது போலானது. வருமானம் கிடைத்த அதிகப்படியான பணத்திற்காக வேறு வழியில்லாமல் அவர் அதனை ஏற்றுக் கொண்டார். அதுவரை நியூயார்க் நகரில் பைக்கில் உல்லாசமாகச் சுற்றித் திரிந்த பிராண்டோவிற்கு நாடகத்தின் வெற்றியைத் தொடர்ந்து சுதந்திரம் பறிபோனது. காட்சிகளில் கட்டுக்கடங்காத உணர்ச்சிகளை மேடையில் வெளிப்படுத்தி முரட்டுத்தனத்தை கதாபாத்திரத்தின் மூலமாக உருவாக்கிக் கொண்ட பிராண்டோவால் நடிக்காத நேரங்களில் அல்லது இயல்பு வாழ்க்கையில் உணர்ச்சிகளின் கொந்தளிப்பால் தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் தடுமாறினார். இதனால் பொது இடங்களில் அவருக்குக் காரணமே இல்லாமல் கோபம் மூண்டு அதுவே பிரச்சினையில் முடிந்தது. இது அவருக்கு பலவிதங்களில் தொந்திரவாகவும் இருந்தது. இதற்கிடையே பல சினிமா பட வாய்ப்புகள் அவரைத் தேடி வந்தன. மேடை நாடக ஒப்பந்தம் முடிவடையாமல் இருந்ததால் அவரால் அதனை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. மறுத்துவிட்டார். கடைசியாக அந்த மேடை நாடக ஒப்பந்தம் முடிவடைந்தது.

அந்தக் காலத்தில் பிராண்டோவிற்கு நாடகங்களில் நடிப்பதற்கு பல்வேறு இடங்களில் இருந்து அழைப்பு வந்தாலும் அவருக்கு அந்த நாடகங்கள் எதுவும் திருப்திகரமாக அமையவில்லை. மேலும் பல இடங்களில் நாடகக் குழுக்களால் அவமானங்களை எதிர்கொள்ள நேர்ந்தது. இயக்குநர்கள் பலரோடு பிராண்டோவால் ஒத்துப் போக முடியவில்லை. இந்த சமயம்தான் அவரது வாழ்க்கையில் முக்கியமான திருப்பம் நிகழ்ந்தது. பொதுவாக பிராண்டோ பொழுது போகாத சமயங்களில் புகழ்பெற்ற ஆக்டர்ஸ் ஸ்டுடியோவிற்கு சென்று வேடிக்கை பார்ப்பது வழக்கம். அன்றைய காலகட்டத்தில் பிரபல ஹாலிவுட் நட்சத்திரங்களான பால் நியூமன் (Paul Newman) மற்றும் உலகப்பிரசித்தி பெற்ற நடிகையும் அந்தக்கால ரசிகர்களின் கனவுக்கன்னியாக வலம் வந்த மர்லின் மன்றோ (Marliyn Manroe) போன்றவர்கள் இந்த ஆக்டர்ஸ் ஸ்டுடியோவின் பழைய மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஒருநாள் இயக்குநர் எலியா கசன் (Eliya Kazan) என்பவர் தான் உருவாக்கப்போகும் புதிய நாடகத்திற்கான நடிகர்களைத் தேடி அங்கு வந்திருந்தார். டென்னிஸ் வில்லியம்ஸ் (Tennessee Williams) என்ற எழுத்தாளர் எழுதிய ஏ ஸ்ட்ரீட் கார் நேம்டு டிசைர் (A Street Car Named Desire) எனும் புகழ் பெற்ற நாடகம் அது. அந்த நாடகத்தில் நடிக்கத் தேவையான முரட்டு இளைஞன் பாத்திரத்திற்கு பொருத்தமான நபரைத் தேடி சுழன்ற அவரது கண்கள் மார்லன் பிராண்டோவைப் பார்த்ததும் நின்றது.

உடனே பிராண்டோவைப் பற்றித் தெரிந்து கொண்டு தனது நாடகத்தில் நடிக்க அழைப்பு விடுத்தார். நாடகத்தில் வரும் கதாபாத்திரத்தை விட பிராண்டோ ஐந்து அல்லது ஆறு வயது குறைந்தவராக இருந்ததால் நாடக தயாரிப்புக் குழுவில் இருந்த பலர் பிராண்டோவை நிராகரித்தனர். ஆனால் எலியா கசன் பிராண்டோவை நாடக ஆசிரியரான டென்னிஸ் வில்லியம்ஸ் இடம் அனுப்பி வைத்தார். டென்னிஸ் வில்லியம்ஸ் பிராண்டோவை அந்தக் கதாபாத்திரத்திற்கு பொறுத்தமானவர் என அங்கீகரித்ததால் நாடக ஒத்திகை துவங்கியது. இந்நாடகம் நியூயார்க்கில் பெரும் வரவேற்பைப் பெற்றது. அனைத்துப் பத்திரிகைகளும் அந்த புதிய இளைஞனின் அட்டகாசமான நடிப்பைப் புகழ்ந்து பாராட்டி எழுதின.

''தி ஜர்னல் அமெரிக்கன்'' (The Journal American) எனும் பத்திரிகை பிராண்டோ இந்தத் தியேட்டரின் மிக முக்கியமான நடிகர் எனப் பாராட்டியது. ஒரே நாள் இரவில் பிராண்டோ பெரிய நடிகரானார். நாடக உலகின் நட்சத்திரமானார். நாடகம் அரங்கேறி அவருடைய வருமானமும் பெருகத் துவங்கியது. தன்னுடைய வருமானத்தில் பாதியை தன் தாயாருக்கு அனுப்பி வைத்தார். இந்த விஷயத்தில் அவர் நமது எம்ஜியார், சிவாஜியைப் போல் நடந்து கொண்டார்.

நாடக உலகில் பிராண்டோ புகழடைந்து வந்து கொண்டிருக்கும் பொழுது அனேக சினிமாக் கம்பெனிகள் அவரைத் திரைப் படங்களில் நடிக்க அணுகினர். உலகப் பிரசித்திப் பெற்ற கம்பெனியான MGM அவருக்கு ஏழு வருட ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தியது. ஆனால் அதற்கு



பிராண்டோ சம்மதிக்கவில்லை. ஸ்டான்லி கிரேமர் (Stanley Kramer) என்பவர் பிராண்டோவை தி மென் (The Men) என்ற திரைப்படத்தில் நடிக்குமாறு அணுகினார். பிராண்டோவும் அப்படத்திற்கான கதையைப் படித்துவிட்டுச் சம்மதித்தார். இப்படத்தைத் தயாரித்த கம்பெனியிடம் மார்லன் பிராண்டோ ஒரு பெரும் தொகையை சம்பளமாகக் கேட்டார்.

முதல் படத்தில் எவரும் இவ்வளவு பெரிய சம்பளம் கேட்டதில்லை. அதுவும் சொல்லப் போனால் அவர் திரைப் படத்துறைக்கு ஒரு புதுமுகம், இருந்தாலும் அன்றைய கால கட்டத்தில் மார்லன் பிராண்டோ மேடை நாடகங்களில் மிகப் பிரபலமாகத் திகழ்ந்த காரணத்தால் வேறு வழியின்றி அவரது வேண்டுகோளுக்கு அந்தக் கம்பெனி சம்மதித்தது. இந்த விஷயத்தில் நமது நடிகவேள் M.R. ராதா அவர்களைப் போல் மார்லன் பிராண்டோ நடந்து கொண்டார். நடிகவேள் எம்.ஆர்.ராதா அவர்கள் நாடகங்களில் நடித்துக் கொண்டிருந்த பொழுது அவர் சினிமாவைப் பெரிதாக மதிக்கவில்லை. ஆனால் நேஷனல் பிக்சர்ஸார் ரத்தக்கண்ணீர் திரைப்படத்தில் நடிக்க அணுகிய பொழுது நடிகவேள் அவர்கள் அதிகச் சம்பளம் கேட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முதல் படப்பிடிப்பு:—

செப்டம்பர் 1949 ஆம் ஆண்டு படப்பிடிப்பிற்காக மார்லன் பிராண்டோ கலிபோர்னியாவுக்கு வந்தார். அன்றுதான் ஒரு மாபெரும் நடிகனின் சகாப்தம் உலகளவில் ஆரம்பம் ஆனது.

கலிபோர்னியாவில் மிகப்பெரிய ஹோட்டல் ஒன்றில் பிராண்டோ தங்குதவற்காக அந்தக் கம்பெனி ஏற்பாடு செய்திருந்தது. ஆனால் பிராண்டோ அதனைத் தவிர்த்து விட்டு தனது சித்தியின் வீட்டில் தங்கிக் கொண்டார். தி மென் திரைப்படம் முழுவதும் அவர் வீல் சேரிலேயே உட்கார்ந்து நடிக்க வேண்டும் என்பதால் அதற்கான பயிற்சிகளை மேற்கொண்டார். ஒரு மருத்துவமனையில்தான் படப்பிடிப்பு நடத்தினார்கள். இவருக்கு ஜோடியாக தெரஸா பிரைட் (Therasa Bright) எனும் நடிகை நடித்தார். இப்படம் வியாபார ரீதியாக வெற்றி பெறவில்லை என்றாலும் பிராண்டோவின் திறமையை எடுத்துக் காட்டியது. தி சண்டே டைம்ஸ் (The Sunday Times) என்ற பத்திரிகை பிராண்டோ இந்த கதாபாத்திரத்தில் சிறப்பாக நடித்துள்ளார் என்று பாராட்டியது. இந்தப்படம் ஃபிரட் ஜின்னெமென் (Fred Zennemenn) என்பவரால் இயக்கப்பட்டது. 1950 ஆம் ஆண்டு இப்படம் வெளியானது.

சார்லஸ் ஃபீல்டுமென் (Charles Feildmen) என்பவர் ஏ ஸ்ட்ரீட் கார் நேம்டு டிசைர் (A Street Car Named Desire) எனும் நாடகத்தைப் படமாக்க உரிமை வாங்கி இருந்தார். எலியா கசான் (Eliya Kazan) இப்படத்தை இயக்கினார். அந்த நாடகத்தில் நடித்த அனைவருமே இப்படத்திலும் நடித்தார்கள். வார்னர் பிரதர்ஸ் ( Warner Bros) நிறுவனம் இப்படத்தைத் தயாரித்தது. 1951 ஆம் ஆண்டு இப்படம் வெளியானது. சிறந்த நடிகருக்கான ஆஸ்கர் விருதுக்காக, பிராண்டோ பரிந்துரைக்கப்பட்டார். தி லண்டர் ஈவினிங் ஸ்டாண்டர்டு (The London Evening Standard) எனும் பத்திரிகை இப்படத்தை அந்த வருடத்தின் சிறந்த படமாகத் தேர்ந்தெடுத்தது. கிளார்க் கேபிள் (Clark Cable)க்குப் பிறகு வெள்ளித் திரையில் தோன்றிய சிறந்த நடிகர் பிராண்டோ எனப் பாராட்டியது.

தொடரும்



அன்னை மடியில் 03.06.1930

ஆண்டவன் அடியில் 26.06.2006

**இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி**

திதி 03.07.2008

**அமரர் வேலுப்பிள்ளை கந்தசாமி [ திரவியம் ]**

( இளைப்பாறிய பிரதம எழுதுவினைஞர்,
உணவுத்திணைக்களம், கொழும்பு )

எங்கள் அனைவரையும் அன்பும், பண்பும், பாசமும்,
ஞானமும் பெற்று நல்வழிகாட்டிய எங்கள் பாசமிகு பப்பாவே
ஆண்டுகள் தான் இரண்டானாலும்
உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு அகலாது பப்பாவே

உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கும்


அன்பு மனைவி : இராசபூபதி கந்தசாமி

சகோதரர்கள் : திரு சின்னையா ( கனடா )
திரு பொன்னுத்துரை ( லண்டன் )

பிள்ளைகள் : ஜெயகௌரி சோதீஸ்வரன் ( லண்டன் )
ஆனந்தகௌரி நந்தகுமார் ( கனடா )
சாந்தகௌரி விமலநாதன் ( சுவிற்சர்லாந்து )
ஜெயகுமார் கந்தசாமி ( கனடா )
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

கௌரி பவனம்
வீரபத்திரர் கோவிலடி
உடுப்பிட்டி

21 Redford Avenue
Thornton Heath



அமெரிக்கா சிக்காக்கோ நகரில் அமெரிக்கப் பெற்றோருக்கு பிறந்து இளம் வயதில் இந்து மதத்தைத் தழுவி இலங்கை வடக்கு, கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையைத் தலைமை நிலையமாகக் கொண்டு இந்து சமயப் பணியிலும், சமூகப்பணியிலும் கடந்த மூன்று தசாப்தங்களாக தீவிரமாக உழைத்த இந்துமதத் துறவி ஸ்ரீமத் சுவாமி தந்திரதேவா மகராஜன் சமீபத்தில் காலமானார்.

திரு. K. ரங்கநாதன்
தலைவர்
அறங்காவலர் சபை
ஹைகேட் ஹில் முருகன் கோயில்

உங்களுடைய கோயில் மஹோற்சவ விஞ்ஞாபனம் பார்த்தேன். அதிலுள்ள பிழைகளைப் பார்த்ததும் இந்தக் கடிதம் எழுதவேண்டும் என்ற நினைப்பு எனக்கு வந்தது. அதனாலேயே இதை எழுதுகிறேன்.

1. ஹைகேட் ஹில் என்பதை உயர்வாசற் குன்று என்று எழுதுகிறீர்கள். பெயர்ச்சொல்லை மொழிபெயர்க்க முடியுமா? லண்டனை நாங்கள் மொழிபெயர்ப்பதில்லை. உதாரணமாக உங்கள் பெயரை அரங்கம் - ஸ்டேஜ், நாதன் - ஹெட், ஸ்டேஜ்கெட் என்று ஆங்கிலத்தில் எழுதுவீர்களா?
2. திருவிழா 'மரணயோகமும் கூடிய நன்னாளில்' என்று வருகிறது. எப்பொழுதிலிருந்த மரணயோகம் நல்ல நாள் ஆகியது? மரணயோகம் என்பதை விளம்பரத்திலே போடாது தவிர்த்திருக்கலாமே!
3. கோவில் என்று எழுதியுள்ளீர்கள். இலக்கண விதியில் கோயில், கோவில் இரண்டும் சரி. ஆனால் திருமுறைகளில் அல்லது தமிழ் இலக்கியத்தில் எங்கேயாவது கோவில் என்று எழுதியுள்ளதை உங்களாற் காட்டமுடியுமா? தேவாரங்களில் எல்லாம் கோயில் என்றுதானே வருகிறது?
4. கும்பாபிசேகம் என்று எழுதியிருக்கிறது. கும்பாபிஷகம் என்ற வடமொழிச் சொல் தமிழிலே எழுதும்போது கும்பாபிடேகம் என்றுதான் வரும். கும்பாபிசேகம் என்று வராது. அபிஷேகம் - அபிடேகம்
5. மகோற்வசவ விழா என்று இரண்டு இடத்தில் வருகிறது. மகோற்சவ என்றுதானே வரும். அதென்ன 'மகோற்வசவ'?
6. மூவிரு முகங்கள் போற்றி என்ற அருட்பாடலிலே மன்னிக்கமுடியாத மிக மோசமான பிழை வருகிறது. கந்தபுராணத்தை எழுதியவர் கச்சியப்பசிவாசாரியார். அவர் எழுதி வைத்துவிட்டுப் போக முருகன் திருத்தி வைத்ததாக வரலாறு உண்டு. அப்படிப்பட்ட பாட்டை திருத்த உங்களுக்கு என்ன அதிகாரம் உண்டு?

அப்பாட்டின் இரண்டாவது வரி உங்கள் விளம்பரத்தில்
'ஏவரும் துதிக்க நின்ற ஈராறு தோள்கள் போற்றி' என்று வருகிறது.
'ஏவரும் துதிக்க நின்ற இராறுதோள் போற்றி காஞ்சி' என்றுதான் கந்தபுராணத்தில் உள்ளது. மூவிரு, ஏவரும், மாவடி, சேவலும் என்று நான்கு வரிகளிலும் இரண்டாவது எழுத்து 'வ' வரிசையில் வரும். இதை யாப்பு இலக்கணத்தில் மோனை என்று சொல்வார்கள். நீங்கள் எழுதியுள்ளதுபோல் காஞ்சி தான் மூன்றாவது வரியென்றால் மோனை எங்கே?

கச்சியப்பரையும் முருகனையும் திருத்துமளவுக்கு யாருக்கு அறிவு இருக்கிறது?
சரியான பாடல் இதோ,

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற இராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி

கோயில் விளம்பரத்திலேயே முருகனின் பாட்டை பிழையாகப் போடலாமா? கோயில் நடத்துபவர்களுக்கு கொஞ்சமாவது சமயமும் கொஞ்சமாவது தமிழும் தெரிந்திருந்தால் நல்லது என்பது என் அபிப்பிராயம்..

நன்றி, வணக்கம்.

பதிப்பாசிரியர்





# முக்தி நல்கும் மோட்சபுரம் ஸ்ரீசைலம்
## மல்லிகார்ஜுன ஸ்வாமி

காசி மரணம், அருணாசல ஸ்மரணம், ஸ்ரீசைல தரிசனம் இவை மூன்றுமே முக்திக்கு வழிகள் என்று புராணங்கள் சொல்கின்றன.

ஆந்திர மாநிலம், கர்நூல் மாவட்டத்தில் நல்லமலை மலைத்தொடர் உள்ளது. இங்குள்ள ரிஷப பர்வதத்தில், அடர்ந்த பில்வ மரக்காடுகளும், கதலி வனங்களும் சூழந்த அழகிய பிரதேசத்தில், தக்ஷிண கைலாயம் என்று அழைக்கப்படும் ஸ்ரீசைல புண்ணியத்தலம் அமைந்துள்ளது.

பன்னிரண்டு ஜ்யோதிர்லிங்கங்களில் ஒன்றாகவும், பதினெட்டு சக்தி பீடங்களில் ஒன்றாகவும் இரண்டு பெருமைகளைக் கொண்ட க்ஷேத்திரம் இது.

வேத கால முதற்கொண்டே ஈசன் மல்லிகார்ஜுனரும், ஈஸ்வரி பிரமாம்பாவும் இங்கு கோயில் கொண்டுள்ளார்கள்.

சிலாத மஹரிஷியின் மகன் பர்வதன் சிவபெருமானைக் குறித்து பல ஆண்டுகள் தவமிருந்தார். அவரது தவத்தில் நெகிழ்ந்த சிவபெருமான் அவருக்குப் பிரத்யட்சம் ஆனார். பர்வதன் வரமாகத் தன்னுள் ஈசன் உறைய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். ஈசனும் அதற்கு இசைந்து அருளவே பர்வதன் பெரிய மலையாக உருவெடுத்தார். மகேசனும் அதில் மல்லிகார்ஜுனராக கோயில் கொண்டுள்ளார்.

மஹிஷனை வதம் செய்ய துர்காதேவியான பார்வதி தும்பி உருவெடுத்து அதே வடிவில் பிரமாம்பாவாக இங்கு வந்து மல்லிகார்ஜுனரை வழிபட, ஸ்ரீசைலத்தில் மல்லிகார்ஜுனரும், பிரமாம்பாவும் எழுந்தருளி இன்னருள் புரிகிறார்கள்.

பரமனின் வாகனமான நந்தி தேவர் இங்குள்ள மகா காளி ஆலயத்தில் சிவனையும், பார்வதியையும் நோக்கித் தவம் இருக்க அவர்கள் நந்தி தேவருக்கு மல்லிகார்ஜுன ஸ்வாமியாகவும், பிரமாம்பிகையாகவும் தரிசனம் தந்தார்கள்.

பின்னர் பாண்டவர்கள் வனவாசத்தின் போது இங்கு வந்து இவ்வாலயத்துக்கு ஈசனை வழிபட, மல்லிகார்ஜுனன் அர்ஜுனனுக்கு வேடனாக காட்சி தந்து பாசுபதாஸ்திரத்தை அளித்தருளினார்.

இவ்வளவு சிறப்புகள் கொண்ட மல்லிகார்ஜுனர் கலியுகத்து மக்களுக்கு காட்சி தந்தது எப்போது?

சந்திராவதி என்னும் வேடுவ குல இளவரசி ஒருத்தி இங்குள்ள கதலி வனத்தில் லோகநாயகனைக் குறித்துத் தவம் இருந்தாள். அந்தச் சமயம் ஆரண்யத்தில் அருகில் இருந்த புற்று ஒன்றில் இருந்து கோடி சூரியனின் ஒளியை நிகர்த்த ஒளி தோன்றியது. சந்திராவதி அந்தப் புற்றை ஆனந்த அதிர்ச்சியுடன் அணுக புற்றிலிருந்து சுயம்புவாய் லிங்கமும் வெளிப்பட்டது.

அந்த இடத்திலேயே லிங்கத்திற்கோர் ஆலயத்தை அவள் எழுப்பினாள். மல்லிகை மலர் மாலைகளால் நாள்தோறும் ஈசனை அலங்கரித்து வழிபட்டாள். ஆண்டவனுக்கு ஆசை ஆசையாய் மல்லிகார்ஜுனா என்று பெயரும் சூட்டினாள். கையாலயநாதன் அவளுக்கு முக்தியை அளித்து கைலாய பதவியும் அளித்தார்.

இன்றும் வேடுவ குலப் பெண்கள் அவருக்குப் பூஜை செய்கிறார்கள். சாமரம் வீசிப் பணிபுரிகிறார்கள்.

ஆதிசங்கரர் இங்கு வந்து தியானம் செய்து சிவானந்தலஹரி என்னும் கிரந்தத்தை இயற்றியுள்ளார். அக்கம்மா தேவி, ரேணுகாச்சார்யா ஆகியோரும் மல்லிகார்ஜுரை தரிசனம் செய்துள்ளார்கள். சத்ரபதி சிவாஜி இங்கு வந்து வழிபட்டதுடன் வடக்குக் கோபுரத்தையும் கட்டியுள்ளார்.

ஸ்ரீசைல கோபுர தரிசனம் பாப விமோசனம் என்று கூறுவார்கள். கோபுர தரிசனம் ஆன பின்பு கோபுர வாயிலை அடைய குன்றை நோக்கிச் செல்லும் பாதை. பாதையின் இருபுறமும் உள்ள மண்டபங்கள் பக்தர்கள் தங்கி இளைப்பாற வசதியாகக் கட்டப்பட்டுள்ளன.

ஆலயத்தின் அரணாக கோட்டை மதில் சுவர் ஒன்று கம்பீரமாகக் காட்சி அளிக்கிறது. இந்தச் சுவர் முழுவதும் ஈசனின் திருவிளையாடல் கள் சிற்பக் காட்சிகளாகச் செதுக்கப்பட்டுள்ளன.

கிழக்கே கிருஷ்ண தேவராயர் கட்டிய கோபுரம், வடக்கே சத்ரபதி சிவாஜி கட்டிய கோபுரம், மேற்கே





பிரம்மானந்த ராயர் கோபுரம், தெற்கில் ஹரிஹர ராயர் கோபுரம் என ஆலயத்தின் உள்ளே நுழைய நான்கு திசைகளிலும் நான்கு வாயில்கள்.

கிழக்கில் உள்ள கோபுரத்தை கடந்து ஆலயத்தின் உள்ளே செல்லலாம். வெள்ளி வேய்ந்த கதவுகள் வழியாக சென்றதும் முதலில் காணக்கிடைப்பது கொடிமரம். கொடி மரத்தை அடுத்த மண்டபத்தில் பெரிய உருவத்துடன் கடலைக்கொட்டை பசவண்ணர் எனப்படும் நந்தி பகவான் அமர்ந்திருக்கிறார். கடலைக்கொட்டை மிகவும் பிடிக்கும் என்பதால் அவருக்கு இந்தப் பெயர்.

சிற்பங்கள் நிறைந்த இந்த மண்டபத்தில் நந்திக்கு மேலே அஷ்டதிக் பாலகர்கள் காட்சி அளிக்கிறார்கள். இந்த நந்தீசுவரர் ஹூங்காரமாக பெரிதாக உறுமி கலியுகத்தின் முடிவை அறிவிப்பார் என்று ஒரு நம்பிக்கை நிலவுகிறது.

நந்தி மண்டபத்தை அடுத்து அநவேக ரெட்டி மன்னர் கட்டிய வீரசிரோமண்டபம். பண்டைகாலத்தில் வீர சைவர்கள் இங்கு வந்து தங்களின் நாக்கு, கரம், சிரம் ஆகியவற்றை வெட்டி பலி கொடுத்து ஸ்ரீசைலநாதனை ஆராதனை செய்வது வழக்கம். இந்த வழிபாட்டிற்கு வீராசாரம் என்று பெயர்.

மண்டபத்தைக் கடந்தால் மீண்டும் நந்திபகவான் சிறிய உருவத்துடன் ஈசுவர தரிசனம் செய்தவாறு அமர்ந்திருக்கிறார். ஸ்ரீசைலேசுவரரை காண்பதற்கு முன் அவருக்கு வலது புறம் இரத்தின காப்பு கர்ப்ப கணபதியை தரிசிக்கலாம்.

சந்நிதியில் உள்ள ஜ்யோதிர்லிங்கத்தை பக்தர்கள் எந்தவித ஜாதி வேறுபாடும் இல்லாமல் தொட்டு பூஜை செய்யலாம். தரை மட்டத்தில் நாகம் குடை பிடிக்க, அனவரதமும் கலச நீர் அபிஷேகம் செய்ய, அற்புதமாக வேதநாயகன் மல்லிகார்ஜுனனின் தரிசனம் கிடைக்கிறது. லிங்கத்திற்கு பின்னால் கைலாய தோற்றம்.

நேர் பின்புறம் அம்பாள் கொடிமரம் உள்ளது. படிக்கட்டுகளில் ஏறிச்சென்றால் முன் மண்டபத்தில் சீதாதேவி வழிபட்ட சஹஸ்ரலிங்கத்தைக் காணலாம்.

சந்நிதியின் உள்ளே சிங்கமுக பீடத்தை மாலைகள் அலங்கரிக்க, பட்டாடை உடுத்தி வெண் கொற்றக்குடையின் நிழலில் காணக்கிடைக்காத வேதநாயகி பிரமாம்பாவின் தரிசனம் இன்றும் இந்த பிரமாம்பா தும்பியின் ரீங்காரத்துடன் மல்லிகார்ஜுனரை வழிபடுவதாக ஐதீகம்.

பதினெட்டு சக்தி பீடங்களில் ஒன்றான அந்தச் சந்நிதியில் அன்னை அஷ்ட புஜ துர்கா தேவியாகக் காட்சி அளிக்கிறாள்.

நீண்ட பெரிய கண்கள் கருணை மழை பொழிய, அஞ்சேல் என அபயம் தரும் உதட்டின் புன்முறுவல், தங்கமும் வைரமும் ஆபரணங்களாகவும், சிரசில் அணியப்பட்ட கிரீடமாகவும் அன்னை திருமேனியில் பட்டு அழகு பெறுகின்றன. அன்னையைக் கண்ட அந்த ஒரு கணத்தில் உலக மாதாவின் கடைக்கண் அருட்பார்வை நம் மேல் பட்டது போல் தோன்றும். உடல் சிலிர்க்கும். கண்களில் நீர் மல்கும்.

அம்பாள் சந்நிதிக்கு முன்னால் ஆதிசங்கரர் பிரதிஷ்டை செய்த ஸ்ரீசக்கரம் அமைந்துள்ளது.

ஆலயத்தின் தலவிருட்சமான ஆலம், அரளி, ஜம்மி இவை இணைந்த திரிபல விருட்சத்தைக் குழந்தை பேறு இல்லாதவர்கள் வலம் வந்து பலன் பெறுகிறார்கள்.

ஆலயம் முழுவதும் ஏராளமான சந்நிதிகளும் மண்டபங்களும் தீர்த்தங்களும் உள்ளன.

ஆலயத்திற்கு வெளியில் கங்காதரர் ஒரு மண்டபத்தில் அமர்ந்திருக்கிறார். சற்று தள்ளி கூரை இல்லாத மண்டபத்தில்வெய்யில் மழை பாராமல் 'பைலு வீரபத்திரர்' நின்று க்ஷேத்திர பாலகராகக் காட்சி அளிக்கிறார்.

மல்லிகார்ஜுனர் ஆலயத்தின் கீழ் அந்தர் வாஹினியாக ஓடி ஆயிரம் அடி கீழே கிருஷ்ணா நதியில் கலக்கும் தீர்த்தத்திற்கு பாதாள கங்கை என்று பெயர். இங்கு நீராடுவது விசேஷம். ஹோல்கார் வம்சத்து அகல்யா ஹோல்கார் பாதாள கங்கைக்குச் செல்லப் படிக்கட்டுகள் கட்டித் தந்துள்ளார்.

ஸ்ரீசைலம் ஆலயத்திலிருந்து 2 கி.மீ தொலைவில் சாலை அருகிலேயே சாட்சி கணபதி ஆலயம் உள்ளது. இங்கு மகாவிஷ்ணுவே கணபதியாக அமர்ந்து யார் யார் கைலாயம் செல்லத் தகுதியானவர் என்று ஸ்ரீசைலநாதருக்கு சாட்சி கூறுகிறார்.

நாள்தோறும் திருவிழாபோல மக்கள் தரிசனம் செய்கிறார்கள்.ஸ்ரீதன், ஸ்ரீகிரி, ஸ்ரீபர்வதம், ஸ்ரீநாகம் என்னும் பல பெயர்களில் அழைக்கப்படும் ஸ்ரீசைலத்து நாயகன் மல்லிகார்ஜுனனையும், பிரமாம்பாவையும் தரிசனம் செய்தால் முக்தி என்னும் மோட்சம் நிச்சயம்.

தலத்தின் பெயர்: ஸ்ரீசைலம்

சுவாமியின் திருநாமம்: மல்லிகார்ஜுனன்

அம்மனின் திருநாமம்: பிரமாம்பா

எங்கே உள்ளது: கர்நூலுக்கு அருகில்

எப்படிப் போவது: ஆந்திராவின் அனைத்து நகரங்களில் இருந்தும் ஸ்ரீசைலத்துக்குப் பேருந்துகள் செல்கின்றன.

எங்கே தங்குவது: ஸ்ரீசைலத்தில் நிறைய தங்கும் விடுதிகளும், உணவு விடுதிகளும் உள்ளன.

தரிசன நேரம்: காலை 5.30 – 1.00 மணி வரை, மாலை 4.00 – 8.00 வரை.

# பச்சை வயல் கனவு

## அத்தியாயம் 8

## தாமரைச்செல்வி

எதிரே நீள அகலமாய் பரவி விரிந்திருந்த இரணைமடுக் குளத்தை சிவம் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். தைப் பொங்கல் கடந்த நாளில் மழைவெள்ளம் நிரம்பி குளம் கடலாய் நிரம்பியிருந்தது. இரண்டு பலகை திறந்து வான் பாய விட்டிருந்தார்கள்.

கிளிநொச்சிக்கு வந்து இத்தனை நாட்களில் சிவம் இன்றுதான் இரணைமடுக்குளத்தை வந்து பார்க்கிறான். கார்த்திகேசுவும் அவனும் வண்டிலில் வந்திருந்தார்கள். இருவரும் இப்போது நல்ல நண்பர்களாகியிருந்தார்கள்.

குளம் நிரம்பி வான்பாயுது என்று ஊரெல்லாம் கதை பரவியிருந்தது. அவர்களைப் போலவே வேறு பலரும் குளத்தைப் பார்க்க வந்திருந்தார்கள்.

''இந்தக்குளம் எங்களுக்கு கடவுள் தந்த வரம். கிளிநொச்சி மண்ணையே வாழவைக்கிறது இதுதான்''.

கார்த்திகேசு பரவசத்துடன் சொன்னான்.

''இயற்கையாகவே இந்த இடம் அமைஞ்சிட்டுது பார். கனகராயன் ஆத்தை மறிச்சு மேற்குக்கிழக்காக ஒரு மைல் தூரம் வரை அணை கட்டிக்கிடக்கு. தண்ணி எதுவும் வீணாப் போயிடாமல் அப்படியே அணைக்குள்ள வந்து நிரம்புது''.

சிவம் நிமிர்ந்து தெற்குப்பக்கம் பார்த்தான்.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை கடல் மாதிரி தண்ணீர்தான்.

''இந்தக் குளம் இப்படி அமைஞ்சாலும் இதைத் திட்டம் போட்டு கட்டியிருக்கினம். வெள்ளைக்காரன் தொடங்கி வைச்சதை எங்கட ஆட்கள் கவனமாய்த் தொடர்ந்து நடத்துகினம். இப்பவும் ஒரு எஞ்சினியர் கொழும்பிலிருந்து வந்திருக்கிறாராம்''.

கார்த்திகேசுவுக்கு எங்கிருந்துதான் இத்தனை தகவல்கள் தெரிய வந்ததோ. அவனும் இந்தக் குளத்தைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறான். வேலாயுதம் நிறையச் சொல்லியிருக்கிறான்.

சிவம் வெற்றிவேலு விதானையார் பற்றி கார்த்திகேசுவுக்கு சொன்னான். இந்தக்குளம் கட்டிய காலத்தில் எடுபிடி ஆளாய்ச் சேர்ந்த காலத்தில் கிளிநொச்சியில் செல்வாக்கு மிகுந்தவராய் இருந்த அவர் பற்றி கார்த்திகேசுவும் அறிந்திருந்தான். ஒரு விதத்தில் வெற்றிவேலு விதானைத்தான் வேலாயுதத்துக்கு வழிகாட்டி எனவும் சொல்லலாம்.

பன்னிரெண்டு வயதில் வீட்டை விட்டு ஓடி வந்த சிறுவன் இத்தனை செல்வாக்கையும் வசதிகளையும் பெற்றுக் கொண்டது சாதாரண விடயமல்ல. கடினமான உழைப்பு அங்கே இருந்தது. வேலாயுதத்திற்குள் வெறியை ஏற்படுத்தி இருக்கும் விடயமும் அதுதான். இது பற்றியும் சிவம் கார்த்திகேசுவுக்குக் கூறினான்.

இருவரும் சிறிது நடந்து எட்டிப் பார்த்தார்கள். மண் அணையில் முட்டி மோதிக் கொண்டு தழும்பி நிற்கும் அந்த நீர் எத்தனை பேருக்கு வாழ்வு தரப் போகின்றது என்ற நினைவில்நெஞ்சு சிலிர்த்துப் போனது. இருவரும் வான் பாயும் இடத்துக்கு நேராக வந்து நின்றார்கள். கால்களை இழுத்துக் கொண்டு வெள்ளம் அடித்துப் பாய்ந்தது.

தூரத்தே பலர் கடைகளில் மண் சுமந்து தேய்ந்த அணைகளில் கொட்டிக் கொண்டிருந்தார்கள்.

''இந்தியாவிலிருந்து இந்தக் குளக்கட்டு வேலைக்கு ஆட்களை கொண்டுவந்தவை. அவையளுக்கு நாலாம் வாய்க்கால் பகுதியில் குடியிருக்க காணி குடுத்து இருத்தி வைச்சிருக்கினம். அதில நிறைய குடும்பம் இருக்குது. எத்தனையோ பேற்ற உழைப்பில இந்தக்குளக்கட்டு பாதுகாப்பாய் இருக்குது. காலாகாலத்துக்கும் இருக்கக் கூடியதல்லே''.

சூரியன் மேற்கு வானில் விழுந்ததை காடு மறைத்தது. வானத்தின் அழகையும் தண்ணீர்ப் பரப்பின் மீது அந்த சிவந்த நிறம் அலையலையாய் மின்னிய அழகையும் மெய்மறந்து ரசித்தார்கள்.

''இப்படி ஒரு வடிவை என்ர வாழ்நாளில நான் காணேலை''.

''சரி வா வீட்ட போவம். நேரம் போனால் யானை கரடிக்குப் பயம். கெதியாய் வா''.

இருவரும் அவசரமாய் வண்டிலில் ஏறி மாடுகளை விரட்டினார்கள். குளக்கட்டில் வேலை செய்த

பலர்களைப்புடன் தெருவில் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். வண்டிலில் ஏற்றக்கூடிய ஆட்களையெல்லாம் ஏற்றிக் கொண்டே போனார்கள்.

''நாங்கள் நாலாம் வாய்க்காலில இருக்கிறம் தம்பி. ஆயிரம் ஏக்கர் பக்கமோ அல்லது கரடிப் போகிலயோ இறக்கிவிட்டால் போதும். அங்கால நடந்து போவம்''.

மாடுகள் வேகமாய் நடந்தன. வெய்யில் மெள்ள மெள்ள மறைந்து கொண்டு வந்தது.

வண்டிலில் வந்த முதியவரைப் பார்த்து சிவம் கேட்டான்.

''ஏன் ஐயா நீங்களும் வேலை செய்யிறநீங்களா?''

''என்ன தம்பி செய்யிறது. எங்கேயோ பிறந்து எங்கேயோ இருக்கிறம். ஏதோ இந்த மட்டில குளத்து வேலைக்கு எண்டபடியால எங்களுக்கு இங்க ஒரு பதிவு இருக்கு. இல்லையெண்டால் கள்ளத்தோணி எண்டு பிடிச்சு இந்தியாவுக்கு அனுப்பிப்போடுவினம். உழைச்சுப்பிழைக்க எண்டு இங்க வந்து எத்தினை பேர் அவலப்படுதுகள். ஆனா கள்ளத்தோணி எண்டு பிடிச்சு அனுப்பினாலும் என்ன நாலைஞ்சு மாதத்தில திரும்பியும் வாறதுதான். வயித்துப் பிழைப்புக்குத் தானே இந்த நாய் அலைச்சல்''.

அந்தக் குரலில் விரக்தியும் சலிப்பும் நிரம்பியிருந்தது. அதற்கு மேல் சிவம் அவர்களிடம் எதுவும் பேசவில்லை. புழுதி வாசனையுடன் இருந்த அவர்களுடன் மேலே என்ன பேசுவது என்றும் தெரியவில்லை. கார்த்திகேசுவை மௌனமாய் ஒரு தடவை பார்த்து விட்டு பாதை மீது பார்வையைத் திருப்பினான்.

அவர்களை வழியில் இறக்கி விட்டு கார்த்திகேசுவை அவன் வீட்டில் விட்டு விட்டு சிவம் தங்களின் வீட்டுக்கு வந்தபோது பொழுது நன்றாய் இருண்டு விட்டது.

வண்டிலை கொட்டிலுக்குள் விட்டு மாடுகளை அவிழ்த்துக் கட்டி விட்டு வந்த போது குடிசை வாசலில் கைவிளக்குடன் வேலாயுதம் நின்றிருந்தான்.

''இருட்ட முதல் வந்திடவேணுமடா. பொழுது பட்டால் யானை கரடிப் பயம். இவ்வளவு நேரமும் பயந்து கொண்டு இருந்தன். சரி கால் முகத்தைக் கழுவிக் கொண்டு வா''.

அப்போதுதான் வேலாயுதத்தின் பக்கம் இன்னொரு ஆள் நிற்பதை சிவம் பார்த்தான்.

''இது மரியக்கண்டு. முன்காணி செல்லத் துரையண்ணையோட வந்து நிற்கிறான். இனி எங்கட வயல் வேலையளுக்கும் மரியக்கண்டு உதவி செய்யும்''.

கைவிளக்கு வெளிச்சத்தில் பார்த்தான். பார்த்த உடனும் இந்திய ஆள் என்பது தெரிந்தது. தமிழ் நாட்டுக் கரையிலிருந்து மீன்பிடி வள்ளங்களில் களவாக இலங்கையின் வடபகுதியில் கரைகளில் வந்து இறங்கி இப்படி ஒவ்வொரு இடங்களில் வேலைக்கு நிற்பதும் பொலிஸ் பிடித்து கள்ளத்தோணி என்று திருப்பி அனுப்புவதும் திருப்பி அனுப்பப் பட்டவர்கள் நாலைந்து மாதத்தின் பின் மீண்டும் வள்ளங்களில் வருவதும் இயல்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

மெலிந்த தோற்றமும் கறுத்த உருவமுமான மரியக்கண்டுவை சிவம் யோசனையுடன் பார்த்தான். இருபத்தாறு இருபத்தேழு வயது மதிக்கக்கூடிய இளைஞன். மெலிந்த தோற்றத்திலும் உழைப்பில் உரம் ஏறிப்போன கடினம் தெரிந்தது.

''கணேசபுரத்தில் ஒரு மொதலாளிகிட்ட நின்னேன். அவரு காசு ஒழுங்கா தர்றதில்லை. அதுதான் செல்லத்துரை ஐயாகிட்ட வந்தேன். முடிஞ்சா உங்க வயல் வேலையளையும் செய்து தருவேங்க. ஏதோ நாலு இடத்திலேயும் உழைச்சாத் தானே பிழைக்க முடியும்''.

சிவம் கொஞ்சம் வியப்புடன் மரியக்கண்டுவைப் பார்த்தான். பொருத்தமான இடத்தில் தான் வந்து சேர்ந்திருக்கிறான்.

''நான் வரேங்க''

மரியக்கண்டு இருட்டுக்குள் நடந்துபோனான்.

''தமிழ் நாட்டில தஞ்சாவூரில ஒரு சின்னக் கிராமம். கலியாணம் செய்து கொண்டு குழந்தையள் கூட இருக்காம். உழைப்புத் தேடி ஆரையோ பிடிச்சு வள்ளத்தில வந்து இறங்கியிருக்கிறான். அங்க இங்க நிண்டு இப்ப செல்லத்துரையண்ணையிட்ட வந்து நிக்கிறான். பொலிசிட்ட பிடிபடாமல் இருந்திட வேணும் பாவம்''.

வேலாயுதம் விபரம் சொல்லிக் கொண்டே காட்டுத்தடிகளை சேர்த்துக் குவித்து நெருப்பு மூட்டினான்.

அந்த பிரதேசத்தையே வெளிச்சமாக்கிக் கொண்டு நெருப்பு விளாசி எரிந்தது.

சிவத்துக்கு வண்டிலில் ஏறி வந்த கிழவன் சொன்ன

''வயிற்றுப் பிழைப்புக்குத்தானே இந்த நாய் அலைச்சல்'' என்ற வார்த்தைகள் நினைவுக்கு வந்தது.

மனைவி பிள்ளைகளை விட்டு சொந்த ஊர்விட்டு எங்கேயிருந்து எங்கே வந்திருக்கிறான் இந்த மரியக்கண்டு என்று நினைத்தபோது ஏனோ அவனுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

தொடரும்



# ஆடி மாதப்பலன் (ஜூலை 15 - ஆகஸ்ட் 15)

– கணித்தவர் : ஜோதிட ரத்னா – லயன். டாக்டர். கே.பி. வித்யாதரன்
37, மகாலக்ஷ்மி தெரு, தி.நகர், சென்னை – 17. தொலைபேசி : 2434 8877, 24336465

## மேடம்

மனசாட்சியுள்ளவர்களே! குரு தொடர்ந்து உங்கள் ராசியைப் பார்ப்பதால் தன்னம்பிக்கை பிறக்கும். வரவுக்கு மீறிய செலவு இருந்ததே! இனி பக்குவமாக செலவு பண்ணுவீர்கள். பணவரவு சரளமாக இருக்கும். குடும்பத்தில் தடைபட்டு வந்த கல்யாணம் ஏற்பாடாகும். கணவன் மனைவிக்குள் இருந்த சண்டை சச்சரவுகள் விலகி பரஸ்பரம் புரிந்து கொள்வார்கள். ஆகஸ்ட் 2ந் தேதி முதல் சுக்ரன் பூர்வபுண்ணிய ஸ்தானத்தில் அமர்வதால் பிள்ளைகளால் இருந்த பிரச்சனைகள் தீரும். சூரியனும், கேதுவும் ராசிக்கு 4ல் நிற்பதால் அம்மாவுக்கு உடல்நலம் பாதிக்கும். வியாபாரத்தில் உணவு, கட்டிட சாமான்கள், கம்ப்யூட்டர் உதிரிபாகங்களால் ஆதாயம் உண்டு. வேலைசுமை வாட்டியெடுக்கத்தான் செய்யும். செயல்படும் மாதமிது.

## இடபம்

உற்சாகமானவர்களே! ராசிக்கு 3ம் வீட்டில் சூரியன் வலுவாக நிற்பதால் தடைகள் நீங்கும். உங்களின் நெடுநாள் பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கும். பணப்பற்றாக்குறை அகலும். குடும்பத்தாரின் மனதைப் புரிந்து கொள்வீர்கள். பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றங்கள் ஏற்படும். செவ்வாய், சனி சுகவீட்டில் தொடர்வதால் அடிவயிற்றில் வலி, பல்வலி வரும். சகோதரவகையில் வீண் டென்ஷன் வந்துபோகும். சுக்ரன் வலுவடைவதால் சோம்பல் விலகும். குழந்தைபாக்யம் உண்டாகும். கன்னிப் பெண்களுக்கு காதல் விவகாரம் சுமுகமாக முடியும். ராகு பலம்பெற்று இருப்பதால் பழைய கடன் பிரச்சனைகள் தீரும். நல்லது கெட்டது நான்கையும் உணரும் மாதமிது.

## மிதுனம்

ஆன்மீகவாதிகளே! உங்களின் பூர்வ புண்யாதிபதி சுக்ரனும், சுக ராசியாதிபதி புதனும் பலம்பெற்று இருப்பதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். நினைத்தது நிறைவேறும். மகிழ்ச்சியான செய்திகள் தேடி வரும். கணவன் மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். ராசிக்கு 2ல் சூரியன், கேது நிற்பதால் பல்வலி, பார்வைக் கோளாறு, காதுவலி வரும். கன்னிப் பெண்களுக்கு காதல் இனிக்கும். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். சனி வலுவாக இருப்பதால் எதிர்பாராத பணவரவு உண்டு. மகான்கள், கல்வியாளர்களின் நட்பு கிட்டும். 8ல் ராகு நிற்பதால் சிறுசிறு விபத்துகள் வரும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்யோகத்தில் திறமைகள் வெளிப்படும். தொட்டதெல்லாம் துலங்கும் மாதமிது.

## கடகம்

செயல்திறன் கொண்டவர்களே!ஆகஸ்ட் இரண்டாம் தேதி முதல் சுக்ரனும்,புதனும் தன வீட்டில் அமர்வதால் பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். ஆனால் ராசியிலேயே கேதுவும், சூரியனும் இருப்பதால் காய்ச்சல், சளித்தொந்தரவு, வீண் அலைச்சல் என வந்து போகும். பிள்ளைகளால் நிம்மதி பிறக்கும். சகோதரவகையில் மகிழ்ச்சியுண்டு.கடன் பிரச்சனைகளை சமாளிப்பீர்கள். பாதச் சனி நடைபெறுவதால் கணவன் மனைவிக்குள் பிரிவு, விவாதங்கள் வரும். வழக்குகளில் கவனம் தேவை. வெளிவட்டாரம் சிறப்பாக இருக்கும். சொத்துக்களில் அதிரடி மாற்றங்களை செய்யவேண்டாம். யாருக்காகவும் ஜாமீன் கையெழுத்திட வேண்டாம். உத்யோகத்தில் மேலதிகாரியின் பாராட்டை பெறுவீர்கள். போராடி வெற்றி பெறும் மாதமிது.

## சிம்மம்

மனவலிமை மிக்கவர்களே! உங்கள் ராசிக்குள் புதனும், சுக்ரனும நுழைவதால் உங்களை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் ஏழைரைச் சனியின் வேகம் கொஞ்சம் குறையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வரும். கணவன் மனைவிக்குள் இருந்த சந்தேகம் நீங்கும். ஆடை, ஆபரணங்கள் சேரும். உறவினர்கள், நண்பர்கள் தேடி வந்து உதவுவார்கள். உடன்பிறந்தவர்களிடையே நிலவி வந்த மனஸ்தாபங்கள் விலகும். ராசிக்கு 5ம் வீட்டில் குரு சாதகமாக இருப்பதால் அதிரடி திட்டங்களை தீட்டுவீர்கள். வி.ஐ.பிக்கள் அறிமுகமாவார்கள். ராகு சாதகமாக இருப்பதால் வேலை கிடைக்கும். அலைச்சல், செலவு, நெஞ்சுவலி, இரத்த அழுத்தம் அதிகரிக்கும். வியாபாரத்தில் முடங்கிய சரக்குகள் விற்றுத் தீரும்.உத்யோகத்தில் மகிழ்ச்சி தங்கும். தன்னிலை மாறாமல் செயல்படும் மாதமிது.

## கன்னி

திறமைசாலிகளே! சூரியன் பலம் பெற்றிருப்பதால் தன்னம்பிக்கை துளிர்விடும். இழுபறியான காரியங்கள் இனிமையாக முடியும். முறையாக முயன்று இலக்கை எட்டுவீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைப்பதுடன், எதிர்பாராத உதவிகளும் கிடைக்கும். குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். கணவன் மனைவிக்குள் இருந்து வந்த காரசாரமான விவாதங்களெல்லாம் மறையும். ராசிக்கு 4ல் குரு இருப்பதால் வீண் டென்ஷன், மன உளைச்சல் அதிகரிக்கும். கன்னிப்பெண்களுக்கு தடைபட்ட கல்யாணப் பேச்சுவார்த்தைகள் இனி சுமுகமாக முடியும். ஏழரைச்சனி நடைபெறுவதால் பயம், தடை, கடன்பிரச்சனை, சளித்தொந்தரவு வந்துபோகும். வியாபாரத்தில் சுறுசுறுப்படைவீர்கள். உத்யோகத்தில் திறமைகள் வெளிப்படும். பொறுத்திருந்து சாதிக்கும் மாதமிது.

## துலாம்

தன்மானச்சிங்கங்களே! இந்த மாதத்தில் முகமலர்ச்சி பொங்கும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். கணவன் மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றங்கள் உண்டாகும். செவ்வாயும், சனியும் வலுவாக இருப்பதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். பழைய கடன் தீரும்.உடன்பிறந்தோர் உறுதுணையாக இருப்பார்கள். கன்னிப் பெண்களுக்கு மனக்குழப்பங்கள் விலகும்.குழந்தைபாக்யம் உண்டாகும். பூர்வீகச் சொத்திலிருந்த தடுமாற்றம் நீங்கும்.வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை தகர்த்தெறிவீர்கள். வேலையாட்களின் ஆதரவு கிட்டும். உத்யோகத்தில் இருந்து வந்த நெருக்கடிகள் விலகும். அதிரடி சலுகையுடன் சம்பள உயர்வும் உண்டு. சவால்களை வென்று சாதிக்கும் மாதமிது.

## விருச்சிகம்

பரபரப்பானவர்களே!குரு சாதகமாக இருப்பதால் புதிய செயல்திட்டங்களை உருவாக்குவீர்கள்.இழுபறியான காரியங்கள் முடிவுக்கு வரும்.கணவன் மனைவிக்குள் நிலவி வந்த கசப்புணர்வு நீங்கும்.புதிய ஆடை, அணிகலன்கள் சேரும். உங்களின் பெண்ணுக்கு எதிர்பார்த்த இடத்திலேயே வரன் அமையும்.சகோதர வகையில் மனக்கசப்புகள் ஏற்படும்..சுக்ரன் சாதகமாக அமைந்திருப்பதால் பணவரவு திருப்திகரமாக இருக்கும்.கன்னிப் பெண்களின் காதல் கைகூடும்.நண்பர்களின் உறுதுணையுடன் சில வேலைகளை செய்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும்.வாடிக்கையாளர்களை கவர புது முயற்சியெடுப்பீர்கள். உத்யோகத்தில் உங்களின் திறமை வெளிப்படும்.தொட்டது துவங்கும் மாதமிது.

## தனுசு

சிந்தனையாளர்களே! உங்களுக்கு இந்த மாதத்தின் முற்பகுதி கொஞ்சம் அலைச்சல் தருவதாக அமைந்தாலும் பிற்பகுதியில் மகிழ்ச்சி தங்கும். சுக்ரன் வலுவாக இருப்பதால் தைரியமாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். பிரிந்த கணவன் மனைவி ஒன்று சேருவீர்கள். பிள்ளைகளின் உடல்நலத்தில் அக்கறை காட்டுங்கள். வெளிவட்டாரம் மகிழ்ச்சி தரும். கௌரவப் பதவிகள் தேடி வரும். வழக்குகளில் வெற்றி உண்டு. கன்னிப் பெண்களுக்கு வேலை கிடைக்கும். சிறுசிறு விபத்துகள் நிகழக்கூடும். மாணவர்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும். நட்பு வட்டாரம் விரியும். வியாபாரத்தில் சில அதிரடி மாற்றங்களைச் செய்வீர்கள். உத்யோகத்தில் இழுபறியான பணிகளை விரைந்து முடிக்கப்பாருங்கள். தன்னடக்கத்துடன் தலை நிமிரும் மாதமிது.

## மகரம்

சுறுசுறுப்பானவர்களே!ஆகஸ்ட் மாதம் முதல் எட்டில் நிற்கும் சனி, செவ்வாயுடன் சுக்ரனும், புதனும் சேர்வதால் அஷ்டமத்துச் சனியின் வேகம் குறையும். உங்களிடம் மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி, மனநிறைவு எல்லாம் உண்டு. பிள்ளைகளின் நடவடிக்கைகளை கண்காணியுங்கள். பிரபலங்களின் உதவி கிடைக்கும். குருவால் பழைய நண்பர்களால் உதவி கிடைக்கும். பேச்சில் அனுபவ அறிவு பளிச்சிடும். கன்னிப் பெண்களுக்கு கல்யாணப் பேச்சுவார்த்தை சுமுகமாக முடியும். வியாபாரத்தில் சுமுகமான இலாபம் உண்டு. உத்யோகத்தில் மேலதிகாரியின் பாராட்டை பெறுவீர்கள். போராட்டங்களை கடந்து சாதிக்கும் மாதமிது.

## கும்பம்

இனிமையானவர்களே!குரு சாதகமாக அமைந்திருப்ப தால் புதிய முயற்சிகளில் ஆர்வம காட்டுவீர்கள். தரவேண்டிய பணத்தை தந்து முடிப்பீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். கணவன் மனைவிக்குள் மனம் விட்டுப்பேசுவீர்கள். மாதமுற்பகுதியில் காரியத் தடைகளும், விரையச் செலவுகளும் வந்துபோகும். பெண்ணுக்கு எதிர் பார்த்தபடி நல்ல வரன் அமையும். மறைமுகப்போட்டிகளை வெல்வீர்கள். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். கன்னிப்பெண்களுக்கு வயிற்றுக்கோளாறு, தூக்கமின்மை வந்துபோகும். மாத பிற்பகுதியில் தடைகள் விலகும். புது எண்ணங்கள் மனதில் தோன்றும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத்தீரும். உத்யோகத்தில் வேலைபளு அதிகரிக்கும். திறமையால் வெற்றி பெறும் மாதமிது.

## மீனம்

மிதவாதிகளே! உங்களுக்கு இந்த மாதத்தின் முற்பகுதி வரை சுக்ரன் சாதகமாக இருப்பதால் சோம்பல் நீங்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். கணவன் மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். பழைய கடனை பைசல் செய்வீர்கள். தலைசுற்றல், வயிற்றுவலி விலகும். செவ்வாய் சாதகமாக இருப்பதால் மாத முற்பகுதியில் காரியங்கள் வெற்றியடையும். உடன்பிறந்தோர் உறுதுணையாக இருப்பார்கள்.கன்னிப் பெண்களுக்கு கசந்த காதல் இனிக்கும்.10ல் இருக்கும் குருவால் வீண் வதந்திகள் அதிகரிக்கும். பிரபலங்களின் அறிமுகம் கிடைக்கும். வியாபாரத்தில் புதிய திட்டங்கள் வகுத்து லாபத்தைப் பெருக்குவீர்கள். முற்பகுதில் ஆர்பரித்து பிற்பகுதியில் அமைதியடையும் மாதமிது.

## நிகழ்வுகள்

July 5 Saturday 6.00 Pm
பொன்மாலைப் பொழுது
**சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பழைய் மாணவர் ஆசிரியர் சங்கத்தின் கலைநிகழ்வு**
The Zorostrain Centre, 440 Alexandra Avenue, Rayners Lane, Harrow, HA2 9TL
தொடர்புகளுக்கு: 07950 806 482

July 5 Saturday 6.00 Pm
பொன்மாலைப் பொழுது
**இலண்டன் சிவன் கோயில் அனாதைகள் இல்ல நிதிக்காக நடைபெறும் பல்சுவை நிகழ்வு**
The Great hall, Bromley Civic Centre, Stockwell Close, Bromley, BR1 3UH
தொடர்புகளுக்கு: 020 8318 9844, 07836 347 748


July 6 Saturday 5.30 Pm
**நெல்லைத் தீபம் – 2008**
**நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் பல்சுவை கலைநிகழ்ச்சி**
The Ashcroft Theatre, Fairfield Halls, Croydon, CR9 1DG
தொடர்புகளுக்கு: 07957 998 522, 07824 392 001

July 12 Saturday 3.00 Pm
**பொங்கு தமிழ் 2008**
**உணர்வு பூர்வமான தமிழர்களின் ஒன்றுகூடல்**
Richardson Evans Playing Fields, Roehampton Vale, London, SW15 3PQ
விபரங்களுக்கு: 078 5378 5660, 079 4376 7473

July 19 Saturday
**சலங்கை நாதம்**
**திருமதி ராகினி ராஜகோபாலன் நாட்டியலாயா மாணவர்களின் நடன விருந்து**
Fair Field Hall, Park Lane, Croydon, Surrey, CR9 1DG



திரு ஆறு. திருமுருகன் அவர்களுக்கு தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் நிர்வகித்த அனைத்துப் பொறுப்புகளையும் கொடுத்து, அவர் அமரும் கதிரையையும் அளித்து கௌரவப்படுத்தியுள்ளார்கள். அவருக்கு தமிழர் தகவலின் வாழ்த்துக்கள்...


லண்டனில் தரமான தங்கத்துக்கு தாரணி ஜுவல்லர்ஸ் – வெம்பிளி

எங்கள் விளம்பர உறுதுணையாளர்களை ஆதரியுங்கள்

ESTD 1992

## SRIKANTH & CO.

Solicitors & Property Business Centre

**Solicitors & Estate Agents**

**Property Sales, Letting & Conveyancing**

557 High Road, Wembley, Middlesex HA0 2DW

Tel : 020 8795 0648

Fax : 020 8795 0649 / Mob : 07831 195 979

We also practise in the following areas of LAW:

- Immigration
- Wills & Probate
- Conveyancing - Residential
- Conveyancing - Commercial
- Londlord & Tenant
- Liquor Licensing
- Matrimonial / Family
- Employment Matter
- Consumer Problems
- Civil Litigation
- Housing Matters
- Welfare Matters

## எவரெஸ்ட்

Curry King

Breakfast Lunch Dinner

அசத்தலான அசைவ சுவைக்கு

24 Loampit Hall Lewisham SE13 7SW

**Tel : 020 8691 2233**

லண்டனில் பொற்கை வண்ணர்களின் நிர்வாகத்தில் இயங்கும் ஒரே நகை மாடம்

## MIERRA

Jewellery Mart

*Gems & Jewellery*

34 London Road
Tooting London SW 17 9HP
**Tel : 020 8648 7750**
Mobile : 07958948685
www.meera_jewellery.com

புதிய ஷோரூமில் நாங்கள்



## Maharasie Jewellers

14 Lompait Hill Lewisham
London SE13

மங்கையரின் மனங்களைக்
கொள்ளை கொள்ளும்
நவநாகரீக நகைகளின்
தங்கச் சுரங்கம்

## Video Audio

Tamil, Malayalam, Hindi, Telugu Films, Tele Drama Devotional Carrnatic, Classical Cd's Tamil Magazines, News Papers, Phone Cards

வெம்பிளியில் இன உணர்வான மளிகை கடை

## *Malar Supermarket*

543- High Road, Wembley Middlesex, Hao 2 DJ

**Tel : 020 8795 5797**

உங்கள் சகல தேவைகளையும் பூர்த்தி செய்கிறது

24 மணி நேர சேவையில் ஒரு மளிகை கடை

மலர்

சூப்பர் மார்க்கெட்



லிங்கத்தை யானையும், சிலந்தியும் வணங்கி முக்தி பெற்றதாக கூறுகிறது. யானை வணங்கியதால் 'திருவானைக்காவல்' என்றும் பெயர் பெற்றதாம்.

திருச்சியில் அப்பனுக்கு புகழ் பெற்ற திருவானைக்காவல் போல் அம்மனுக்கு புகழ் பெற்றது சமயபுரமாகும். தென்னிந்தியாவில் புகழ்பெற்ற கோயில்களில் இதுவும் ஒன்றாகும். இங்கு உள்ள மாரியம்மன் மெழுகினால் ஆனது என கூறி அம்மனுக்கு ஆரத்தி வெளியில் இருந்துதான் காட்டப்படுகிறது. தினமும் ஆயிரக்கணக்கில் பக்தர்கள் வருகை தந்து வழிபட்டு செல்கிறார்கள். இம்மாரியம்மனுக்கு பூச்சொரிதல் விழா மிகவும் சிறப்பாக நடைபெறும்.

கிருபானந்த வாரியார் வளர்த்த வயலூர் முருகன் கோயில். இக்கோயிலுக்கு முதல் கும்பாபிஷேகம் செய்தவர் வாரியார் அவர்கள். வயலூர் முருகன் என்றால் வாரியார் நினைவுக்கு வருவார். அந்த அளவு வயலூர் முருகன் மீது அவர் ஈடுபாடு வைத்திருந்தார். இக்கோயிலை பார்க்க எனக்கு ஆர்வம் வந்ததற்கு காரணம் கிருபானந்த வாரியாரின் பேச்சுதான்.

திருச்சியில் அன்று இல்லாத ஒரு கோயில் இப்போது தோன்றியுள்ளது. அதுதான் சுவாமி ஐயப்பன் கோயிலாகும். இது மிகவும் அழகாகவும், அமைதியாகவும் அமைந்து இருப்பது குறிப்பிடத்தக்கது. இக்கோயிலில் எப்பக்கம் சென்றாலும் அறிவுரை உள்ள பலகைகள் பளிச்சிடுகின்றன. இவ்வாசகங்கள் அனைவரது மனதையும் கவரும் வண்ணம் அமைந்துள்ளன.

சோழர்கள் ஆட்சிகாலத்தில் தலைநகராக இருந்தது உறையூர். இவ்விடத்தில் 'வெக்காளியம்மன்' கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலுக்கு மேற்கூரை கிடையாது. அம்மன் தனக்குக் கட்டப்படும் கோபுரத்தின் மேல் இருந்து பார்த்தால் காசி தெரியவேண்டும் என்று கூறியதாக ஐதீகம். கட்டிய கூரை எரிந்து விட்டதாக வாய்வழி செய்தியும் உண்டு.





இவ்வாறு திருச்சியில் காணக் கூடிய இடங்கள் பல உள்ளன. அவ்வகையில் கல்லணையானது (அணைக்கட்டு) காவிரி நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. கரிகாலச்சோழனால் 2ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இப்பகுதியில் வரலாற்று சிறப்பு மிக்க பல இடங்கள் உள்ளன.

மேற்கூறப்பட்ட இடங்கள் நான் கண்டவற்றில் சிலவாகும். அப்போது தமிழ் நாட்டை சுற்றிப்பார்க்க குறைந்தது 20 நாள் வேண்டும். அந்த காலத்தில் ரூ.180.00 அன்னிய செலவாணியுடன் மகிழ்ச்சியாக சுற்றிப்பார்க்கலாம் என்பது நம்பமுடியாதது. அன்று தமிழ் நாட்டில் அளவுசாப்பாடு உணவு ரூ.1.40. குளிரூட்டப்பட்ட அறையில் சாப்பிட ரூ.3.40 போதுமானது. இன்று உள்ளது போல் ஓட்டல்களோ, பேருந்து வசதியோ, விமான வசதியோ, புகைவண்டி வசதியோ அன்று இல்லை. திருச்சியில் இருந்து சென்னைக்குப் செல்வது என்றால் ஒரு நாளைக்கு 3 பேருந்து அரசு விட்டிருந்தது. அப்பேருந்தில் இடம் கிடைக்கவில்லை என்றால் பயணம் தொடரமுடியாது. அப்போது தமிழ்நாட்டில் இந்நிலைதான் எல்லா பகுதியிலும் காணப்பட்டது. ஆனால் இன்று திருச்சியில் இருந்து எந்த ஊருக்குச் செல்லவும் நூற்றுக்கணக்கான பேருந்து வசதிகள் உள்ளது. திருச்சியில் இருந்து சென்னை செல்ல 4 விமானம் மற்றும் 5 புகைவண்டிகளும் உள்ளன இன்றைய தமிழ்நாட்டில்...

தொடரும்


JK Gold House &
Fashion House

314-316 London Road Croydon Surrey CRO 2TJ
Tel : 020 8684 4577 Fax : 022 8684 4677



# BEST FOOD

## நாங்கள் வளர்கின்றோம்
## எமது 5-வது கிளை மிக விரைவில்

11-13 Ealing Road Wembley
Middlesex HAO 4AA

364 - 366, Bath Road, Hounslow Middlesex TW4 7HT
Tel : 020 8577 6002 Fax : 020 8570 2323

249 Northolt Road Harrow Middlesex HA2 8HR
Tel : 020 8423 9933

259 - 261, London Road West Croydon Surrey CRO 2RL
Tel : 020 8684 6269/ Fax : 684 4677



# மாதம் ஒரு தகவல்



## ஆடி மாத சிறப்பும் அமாவாசை விரத நியமமும்

எமது மாதப்பிறப்புகளிலே, மூன்று மாதங்கள் மிக விஷேடமாக நாம் கொண்டாடுகின்றோம். மகரசங்கிராந்தி(தைமாதப்பிறப்பு), மேஷ சங்கிராந்தி (சித்திரை மாதப்பிறப்பு), கடக சங்கிராந்தி (ஆடிப்பிறப்பு) இம்மூன்று மாதங்களின் ஆரம்பமும் எமது சமயக் கலாச்சாரத்துடன் தொடர்பு கொண்டு சிறப்புப் பெறுகின்றது. கிழக்கிலிருந்து சூரியன் உதிக்கின்றார் என்பது வெறும் நேர்கிழக்கு திசையல்ல. வடகிழக்கு, தென்கிழக்கு என்கின்ற இருநிலையில் இந்த சூரிய ஒளி பூமியைத் தொடர்கின்றது. அந்த வகையில் உத்தராயண புண்ணிய காலம் தை முதல் ஆனி வரை ஆறு மாதமும், தெட்சணாயன புண்ணிய காலம் ஆடி முதல் மார்கழி வரையிலுள்ள ஆறு மாதமும். நமது நவக்கிரகங்களிலே பிதா கிரஹம் சூரியன், மாதா கிரஹம் சந்திரன் என அமைகின்றன. சூரியன் சிவன் அம்சம், சந்திரன் சக்தி அம்சம். இந்த இரு கிரஹமும் சேருகின்ற நாள் அமாவாசை தினம் ஆகும். பிதுர்களுக்கு வேண்டிய தர்ப்பணம் செய்கின்ற புண்ணிய நாளாகின்றது. இந்த அமாவாசை ஒவ்வொரு மாதமும் வரும். இதிலே ஆடி மாதத்திலே வருகின்ற அமாவாசைக்கு மட்டும் ஏன் தனிச்சிறப்பு. சந்திரனின் ஆதிக்கத்திற்குள் இருக்கின்ற கடக ராசியிலே ஒரு மாதம் சூரிய பகவான் சஞ்சரிக்கும் காலம் கடக மாதம் எனப்படும் ஆடி மாதம். இந்த சூரிய சந்திர சேர்க்கை பெற்ற மாதத்திலே வருகின்ற அமாவாசை என்பதால் அதிக சிறப்பும், பிதுர்கள் சேருகின்ற அமாவாசையாகவும் இது அமைகின்றது. எனவே, எம்மை இந்த பூமிக்குத் தந்த தாய் தந்தையர்க்கு பிதுர்களின் அதிபதி தெய்வங்களாகவும், எமது கண்கண்ட தெய்வங்களாகவும் பிரகாசிக்கின்ற சூரிய சந்திர கிரஹ சேர்க்கை நாளில் தர்ப்பணம், மோட்சதீபம், தானாதிகள் என்பன செய்விப்பது ஒவ்வொரு சைவ சமயத்தவரின் மிக முக்கிய கடமையாகும்.

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க றானென்
கைம்புலத்தார் றேம்ப றலை,

என்பது வள்ளுவ பெருந்தகையின் கூற்று. எமது சமயம் ஐந்து தர்மங்களை விழித்துக் கூறுகின்றது. தேவயக்ஞம், ரிஷியக்ஞம், பிதுர்யக்ஞம், நரயக்ஞம், பூதயக்ஞம் எனப்படும் நிலைகள். தெய்வம், சாஸ்திரக்கல்வி, பிதுர் காரியம், மனித நேயம், பிற உயிர்கள் நேசம் இந்த நிலைகளை சரியாக செய்யாதவன் உயிர் இருந்தும் உயிர் அற்றவனே என்கிறது மனுதர்ம சாஸ்த்திரம். எனவே ஆடி மாதத்திலே வருகின்ற ஆடி அமாவாசையை மனதிற் கொண்டு மாதா, பிதா இருவரும் இல்லாதவர்களுக்கு உரிய அடுத்தவர்கள் குரு தெய்வம் இந்த இருவரையும் தான பூஜைகள் மூலம் சந்தோஷப்படுத்தி பிதுர் ஆசீர்வாதங்கள் பெற்று நம் சந்ததி தழைக்க வழி சமைப்போமாக. ஆடி அமாவாசை அனைத்துப் பிதுர்களின் ஆசி பெறும் நாள் என்பது எமது சமய சான்றோர்களின் ஆணித்தரமான வழிகாட்டல்.

அன்புடன்: [illegible]
கலாநிதி ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள்



மண்ணில்
13.06.1929

விண்ணில்
09.06.2008

பெரியகல்லாறு மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும், இலண்டனை இறுதிகால வதிவிடமாகவும், கொண்ட **திரு பூபாளப்பிள்ளை சங்காரவேல்** அவர்கள் 09.06.2008 திங்கள்கிழமை இறைவனடி சேர்ந்தார். அவரின் 31ஆம் நாள் சடங்கு **13.07.2008ல்** நடைபெறும்.

அன்னார் T.R.C அமைப்பின் Chairmanம் மட் /சிவானந்த வித்தியாலய பழைய மாணவர் சங்க பிரித்தானிய கிளையின் போதகரும் TRAG அமைப்பின் முன்னாள் தலைவரும் TCHA அமைப்பின் முன்னாள் நிர்வாக உறுப்பினரும், Lewisham Refugee Forumஇன் முன்னாள் செயலாளரும் U.N.D.P வடகிழக்கு மாகாண முன்னாள் பொறுப்பதிகாரியும், கிழக்கு மாகாண பல்கலைக்கழக முன்னாள் பதிவாளராகவும், முன்னாள் மேலதிக பணியாளர் நிதி திட்டமிடல் அமைச்சு, திறைசேரி கொழும்பு, முன்னாள் மேலதிக அரகாங்க அதிபர் மட்டக்களப்பு ஆவார்.

இவர் காலஞ்சென்ற திரு பூபாளபிள்ளை, திருமதி சறீரங்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், திருமதி சிவஞானசௌந்தரி அவர்களின் அன்புக் கணவரும், சங்கர், சுகுமார், சுமன், சுதன், சுகந்தன், திருமதி சுமி சுகந், சுஜீவ் ஆகியோரின் அன்புத் தந்தையும், பரிமளாதேவி, சுரேகா, சுமித்திரா, ரூபா, Drசுகந் ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவகரன், செந்தூரன், சரணியா, சோபியா, சுஜித்,, சஜித், சுஜே, சஜன் ஆகியோரின் அன்பு பாட்டனாரும் ஆவார்.




திருச்சிராப்பள்ளி விமான நிலையத்தில் இருந்து வண்டி மூலம் மெயின் கேட்டை அடைந்தோம். அந்நாளில் திருச்சியில் அசோகா ஓட்டல்தான் வசதியாக தங்குமிடம். இன்று திருச்சியில் உள்ள ஓட்டல் போல்அன்று இல்லை. ஆனால் தமிழ்நாடு அரசு சுற்றுலா துறை வளர்ச்சி பெற சுற்றுலா மாளிகை அமைத்து இருந்தது குறிப்பிடத் தக்கது. திருச்சியில் உள்ள சுற்றுலா மாளிகையில் இருவர் தங்கும் ஓர் அழகிய அறைக்கு வாடகை ரூ.4.00 மட்டும்.

**அந்த நாளில் திருச்சியில் பார்க்க வேண்டிய இடங்கள்:**

திருச்சிக்கு சென்றவுடன் யாவரையும் வரவேற்கும் உச்சிபிள்ளையார் கோயில், திருவானைக்காவல், ஸ்ரீ ரங்கம், சமயபுரம், கிருபானந்தவாரியார் வணங்கிய வயலூர் முருகன் கோவில், கல்லணை போன்றவை அப்பகுதியில் நாங்கள் கண்டவை. என்றும் காணக்கூடியவை.

1967–ல் அப்பகுதியில் உள்ள அனைத்துக் கோயிலையும் பார்க்க ஒரு வாடகை காரை அமர்த்தினால் ரூ.10.00 மட்டும் போதுமானது. இன்று திருச்சியில் தங்குவதற்கு ஐந்து நட்சத்திர ஓட்டல்கள் பல உள்ளன. இன்று சுற்றுலா மாளிகையில் தங்குவதற்கு ரூ.400.00 தேவை. ஆனால் இந்த இடம் 40 வருடம் பழமை வாய்ந்தது என்பது குறிப்பிடத்தக்கவை.

திருச்சி என்றால் உச்சிப்பிள்ளையார் கோயில்தான் யாவருக்கும் நினைவுக்கு வரும். இக்கோயில் 83 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. அடிவாரத்தில் தாயுமானவராக இருந்து அருள்பாலித்து வருகிறார் சிவபெருமான். பிள்ளையாரை வணங்கிவிட்டு வந்து அமர்ந்தால் திருச்சி நகரைக் காணலாம். மலைக்கோட்டை உச்சியில் அமர்ந்துப் பார்த்தால் இயற்கை அழகு மிகுந்த காவேரி ஆறு பாய்வதையும், சின்ன சின்னதாக நகரத்தையும் காணலாம். இக்கோட்டை 3200 மில்லியன் ஆண்டுகள் பழமை வாய்ந்தது என கூறுவார்கள்.

மலைக்கோட்டைக்கு அடுத்தபடியாக ஸ்ரீரங்கம். காவிரிக்கும், கொள்ளிடத்துக்கும் இடையில் 600 ஏக்கர் நிலப்பரப்பில் ஸ்ரீ ரங்கநாதர் ஆலயம் அமைந்துள்ளது. இது 216 அடி உயரம் உடைய, ஆசியாவில் மிகப்பெரிய கோபுரங்களை கொண்ட புராண காலத்து சிறப்பு மிக்க கோயிலாகும். ஆண்டாளை பெருமாள் ஆட்கொண்டது இங்கேதான் என புராணம் கூறுகின்றது. இக்கோயிலில் முக்கிய விழாவாக வைகுண்ட ஏகாதசி மிகவும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. தமிழகத்தில் பெருமாளுக்கு புகழ் பெற்று விளங்கக் கூடிய கோயில் ஸ்ரீரங்கமாகும்.



சிவபெருமான் ஐந்து பூதங்களிலும் அருள்பாலிக்கிறார் என்பர். அவ்வைந்து பூதங்களில் ஒன்றான 'நீர்' வடிவில், திருச்சி ஸ்ரீரங்கத்தில் இருந்து 2.கி.மீ தொலைவில் உள்ள திருவாணைக்காவலில் லிங்க வடிவில் ஜம்புகேஸ்வரராக நீருக்குள் இருந்து அருள்பாலிக்கிறார். பகல் 12.00 மணிக்கு கரவை பசுவுடன் புடவை கட்டிக் கொண்டு சிவபெருமானுக்கு அய்யர் பூஜை செய்வார். காரணம் அம்பாள் நேரடியாக வந்து பூஜை செய்வதாக ஐதீகம் எனக் கூறுவார்கள். புராணம் ஜம்பு மரத்தின் அடியில் உள்ள


We Specialise in
For all your needs in immigration
(All aspects upto house of lords)
Commercial & Residential
Conveyancing, Employment,
Civil Litigation, Consumer Problems,
Lastwill, Power of Attorney,
SponsorshipDeclaration
HSMP, Workpermits

மீண்டும் Tamil House-இல் மார்க்கண்டன் Solicitors
**MARKENDAN & UDDIN Solicitors**
Solicitors & Administrators for Oaths
Tamil House, 720 Romford Road,London E12 6BT
Tel : 020 8514 8300, 07830 285 634 Fax : 020 8514 8381
Email : info@msssolicitors.com
Mr. Markandan : 07956 386 578 Mr. Uddin : 07957 455 670

# அமரர் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

## சில நினைவுகள்



தெல்லிப்பளை துர்க்கையம்மன் கோவில் என்றால் அம்பாளுக்கு அடுத்ததாக எம் எல்லோருடைய நினைவுகளிலும் முதல் வருபவர் அமரர் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். யாழ்ப்பாணத்திலே எமது சமயமும் மொழியும் தழைத்தோங்கி நிற்க அரும்பாடு பட்டவர் அம்மையார். சைவப் புலவராகவும், பண்டிதையாகவும் தேர்ச்சி பெற்றதோடு மட்டுமல்லாது, சிறந்த ஆசிரியையாகவும் இவர் திகழ்ந்தார். இலங்கையின் பல பாகங்களிலும் அம்மையார் நடாத்திய சொற்பொழிவுப் பணி அவருடைய அறிவுத் திறமையையும், புலமையையும் வெளிப்படுத்தியதோடு மக்கள் மத்தியில் பிரபல்யமும் பெற்றது. ஒரு ஆன்மீகவாதியாக அவர் சைவ உலகிலே பிரசித்திப் பெற்று விளங்கினார். அதே நேரம் எனது உறவினராக சிறு வயது முதல் அவரோடு பழகி வந்த நினைவுகள் இன்றும் எனது நெஞ்சில் பசுமையாய் நிற்கின்றது. பாடசாலை காலங்களிலே மாணவர் தலைவராக இருக்கின்ற நிலையில் எமது சிறுவயது குணங்களான கோபம், பொறாமை, பொய் போன்ற நடவடிக்கைகள் நம் ஒருவருக்கொருவர் சளைக்காது போட்டியிட்டு செய்துவரும் வேளையிலே என்னைக் கூப்பிட்டு அவர் கூறிய புத்திமதிகள் அன்பு, வாய்மை, விட்டுக் கொடுக்கின்ற மனப்பாங்கு என்பன இன்றும் நிலையாக நெஞ்சமதில் ஊன்றியிருக்கின்றது.

தெல்லிப்பளையில் சிறிதாக இருந்த கோயில் இன்று உலகளாவிய அளவில் பெரும் திருத்தலமாக விளங்குவதற்கு அம்மையாரின் பங்களிப்பு மிகவும் முதன்மையானதும் முக்கியமானதும் ஆகும். மலேசியா, சிங்கப்பூர், இந்தியா போன்ற நாடுகளில் சிறந்த சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். 1987ஆம் ஆண்டு இலண்டனுக்கு அம்மையாரை வரவழைத்தோம். இங்கும் சிறந்த சொற்பொழிவுகள் வழங்கினார். அந்த நாட்கள் மறக்கமுடியாதவை. 1973ஆம் ஆண்டு தென்னிந்தியாவில் திருவிடைமருதூரில் நடைபெற்ற திருமுறை கருத்தரங்கிற்கு தலைமை வகித்தார். 1978ஆம் ஆண்டு அம்மையாரின் கந்தபுராண சொற்பொழிவு நூலுக்கு சாகித்திய மண்டல பரிசு கிடைத்தது. 1980ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆரணியில் நடைபெற்ற மங்கையர் மகாநாட்டிற்குத் தலைமை வகித்தார். 1985ஆம் ஆண்டு மணிவிழா சிறப்பாக நடைபெற்றது. 1991ஆம் ஆண்டு இலங்கை அரசு அதிஉயர் கலாசூரி விருது வழங்கி கௌரவித்தது. யாழ்ப்பாண பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவித்தது. இப்படியாக அதிஉயர் விருதுகள் அன்னையை தேடியே வந்தன. துர்க்காபுரம் மகளிர் இல்லம் அம்மையாரின் தாய்மைச் சேவையை உலகிற்கே பறைசாற்றி நின்றது. அம்மையாரின் வாழ்வு எமக்கு ஓர் அற்புத வழிகாட்டல் என்றே சொல்ல வேண்டும். யாழ்மண்ணில் சமய வரலாற்று ஆசான்களின் பட்டியலில் அமரர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் பெயர் முதன்மையாக நிலைத்து நிற்கும் என்பது திண்ணம்.

**தில்லை நாயகம் அருள்தாஸ்**
பொருளாளர் இலண்டன் சிவன்கோயில்



லண்டனில் தரமான தங்கத்துக்கு தாரணி ஜுவல்லர்ஸ் – வெம்பிளி

## எங்கள் விளம்பர உறுதுணையாளர்களை ஆதரியுங்கள்

ஐரோப்பிய, மத்திய கிழக்கு நாடுகளில்
24 மணி நேரமும் ஒளிரும் தமிழ் தொலைக்காட்சி

**DEEPAM TV**

EAST WEST BROADCAST LTD
UNIT 1, EBURY BUSINESS CENTRE
161-163, STAINES ROAD
HOUNSLOW, MIDDLESEX TW3 3JB, U.K.

செய்திகள் காலைக்கதிர் சின்னத்திரை தொடர்கள்
அரசியல் ஆய்வு விவரணங்கள்
மகளிர் – சிறுவர் நிகழ்ச்சிகள் நீங்களும்
நாங்களும் இணையும் பல நிகழ்ச்சிகள்
இசை நடன நிகழ்ச்சிகள்
புத்தம் புதிய திரைப்படங்கள்

Tel : +44 (0) 208 8146565
Fax : +44 (0) 208 8141144
Email : info@deepamtv.tv
Web : www.deepamtv.tv

உங்களுக்குத் தேவையான சகல விதமான
மளிகைப் பொருட்கள், இலங்கையிலும்,
இந்தியாவிலும் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட
உணவுப்பொருட்கள், கடல் உணவு வகைகள், மரக்கறி வகைகள்,
பழ வகைகள், மேல்நாட்டு குடிவகைகளுடன் இலங்கை பியர்
வகைகளையும் சகாய விலையில் பெற்றுக்கொள்ள
ஒரே இடம். ஆடியோ, வீடியோ,
சீ.டி. வி.சீ.டி ஆகியவற்றை விற்பனைக்கும்
வாடகைக்கும் பெற்றுக்கொள்ளலாம்.

# CHANDRA

Super Market &
Off Licence

**COST CUTTER**

Tel : 020 8333 8680

209 - 211 Bromley Road
Catford
London SE6 2PG

புதிய பொலிவுடன் லூசியத்தில்

# கற்பகம்

சகலவிதமான மரக்கறி வகைகள், பழவகைகள் உட்பட சகல
தேவைகளுக்கும் நாடவேண்டிய ஒரே இடம்

# KATPAGAM



36, Loampit Hill Lewisham
London SE 13 7SW
Tel : 0795763 9738
Fax : 020 8311 9304



துரித பணமாற்றுச் சேவை
ரஞ்சன்
இலண்டன்

# AMBAAL
Jewellers



176 Upper Tooting Road
London SW17 7ER
Tel : 020 8672 9955
Fax : 020 8672 7097

784 London Road
Thornton Heath
Surrey CR4 6JB
Tel : 020 8689 8293
Fax : 020 8684 0323



# Anthoorium

*World of Designs*

Jewellery & Textiles

For your Jewels, Gems, Sarees,
Costumes, Musical Instruments & Gift Items
please visit us...

வைரத்தாலிக்கொடி அத்துடன்
பழைய தங்கத்தில்
புதிய டிசைன் நகைகள் செய்து கொள்ள நாடுங்கள்...
இத்துடன் வாத்தியகருவிகளும்
விற்பனைக்கு உண்டு

102, B Burlington Road
New Malden, Surrey KT3 4NT
Tel : 020 8942 8001 Fax : 020 8942 8007
Web : www.anthoorium.co.uk
Email : sales anthoorium.co.uk

# ARM ASSOCIATES

*For all types of insurance*

We have been helping our client to find competitive and quality policies for over 35 years. How have we been able to stay in the insurance business for so long? Well that is quite simple. We understand our clients and provide them with the personal service they need.

- ✓ We deal with all types of insurance under one roof
- ✓ There are no proposal forms to complete
- ✓ Quotations and cover provided over the phone
- ✓ We are able to offer exclusive rates
- ✓ We also offer Independent financial advice on:

Pensions
- Mortgages I Life cover
- Investments I Savings
- Inheritance Tax Planning

ARM Associates is the one stop of all your financial needs

P. SRINIVASAN (CertPFS)
and
SUHAN SRINIVASAN (DipPFS, Economics BSc)

Tel : 020 8763 2221 Fax : 020 8763 2220
32 Abbots Lane, Kenley, Surrey, CR8 5JH
Email : sri@srinivasan.co.uk Web : www.srinivasan.co.uk

Tooting-ல் தமிழருக்கான கடை

# Prime Food & Wine

118, Tooting High Street London SW 17 ORR

**Tel : 020 8682 3777**

நம்மவரின் வசதிக்கேற்ப
எமது கடையை
விஸ்தரித்துள்ளோம்.
உங்களுக்கு வேண்டிய
சகல தெரிவுகளும் எங்கள்
புதிய காட்சியறையில் உள்ளன.






இலண்டனில் தரமான தங்கத்திற்கு

# PATHMINI

*Jewellers*

892 London Road Thornton Heath
Surrey CR7 7PB

**Tel : 020 8665 1111**

Fax : 020 8664 8999



Tooting Diamonds-ஐ
Mithus Jewellery-யுடன்
இணைத்துள்ளோம்

MITHUS
Jewellery

322-324 London Road
Croydon CRO 2TJ
**Tel : 020 8683 1756**
Fax : 020 8683 1792

லண்டனில் **No 1**
தமிழ் மொத்த வியாபாரக் கடை

Vaani Cash & Carry

பிரமாண்டமாய் ! பிரமாண்டமாய் !

தயாரிப்பாளரிடம் இருந்து
நேரடியாக
வாடிக்கையாளருக்கு

தொலைபேசி இலக்கம்
0208 668 7648

